மகாகவி
ஜி. சங்கர குருப்பு

எம். லீலாவதி



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

மகாகவி ஜி. சங்கர குருப்பு

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி : நேஷனல் மியூசியம். புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

மகாகவி
ஜி. சங்கர குருப்பு

ஆங்கில மூலம்:

எம். லீலாவதி

தமிழில்:

இரா. மதிவாணன்

சாகித்திய அக்காதெமி

MAHAKAVI G. SANKARA KURUP - Tamil Translation by R. Madhivanan of M. Leelavathi's monograph in English. Sahitya Akademi, 1995. Rs. 15.

முதல் வெளியீடு 1995

ISBN 81-7201-646-8

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்

ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி - 110 001.

விற்பனை

'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி - 110 001.

'குணா பில்டிங்' 304---305, அண்ணா சாலை.
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா - 700 053.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய் - 400 014.

109, ஜே.ஸி. சாலை, பெங்களூர் - 560 002.

விலை ரூ. 15

ஒளி அச்சு : சிஸ்டெக், சென்னை - 2

அச்சிட்டோர் : உதயம் ஆப்செட், சென்னை - 2

உள்ளடக்கம்

முன்னுரை

கவிஞன் என்பவன் கருவில் திருவுற்றவன்; உருவாக்கப்படுவனல்ல. இதைப் போன்றே இலக்கியமரபு இயற்கையாய் உருப்பெறுவது; மக்களின் சேர்ந்த முயற்சியால் வெளிப்பட உருவாக்கப்படுவதன்று. மலையாளக்கவிதை வரலாறு ஓராயிரம் ஆண்டுகள் உட்பட்ட வரையறையுடையது. தொடக்கத்தில் திரவிடமரபார்ந்த பாடல்கள் ஆரிய மரபாந்த சமற்கிருதப்பாடல்கள் என்னும் இரண்டின் பின்னற் கோலமாகவே மலையாள இலக்கியம் முகம் காட்டியது. நாட்டுப்பாடல்களும் இலக்கிய வகைப்பட்ட பாட்டுகளும் திராவிட மரபார்ந்தவை. வட்டாரமொழியும் அதிற்கலந்த வடமொழிச் சொற்களுமாக அமைந்த மணிப்பிரவாள நடையில் உருப்பெற்ற மலையாளமொழியும் இலக்கியமும் கங்கையும் யமுனையும் கலந்த கூடுதுறையாகப் புலவர்களால் வருணிக்கப் பட்டது. எனினும் மலையாளப்பாட்டும் சமற்கிருதம் கலந்த மணிப்பிரவாளமும் தொடக்கத்தில் இருவேறு நீரோடைகளாகவே கருதப்பட்டன.

நாட்டின் நாலாப்புறங்களிலும் சீரார்ந்த நாட்டுப்பாடல்கள் பொது மக்களின் கிளை மொழிகளில் அவர்களுடைய உணர்வுகள், ஏக்கங்கள், நம்பிக்கைகள், துயரங்கள், வேண்டுகோள்கள், விருப்பங்கள் ஆகியவற்றை மிகவும் எளிய நடையில் தெள்ளத்தெளிய வெள்ளப்பெருக்காக வெளிப்படுத்தின. அவை தொன்மை சான்ற பாட்டு வடிவும் இதிகாசக்கதைத் தொடர்பும் ஆக இருமரபும் தழுவி, பொது உலகப்பாட்டென்றே அழைக்கப்பட்டன. தொடக்க நிலையில் சொல்லாட்சிகள் முற்றிலும் தொன்மைத் திராவிடமாகவே இருந்தன. தொடக்க நிலையில் மக்களிடைபுகும் சமற்கிருதக்கலப்புக்கு எதிர்ப்பும் தயக்கமும் நூலாசிரியரிடை சிற்றளவில் ஆங்காங்கு காணப்படினும் மணிப்பிரவாள நடை சற்று வேகமாக வளரத்தலைப்பட்டது. மணிப்பிரவாளம் மேட்டுக் குடிகளின் மெருகுகூட்டிய மொழி நடையாக அரும்பிப் பின்னர் இதிகாசக்கதைகளின் வாயிலாகப் பொதுமக்களிடையிலும் மலர்ந்தது.

16, 17 ஆம் நூற்றாண்டுகளில் மலையாள இலக்கிய உலகில் ஒப்பிலாக் கவிஞராகவும் சமயநெறி பரப்புநராகவும் சீர்த்திருத்தச் செம்மலாகவும் ஒளிவீசித்திகழ்ந்த எழுத்தச்சனின் பாட்டு இலக்கியப் படைப்புகள் முழுமையாக மணிப்பிரவாள நடையில் அமைந்தன. அடுத்தகாலகட்டத்தில்

பாட்டு இலக்கியத்தை உள்ளொடுக்கிய தோற்றத்துடன் மணிப்பிரவாளநடை செல்வாக்கு பெற்றுவிட்டது. பாட்டு இலக்கியத்துக்கும் மணிப்பிரவாளத்துக்கும் இடையே இருந்த இடைவெளி படிப்படியாக குறையத் தொடங்கி எவ்வித முன்முயற்சியுமின்றி இரண்டும் ஒன்றில்ஒன்று கரைந்துவிட்டன.

எழுத்தச்சனின் பாடல்களில் அவர் காலத்தில் வாழ்ந்தவர்கள் படைப்புகளிலும் வாழ்வியலின் தெய்வீகக்கூறுகளும் பத்திச்சுவையும் உணர்ந்தறியமுடியாத உயரத்தை எட்டிப்பிடித்த ஆண்மீக பக்திதோய்வுகளும் பின்னிப்பிணைந்து 16, 17 ஆம் நூற்றாண்டின் இலக்கியமாக இழையோடி யிருந்தன. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் குமரன் ஆசானும் அவரைச் சார்ந்தாரும், அண்மைக்காலத்தில் ஜி. சங்கர குருப்பும் அவரைச் சார்ந்தவரும் கூட அத்தகைய இலக்கியம் படைத்தனர். இதனை பாட்டு வகைமையைச் சார்ந்த பண்ணார்ந்த பாடல் இலக்கியத்தொடர்ச்சி எனலாம். இத்தொடர்ச்சியில் ஊடாடியவற்றை மணிப்பிரவாள இலக்கியம் இரண்டறக்கலந்ததன் புதிய பாங்கு எனலாம். இந்நூற்றாண்டில் உரோமானிய இலக்கியத்தின் தாக்கத்துக்கு ஈடுகொடுத்து அதற்குத்தக தன்னைப் புதிய வகையில் இது வடிவமைத்துக் கொண்டது. மேலைநாட்டு இலக்கியத்தரத்தின் உயரத்தை எட்டிப் பிடிக்க முயன்றபோது மணிப்பிரவாளம் திராவிடச் செய்யுள் மரபாகிய இசைவழக்கத்தை விடாமல் பற்றிக்கொண்ட பாங்கை சங்கரகுருப்பின் பாடல்களில் சிலவற்றில் காணமுடிகிறது. எளிமையும் திராவிடப் பாடல் பாங்கும் மணிப்பிரவாளநடையில் உணர்வும் தெளிவும் வேண்டுமிடங்களிலெல்லாம் பொங்கிக் கரைபுரள்வதை உணரமுடிகிறது. வடிவமைப்பு, மரபு பேணுதல், கருத்து நுட்பம் எண்ணப்பாங்கு, கற்பனை, கற்பனைக் கோட்பாடு ஆகியவற்றில் சங்கர குருப்பு இந்தியத்தன்மையை இழையோடவிட்டிருக்கிறார். அதனால் இவர் பாடல்களை இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பது எளிதாகிறது.

கேரளத்தில் தோன்றிய சங்கராச்சாரியார் தன் கல்விவன்மையால் சர்வக்ஞ பீடத்தைச் செம்மைப்படுத்தியவர் என்பதைவிட அக்காலத்து இந்திய கற்றோருக்குரிய நன்மதிப்பைத் தன் புதிய தத்துவங்களால் வளர்த்துக் கொண்டார் என்பதே சீரிய பொருத்தமாகும். இதைப்போன்றே சங்கர குருப்புக்கு அவருடைய பாடல் திறத்தாலும் கருத்துச்சிறப்பாலும் ஞான பீடத்தின் விருது கிடைத்தது என்று சொல்வதைவிட மாநில மொழி வேறுபாடுகளைக் கடந்து இந்திய மரபுச் செல்வத்தைத் தாராளமாகத் தன் பாடலில் அவரால் விரிவாக்க முடிந்தது என்பதே முற்றிலும் உண்மையானது. தேசிய இலக்கிய நீரோட்டத்தில் இந்திய மரபினைப் புதுப்பித்துத்துலங்கச் செய்ய பெரிதும் பாடுபட்டிருக்கிறார்.

இந்நூலின் பக்கங்களில் கேரள மாநிலத்தில் ஒதுங்கியபடி வாழ்ந்த புலவர் ஒருவர் புகழ் பெற்ற இந்திய தேசியக் கவிஞராக உயர்ந்த வியத்தகு சாதனையை எடுத்துச் சொல்ல இத்தொகுப்பு நூல் முயன்றிருத்தலைக் காணலாம். கடிய முயற்சியும் அறைகூவலையேற்று அடைந்த வெற்றியும் தன் ஊக்கத்தால் தானே உயர்ந்த உழைப்பாளியின் திறமைக்கு அளவு கோலாகிறது.

கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் ஏற்பட்ட சமூக நிகழ்ச்சிகள் மாந்தர் இனத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் துன்பத்தில் உழலும் எளியவர்களின் கனவுகள், எதிர்பார்ப்புகள் ஆகியவை சங்கர குருப்பின் இதயத்தில் தோற்றுவித்த துடிப்புகளை அவருடைய பாடல் வரிகள் காலங்காலமாக எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. அந்தத் தூய உள்ளத்தின் அன்பும் அருளும் இரக்க உணர்வின் குன்றாத அருவிப்பெருக்கும் எல்லார் உள்ளங்களிலும் அலைபாயச் செய்த புதுமையைக் கண்டு வியப்புற வேண்டியுள்ளது.

1. புலவர் உருவானார்

1901ஆம் ஆண்டு சூன் திங்கள் முதல் நாளில் இந்துமத மெய்யியல் மேதை ஆதிசங்கரர் பிறந்த கேரளத்துக் காலடி என்னும் ஊருக்கு அருகிலுள்ள நயத்தோடு எனும் சிற்றூரில் ஒரு நடுத்தர குடும்பத்தில் ஜி. சங்கர குருப்பு தோன்றினார். இவருடைய தந்தையார் நெல்லிக்கப்பில்லி வாரியத்து சங்கர வாரியார்; தாயார் வடக்கினி வீட்டு இலட்சுமிகுட்டி அம்மாள். இருவீட்டார்க்கும் தொழில் முறையிலும் மரபு வழியிலும் நயத்தோடு கோயிலுடன் தொடர்பிருந்தது. நயத்தோடு சங்கர நாராயணன் கோவில் தோன்றியது தொடர்பான ஒரு பழங்கதை உண்டு.

வைணவ சமயத்தைச் சார்ந்த, சேரமன்னனின் ஆசிரியர் ஒருவர் சைவ சமயத்துக்கு மாறிவிட்டார். அவருடன் வாக்குவாதத்திலிறங்கிய மன்னன் கடுஞ்சினமுற்று உடைவாளை உருவி, தன் ஆசிரியரை வெட்டி வீழ்த்தினான். அடுத்தகணமே அவன் மனம் கலங்கியது. ஆத்திரத்தால் அறிவிழந்து ஆசிரியரைக் கொன்று விட்டதற்காகப் பெரிதும் வருந்தினான். அந்தப் பாவத்தை போக்கிக் கொள்வதற்காகச் சிவன் திருமால் இரு தெய்வங்களும் ஒரே கருவறையில் வீற்றிருக்கத்தக்க கோயிலைக் கட்டினான். அந்தக் கோயில்தான் இது. இந்தக் கதையின் வரலாற்றுப் பின்னணி எதுவாயினும் கேரளத்து மக்கள் சமயப் பொறையுடையவர்கள் என்பதை இது காட்டுகிறது. ஏனைய தென்னிந்தியப் பகுதிகளில் நடைபெற்றதைப் போன்ற சமயப்பூசல்கள் கேரளத்தில் நடைபெறவில்லை. ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் வெவ்வேறு சமய வழிபாட்டு முறைகளை மேற்கொண்டு ஒற்றுமையாக வாழ்வதைக் காணமுடியும். சமயப் பகைமையால் உதிரஞ்சிந்திய வரலாற்றுப் பின்னணி இருந்தாலும் நயத்தோடு கோயில் மக்களின் பொறுமைக்கு நிலைத்த சின்னமாக நின்று நிலவுகிறது.

ஜி. சங்கர குருபபு ஆழ்ந்த சமயப்பற்று நிரம்பியவர். பத்திச்சுவை ஊற்றெடுக்கும் அவருடைய பாடல்கள் சிலவற்றை அவர் கொணடிருந்த தெய்வப்பற்றின் ஆழத்திற்குச் சான்றாகக் கூறலாம். அவருடைய வீடு கோயிலுக்கு அருகிலிருந்தும் ஒரு காரணமாகும். நாம் நம் தோலின் நிறத்தை மாற்றிக்கொள்ள முடியாதது போல நம் மனப்பாங்கும் நம்மையும் மீறி மரபு, வழிமுறை, சூழ்நிலை, இளமைக்காலப்பயிற்சி ஆகியவற்றால் கட்டுண்டு தனக்கென ஒரு வடிவத்தை அமைத்துக் கொள்கிறது.

கேரளத்தில் இந்துமதம் எண்ணிறந்த உட்பிரிவுகளையும் கிளைப்பிரிவுகளையும் கொண்டிருந்ததால் அதன் தாக்கம் மக்கள்

வாழ்விலும் காணப்பட்டது. சங்கர குருப்பின் பெற்றோர் தாய்வழியிலும் தந்தை வழியிலும் வெவ்வெறு உட்பிரிவுகளைச் சார்ந்தவராயிலும் வாழ்வியல் பொருளியல் வகைகளில் சமமான தகுதியுடையவராயிந்தனர். கேரளத்துத்தாய் வழிக்குலமுறையில் தாய்மாமனே குழந்தையின் பாதுகாப்பாளன் ஆகிறான். குழந்தைகளின் வளர்ப்புப் பொறுப்புகளில் தந்தைக்குச் சட்டப்படியும் சமூக அமைப்பின் படியும் அவ்வளவு உரிமை இல்லை. சங்கர குருப்பு குழந்தையாக இருக்கும்போதே தந்தை காலமாகிவிட்டார். தந்தையின் உறவினர் எவரும் சங்கர குருப்பின் வளர்ப்பிலும் படிப்பிலும் அக்கறை காட்டவில்லை, தாய்மாமனாகிய திரு. கோவிந்த குருப்பே அனைத்துப் பொறுப்பையும் ஏற்கவேண்டியிருந்தது. சங்ககுருப்பின் பெயரிலுள்ள முன்னெழுத்து 'ஜி' தாய்மாமனாகிய கோவிந்த குருப்பின் முன்னெழுத்தாகவே அமைந்தது.

கேரளத்தில் இவரை எல்லோரும் வெறும் 'ஜி' என்றே குறிப்பிடுகின்றனர்.

திரு. கோவிந்த குருப்பு கணியத்தில் வல்லவர். தன் மருமகனும் அதையே பயில வேண்டும் என்று விரும்பினார். ஆனால் அந்தச் சிறுவனோ இலக்கியத்தில் அளவிறந்த ஈடுபாடு காட்டினான். வானகத்து விண்மீன்களின் பக்கம் சிறுவனைத் திசைதிருப்ப முயன்றும் அவன் அதே விண்மீன்களைக் கவிதையாக்கும் கலையை வளர்த்துக்கொண்டான். வானத்து மீன்களின் கணக்குகள் இவன் மனத்தில் பதியவில்லை. ஆயின் வானம் அவன் உள்ளத்தைக் கவர்ந்தது. ஒளிசிந்தும் விண்மீன்களின் கொள்ளையழகு அவருடைய பாடல்களில் களிநடம் புரிகிறது. இயற்கைத்தாயின் மடியிலமர்ந்த அச்சிறுவன் மனத்தில், விண்மீன் பதித்த வானக் கம்பளம், பயிரினம், உயிரினம், அமைதி தவழும் சிற்றூர், பசுமையான வயல்கள், அருவியும் பறவைகளும் எழுப்பும் இன்னோசை, மணங்கொழிக்கும் எழில்மலர்கள், காற்றும் மழையும் கொட்டும் தாளத்திற்கேற்பக் கிளையசைத்துத் தலையசைக்கும் மரஞ்செடி கொடிகள் ஆகியவை இன்ப அனுபவக் கோலங்களை அழகுற ஆழப்பதித்துவிட்டன. அவன் தனிமையில் விடப்பட்ட குழந்தையானான். தாய்மாமனின் கண்டிப்பு அவனை வெளியில் போகவோ பக்கத்து வீட்டுக் குழந்தைகளுடன் பழகவோ விளையாடவோ விடவில்லை. சிறுவனின் அதிசயிக்கத்தக்க நுண்ணறிவு தாய்மாமனுக்கும் வலிய எதிர்காலக் கனவுகளை உண்டாக்கியது. சமற்கிருதப் பாடத்திட்டங்களை தீட்டி அவனுக்குத் தானே கற்பித்தார். அது சிறுவனுக்கு அதிகமான சுமை. பாடம் முடிந்ததும் விளையாட நேரமிருந்தாலும் பிற குழந்தைகளுடன் சேரமுடியவில்லை. கற்பனை வளமும் கவிதையூற்றும் கொண்ட சிறுவன் தனியாக விளையாட வேண்டிவந்தது. இயற்கையே அவனுக்கு உயிருள்ள விளையாட்டுத் தோழனாயிற்று. எளிய மலர்களே

உலக மக்களின் கண்ணீரையும் இன்ப உணர்புகளையும் என் உள்ளத்தில் எழுப்பவல்லன என்று ஆங்கிலக் கவிஞன் வோர்டுசுவொர்த்து பாடினான். மலர்களும் விண்மீன்களும் அத்தகைய உள்ளங்களுடன் உரையாட முடியும். 'ஜி ' யிக்கு அவை உற்ற நண்பர்களாயின. அவருடைய பாடல்களில் அவற்றின் தோய்ந்த உணர்வுகளைக் காணலாம். மலர்களும் விண்மீன்களும் அடிக்கடி அவர் பாடல்களில் தாமே முன்வந்து அவர் உள்ளக் கிடக்கையை எடுத்துரைக்கின்றன. அவை ஒப்புக்காக இடம் பெறவில்லை. குழந்தைப் பருவத்திலிருந்து அவை அவரோடு ஒன்றிப்போய்விட்டன.

சமற்கிருதத்தில் அடிப்படைக்கல்வி தந்த பிறகு கணியத்தில் பாடம் தொடங்க வேண்டும் என்று தாய்மாமன் நினைத்தார். அந்த நேரத்தில், ஒரு தொடக்கப் பள்ளி அப்பகுதியில் தொடங்கப்பட்டது. அப்பள்ளியின் ஆசிரியர் திரு கேசவபிள்ளை அச்சிறுவனைத் தன் பள்ளியின் சேர்க்குமாறு தாய்மாமனை மனம்மாற்றினார். அந்த ஆசிரியர் கவிநலம் கனிந்தவர். கணிதத்தைக் கவிதையில் குழைத்துத் தருபவர். அந்தப் பாங்கு சிறுவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. சிறுவனின் கவியுள்ளத்தை ஆசிரியரும் எளிதில் விளங்கிக்கொண்டார். அக்காலத் தொடக்கப்பள்ளியில் நல்ல கவிதைகள் பாடத்திட்டத்தில் இடம் பெற்றிருந்தன. சிறுவனின் உள்ளத்துக்கிசைந்த இனிய உலகம் தோற்றம் தந்தது. பாடங்கள் வெறுப்புத் தராமல் விருப்பமூட்டின. கல்விகற்கும் ஆர்வம் கரைகடந்தது. அங்குள்ள தொடக்கப் பள்ளிப் படிப்புக்குப் பிறகு இரண்டு கல் நடந்து செல்லக்கூடிய மற்றொரு பள்ளியில் சேர்ந்தான். அங்கு அவனுக்குக் கல்வி ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் தருவதாய்மைந்தது. பாடல்கள் உள்ளத்தில் பீறிட்டெழுந்தன. அட்சர சுலோகம் என்னும் நான்கடிப் பாடல் ஒப்புவிக்கும் போட்டி அக்காலத்தில் மாணவர்க்குக் களிப்பூட்டும் பொழுதுபோக்காய் இருந்தது. மனப்பாடத்திறனை வளர்த்துக்கொள்ள இது பெரிதும் உதவியது. நண்பகல் உணவும் மறந்து நடையாய் நடந்து மனப்பாடப் பாடல்களைப் பாடிக்கொண்டிருப்பதே அவர்களுடைய வழிநடைக்களைப்புக்கு மருந்தாய் அமைந்தது.

நல்ல பாடலும், பாடத்தில் இடம் பெற்றால் பொதுவாக வெறுப்புத் தட்டுவதுண்டு. ஆயின் 'ஜி' யிக்கு பாடங்கள் சலிப்புத்தட்டாததால் வகுப்புக்குச் செல்லாத நாளே இருக்கவில்லை. உடல்நலக்குறைவுற்ற போதும் வகுப்புக்குச் சென்று மயக்கமடைந்து விழுந்த போதுதான் அவருக்கு மஞ்சள் காமாலை நோய் தாக்கியிருப்பது தெரியவந்தது ஒரு பெரிய பையன் அவரை வீட்டுக்குத் தூக்கிச் சென்றான். ஒரு சுலோகத்தில் மிகுந்த நன்றியுணர்வோடு இதனைக் குறிப்பிட்டிருக்கிறார். இதுவே முதல் கவிதை குடும்ப நண்பர் ஒருவர் அதைப் பார்த்து இது நல்ல கவிதை என்றார். இது அவர் நான்காம் வகுப்பில் படிக்கும் போது எழுதப்பட்டது.

நடுநிலைப்பள்ளிகள் அக்காலத்தில் அரிதாகச்சில இருந்தன. ஆறுகல் தொலைவுக்கு அப்பால் ஆலப்புழையில் ஒரு ஆங்கிலப்பள்ளி இருந்தது. தொலைவும் செலவும் அங்குச் சேரத் தடையாயின. அதனால் அது கைவிடப்பட்டது. அடுத்து ஏழுகல் தொலைவிலுள்ள பெரும்பாவூரில் மலையாளம் வாயிலாகக் கற்பிக்கும் பள்ளி இருந்தது. அங்குச் செலவும் குறைவு, தொலைவு ஒன்றே இடர்ப்பாடாக இருந்தது. அதனால் தொடர்ந்து சமற்கிருதம் படித்து கணியத்தைக் கற்பது ஒன்றே மாற்றுவழியாக இருந்தது. தாய்மாமனும் அதை வற்புறுத்தினார். இது சிறுவனின் உள்ளத்தை வருத்தியது. ஒருநாள் காலையில் கோயிலில் வழிபட்டுக்கொண்டிருந்த போது சிறுவன் வாய்விட்டு அழத் தொடங்கினான். அப்பொழுது அங்குக் கோயிலுக்கு வந்த அவனுடைய தாயார் தன் மகன் அழுவதைக் கண்டு பதைத்துப்போனார். காரணம் என்ன என்று அவருக்கு விளங்கிவிட்டது. அந்த இடத்திலேயே அவன் அடுத்து மேற்படிப்பைத் தொடர்வது என்று முடிவெடித்தார். தாய்மாமனை இசையத் செய்தார். பெரும்பாவூர் பள்ளியிலிருந்து இரண்டரை கல் தொலைவிலுள்ள குடும்ப நண்பர் ஒருவர் வீட்டில் சிறுவனைத் தங்க வைக்க ஏற்பாடாயிற்று.

அடுத்துப் படிப்பைத் தொடரவும் ஆக்கத்திறனும், அறிவு நுட்பமும் வளரவும் ஒளிமயமான நல்வாய்ப்புகள் வந்தமைந்தன. உடன்பயிலும் மாணாக்கர் சிலர் கவிதை புனையும் ஆற்றல் பெற்றிருந்தனர். ஆசிரியர்கள் கூர்த்த மதியினராயிருந்தனர். அக்காலத்தில் ஏழாம் வகுப்பு வரை படித்திருந்தால் கூட ஆசிரியராகும் வாய்ப்பு இருந்தது. எனினும், 'ஜி' யிக்கு மேலும் இரண்டாண்டுகள் படித்துத் தாய்மொழியில் உயர்நிலைத் தேர்வு எழுதும் ஆசை கிளர்ந்தது. தாயாரும் இசைவளித்தார். அப்போதுதான் புகழ்பெற்ற ஆசிரியர்களாகிய திரு. எம். என். நாயர், திரு.ஆர்.சி. சர்மா போன்ற பெருமக்களிடம் பாடங்கேட்கும் வாய்ப்பு கிட்டியது. பொருளாதாரக் கூறுகளைக் கற்பித்த எம்.என். நாயர் பொதுவுடமை க்ருத்துகளை மாணவர்களின் உள்ளத்தில் விதைத்தார். இது கவிஞரின் உள்ளத்தில் பொதுவாழ்வு தொடர்பான நீடுநிலைத்த உணர்வினை தோற்று வித்தது. 1930 ஆம் ஆண்டளவில் உலகத்து அறிவாளர்களிடையில் பொதுவுடைமைக் கருத்துக்கள் பரவத் தொடங்கின. சமுதாய முன்னேற்றக் கருத்துகளை அந்தக் கால கட்டத்தில் கேரளத்தில் பரப்பிய முன்னணி அறிஞர்களுள் 'ஜி' யும் ஒருவர்.

சமற்கிருத அறிஞர் ஆர்.சி.சர்மா கவிதைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். அவருக்கு வங்காள மொழி தெரிந்திருந்ததால் இரவீந்திரநாத தாகூரிடம் மனம் பறி கொடுத்திருந்தார். அவருடைய பாடஞ்சொல்லும் பாங்கு காந்த ஆற்றல் கொண்டதாய் விளங்கியது. கவிஞருக்கு அந்தக்

காலம் மகிழ்ச்சிபொங்கும் பொற்காலமாக இருந்தது. தன் படிப்பிற்கு இடையூறில்லாத வகையில் கவிதை எழுதும் இதமான பயிற்சியில் ஈடுபட்டார்.

அவருடைய படிப்புச் செலவுச்சுமையை அவருடைய தாயாரே ஏற்க வேண்டியிருந்தது. தன் நகைகளை அடகு வைத்தும் கூட செலவு செய்ய நேர்ந்தது. வி.எச். தேர்வில் தேறிய பிறகு பதினைந்து ரூபாய் சம்பளத்தில் ஆசிரியப்பண் ஒன்று 'ஜி' யிக்கு கிடைத்தது. அதுவே அக்காலத்தில் அடிப்படைத் தேவைகளுக்குப் போதுமான சம்பளமாக இருந்தது. தன் பணியைச் செய்தவாறே தனியாகவே உயர்நிலை சமற்கிருத தேர்வுக்குப் படிக்கத் தொடங்கினார். 1927ஆம் ஆண்டில் மலையாள வித்துவான் தேர்வு எழுதி மாநிலத்திலேயே முதல் மதிப்பெண் பெற்று தேர்ந்தார். தனியார்பள்ளிகளில் மூன்றாண்டு பணிபுரிந்த பின் 1921 ஆம் ஆணடில் கொச்சி அரசுப்பணியில் தன்னூரிலிருந்து 70 கி.மி. தொலைவிலுள்ள திருவில்வமலையில் மலையாள மொழி ஆசிரியராகப் பணியேற்றார். எழிலார்ந்த காடுகளும் மலைத்தொடர்களும் சூழ்ந்த அந்த அழகிய பள்ளத்தாக்குச் சிற்றூர் கவிதைபொங்கும் தனிமை உணர்வுக்கு இனிமையூட்டுவதாக அமைந்திருந்தது அந்தக் காலத்தில் வெளிவந்துகொண்டிருந்த புகழ்பெற்ற பருவ இதழ்களில் அவருடைய கவிதைகள் நல்ல பெயரைத் தேடித்தந்தன. முதல்கவிதைத் தொகுதியான சாகித்திய கவுத்தகம் 1923 ஆம் ஆண்டில் அதனுடைய இரணடாம் மூன்றாம் நான்காம் பகுதிகள் முறையே 1925, 1928, 1931 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன. 1925 ஆம் ஆண்டில் தன் ஊருக்கருகிலுள்ள சாலக்குடிக்கு மாறுதல் கிடைத்தது. அவ்வூரும் அதே இயற்கைச் சூழல் நிலவியது. ஆற்றங்கரையோரம் அமைந்திருந்த சிறிய வீடு கவிதை நோன்புகளுக்குத் தகுந்த தனிமைத் தவச்சாலையாயிற்று.

1927 ஆம் ஆண்டில் ஓராண்டு காலத்திற்குள் வித்துவான் இடை நிலை இறுதிநிலைத் தேர்வுகளை எழுதித்தேறிய சிறப்பும் நல்ல கவிதை புனையும் ஆற்றலும் கண்டு மேலதிகாரிகளும் குறிப்பாகப் பள்ளிக் கல்வித்துறை இயக்குநரும் 'ஜி'யின் புலமைக்குப் பெருமதிப்புக் கொடுத்தனர். பணிமூப்பு ஒன்றையே அளவுகோலாகக் கருதாமல் புலமைத்தகுதியை மட்டும் கருதி திருச்சூரிலுள்ள ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் பள்ளிக்கல்வி இயக்குநரால் 'ஜி' ஆசிரியராக அமர்த்தப்பட்டார். ஆசிரியர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியராக அமர்வதற்குரிய பெரும்புலமை அவருக்கு அமைந்திருப்பதை திருவில்வமலைப் பள்ளிக்கு நேராய்வு செய்யச் சென்றிருந்த போதே பள்ளிக்கல்வி இயக்குநர் நன்கு அறிந்திருந்தார்.

ஆங்கிலத்தில் முறையான கல்வியறிவு பெறுவது வற்புறுத்தப்படாவிடினும் ஆங்கிலஅறிவைப் பெருக்கிக் கொள்வதில்'ஜி' பேரார்வம் காட்டினார். உயர்நிலைப் பள்ளி நூலகத்தில் இருந்த ஆங்கிலக்கவிதைத் தொகுதிகளும் திறனாய்வுத் தொகுதிகளும் அவருக்கு இணைபிரியாத தோழர்களாயின. மில்டன் எழுதிய இழந்த சொர்க்கத்தின் ஒரு பகுதியை மொழி பெயர்த்திருப்பத்திலிருந்தே அவருடைய தன்னம்பிக்கையின் உயர்ச்சி புலப்படுகிறது. ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் பணியாற்றுவது அவருக்கு மனநிறைவும் ஊக்கமும் ஊட்டியது. முதுகலைத் தேர்வுக்கு இணையான பி. ஓ. எல் தேர்வு எழுதுவதற்கு இருந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டார். அதில் ஒரு தேர்வுத்தாளுக்குரிய பாடம் திறனாய்வாகும். மேனாடுகளில் வளர்ந்திருந்த இலக்கியத் திறனாய்வு நுட்பங்களையெல்லாம் முறையாக அறிந்துகொள்ளவும், அத்தகு நுட்பங்களை இலக்கியம் கற்பிக்கும் போதும் முதுகலை இலக்கியத்திறனாய்வுகளை மதிப்பிடும் போது தக்க வகையில் பயன்படுத்திக்கொள்ளவும் இது நல்வாய்ப்பாக அமைந்தது. தேர்வுக்காக ஆழமாகப் படிக்கத் தொடங்கியகியதன் விளைவாக புதிய கோணங்களில் படைபிலக்கியங்களை உருவாக்குவதில் அவர் ஈடுபாடு கொண்டார் என்று தோன்றுகிறது. மிக அருமையான கவிதைத் தொகுதிகள் இக்காலகட்டத்தில் வெளிவந்துள்ளன. இதனைக் கவிதை உலகத்தின் விந்தைமிகு புதிய படலம் தொடங்கிய காலம் என்றும் குறிப்பிடலாம். "பாரசீகத்தின் ரோசாத் தோட்டம்" என்னும் பாரசீகக் கவிதைத் தொகுதியும் பிட்ஜ் ஜெரால்டின் மொழிபெயர்ப்பான "ரூபியாத்தும்" இத்தகையன. உள்ளூறிய, தவிர்க்க முடியாத ஊக்கம் ரூபியாத்தை மலையாளத்தில் மொழி பெயர்க்கத் தூண்டியது. அது எபிகூரியன் கொள்கையைக் கண்டதால் ஏற்பட்டதன்று. கலசம் நிறைந்த மது' என்னும் சொல்லாட்சி ஒரு இனந்தெரியாத உந்துதலையும் இயற்கை கடந்த அனுபவத்தையும் ஊட்டியது. கற்பனைத் திறனிலும், தத்துவ உணர்விலும் பகுத்தறிவிலும் அறிவியல் நோக்கிலும் உமர்கயாமை மிஞ்சக்கூடிய மேதாவி எவரும் 11 ஆம் நூற்றாண்டில் கவிஞராகப் பிறக்க வில்லையென்றே ஒருமுறை குறிப்பிட்டு எழுதினார். மாந்தரின் நிலையாமை, விதியின் வலிமை, உலகப்படைப்பின் புதிர் ஆகியவை மனத்தை வருத்துகின்றன. உண்மைகளை அறியத்துடிக்கும் ஆர்வம் தணியாத தாகமாக அவர்பாடல்களில் பெருக்கெடுத்தோடுவதைக் காணமுடிகிறது. அந்த உணர்ச்சிப்பெருக்கு கலசம் நிறைந்த மதுவின் விளிம்பில் உள்ளாழ்ந்து தளும்பி நிற்கும் ஆன்மாவின் இனிமை மூச்சாக மணம் வீசியது. அது இதுவரை நுகர்ந்தறியாத நறுமணம், மலையாளத்தில் உள்ளக்கிளர்ச்சியூட்டும் இன்னிசை தழுவிய புகழ்பெற்ற ஓடப் பாட்டு யாப்பமைதியில் இதனை 'ஜி' மொழியாக்கம் செய்தார். உலக அனுபவங்களில் தோய்ந்த ஊக்கமும் இயற்கை கடந்த உணர்வுகளும் ஆக இந்த இரண்டின்

புதுமை நிறைந்த கலப்பாக இது வெளிவந்தது. இலக்கியச்சிந்தனை கொண்ட இளையதலைமுறையினரின் உள்ளங்களை இந்நூல் கொள்ளை கொண்டது. இது மொழிபெயர்ப்பு என்று தோன்றாத வகையில் புதிய படைப்புப் போலவே நல்ல மொழியாக்கமாகப் போற்றப்பட்டது. இதற்கு வியாச லஹரி என்று பெயரிடப்பட்டது. இதனைப்படித்து உள்ளம் பறிகொடுத்த சர்தார். கே.எம். பணிக்கர், ஹாபிசின் நூல்களையும், பிட்ஜ் ஜெரால்டின் மொழி பெயர்ப்பு நான்காம் பதிப்பையும், உலகக்கவிதைகளின் தொகுப்பு நூலையும் கவிஞருக்குப் பரிசாக அனுப்பி வைத்தார். அத்தகு பெருமகனாரிடமிருந்து வந்த பரிசளிப்பு கவிஞரைப் பெருமைப்படுத்துவனவாயின.

பாரசீகக்கவிதைகள் பெரிதும் மனங்கவர்வனவாக இருந்ததால் அவற்றுள் சிலவற்றின் நலம் பாராட்டி நீண்ட கட்டுரைகள் எழுதினார். "ராக்குயிலுகள்" என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டு அவை நூல்வடிவம் பெற்றுள்ளன.

இயற்கையாக ஊற்றெடுக்கும் படைப்பாற்றல் பட்டத் தேர்வுகளுக்காகப் படிக்க வேண்டிய நேரத்தை விழுங்கத் தொடங்கியது. பல்கலைக்கழகத்தின் பட்டம் பெறாததால் அது ஒரு நிலைத்த குறையாக அமைந்தது. தொழில்துறையில் பல பதவியுயர்வு வாய்ப்புகளை இழக்க வேண்டியதாயிற்று. ஜவகர்லால் நேருவின் காலத்தில் நடுவண் அரசின் அமைச்சராக விளங்கிய பனம்பள்ளி கோவிந்த மேனன் கூட கல்லூரிப் பேராசிரியர் பதவி கவிஞர் 'ஜி'யிக்கு கிடைக்கச் செய்வதற்காக முயற்சி செய்தார். 'ஜி' க்குப் பட்டப்படிப்பு இல்லை என்ற குறை இருந்தாலும் அவருக்கு விதிவிலக்கு தரலாம் என்று கோவிந்த மேனன் பரிந்துரை செய்தார். இது பின் நாட்களில் நடந்த நிகழ்ச்சியாகும்.

2. கடமையில் தோய்ந்த உள்ளம்

உலகியல் நோக்கு, தெய்வப்பற்று, அற்புதங்களில் ஆழ்ந்த வியப்புணர்வு. ஆகியவை ஒருவரிடம் கவிதை ஆற்றல் முகிழ்த்தெழுவதை முன்கூட்டி அறிவிக்கும் உணர்வுக்களங்களாகும். நுகரத்தக்க இயற்கையழகுகளும், நுகர்வுக்கு எட்டாத பேரண்டத்திலுள்ள பருப்பொருள் நுண்பொருள் சுற்றெல்லைகளின் பின்னணியில் மிளிரும் நுண்ணாற்றலும் கவிஞனை வியப்பொடு கலந்த அச்ச உணர்வில் ஆழ்த்திவிடுகின்றன. போற்றிப்பாடும் உணர்வு மேலோங்கிவிடுகிறது. 17 ஆம் அகவையின் போது 'ஜி' இயற்றிய 'சாகித்திய கௌதுகம்' என்னும் நூலின் முதற்பகுதியிலுள்ள ஒரு போற்றிப்பாடலில் இயற்கையை வியந்து போற்றியிருப்பதைக் காணலாம்.

இதோ பரந்த மேகங்களின் கருநீலப்பலகையில்
இயற்கைப்பெண் வரையும் ஓவியங்களை ஏனோ
அழிக்கிறாள்மீண்டும் வரைகிறாள்
எண்ணங்கவரும் பன்னிற வானவில்லின் நிறங்கள்
அவளுடைய கைவளையல்களில் சுடரொளி வீசுகின்றன
இயற்கை எழிலாகிய உனக்கு என் நன்றி கலந்த வணக்கங்கள்.

இத்தகைய போற்றிப்பாடலை தன் விடலைப் பருவத்திலேயே பாடியபோது மலையாளக்கவிதையின் வளர்ச்சி எந்நிலையிலிருந்தது என்று அறிந்தால் தொட்டடுத்து நிலவிய முன்னிலக்கியப்பாங்கு பற்றிய பார்வை அப்போதைய இலக்கியப் பாங்கை உணர்வதற்கு உதவிபுரியும்.

இந்த நூற்றாண்டில் தொடக்கத்தில் கவிதை பற்றிய ஒரு மேலோட்டமான கருத்தே நிலவியது. அந்த அமைதி பொருந்திய யாப்பில் எழுதுவதெல்லாம் பாட்டாக இருந்தது. அதிலும் எதுகை அமைந்திருப்பது கட்டாயமான அமைப்பாயிற்று. பொங்கி வரும் கவிதைப்பெருக்கை அடைத்துக் கொண்டிருந்த இத்தகைய கட்டுப்பாடுகள் தகர்ந்து போயின. புதிய மாற்றங்களைத் தூண்டும் இயற்கையுணர்வின் உந்துதல்கள் மேலோங்கின. கற்பனை வளம் வறண்டுபோயிருந்த கவிதைப் பாலைவனத்தில் பசுமையான கற்பனைச் சோலை குலுங்கும் கவிதைப்படைப்புகள் தோற்றுவிப்பதற்கான போர் தொடங்கியது. கவிதைப் புரட்சிக்கான முதல் போர் முழக்கம் எழுப்பியவர் ராசராசவர்மா. இவருக்குப் பின்பு முழக்கமிட்ட மும்மூர்த்திகள், குமரன் ஆசான், வள்ளத்தோல் நாராயண மேனன், உள்ளூர் பரமேசுவர ஐயர் ஆகியோர் ஆவார். உணர்ச்சி பொங்கும் சொல்லாட்சிகளும் சமூகச்சிந்தனைகளும் புதுமைக்கவிதைகளின் அடையாளங்களாயின.

யாப்பிலக்கணமே பாட்டிலக்கணம் என்னும் நகைப்புக்குரிய காலம் மாறியது. கவிதை பயன் கருதியது என்னும் காலம் மலர்ந்தது. மனிதமனப் பாங்கில் புரட்சிகரமான மாற்றம் விளைக்கும் பொறுப்புணர்வு வளர்ந்தது. இந்துக்களின் சாதிப்பிரிவுகள் இந்திய சமுதாயத்தின் சீரழிவுகளுக்குக் காரணமாயிருப்பதைக் குமரன் ஆசான் சுட்டிக்காட்டினார். முதலில் தெய்வப்பாடல்களை இயற்றினார். இந்துசமயத்துக்குரிய தெய்வங்களை வணங்குபவராக இருந்தது போலவே புத்தமதக்கருத்துகளிலும் மனம் பறிகொடுத்திருந்தார். தத்துவக் கோணத்தில் அவருக்குப் புத்தரும் சிவனும் ஒன்றாகத் தோன்றினர். எழிலார்ந்த கற்பனைக்கோணத்தில் அவருக்குத் தாகூரும், செல்லியும் ஒன்றாகத் தோன்றினர். அவருடைய கவிதைகளில் தத்துவம், காதல், துறவு, அனைத்துயிர்கள் மீதும் கொண்ட அன்பு, ஆகியவை ததும்பி வழிந்தன. உலகவாழ்வின் உயரிய கடமைகளும் அவற்றை உதறித்தள்ளும் துறவுக்கருத்துகளும் இடம் பிடித்துக்கொண்டன. சாதிக்கொடுமைகளையும் எதிர்க்க நேர்ந்தது. பொருளாதார முரண்பாடுகள், தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் மனக்குமுறல்கள் ஆகியவற்றை உள்ளபடி தன் பாடல்களில் வெளிப்படுத்தினார் அவருடைய பாடல்களில் மிளிர்ந்த காதல் சுவைகளும் கூட நாட்டுப்பற்று, பழங்காலத்து மேன்மைகள், முன்னோர் அறிவுச செல்வத்தைப் போற்றும் நன்றிக்கடப்பாடு, தொன்மரபு போற்றுதல் ஆகியவற்றை ஊடகமாகக் கொண்டு வெளிப்பட்டன.

தனக்கு முன்பு வாழ்ந்த குமரன் ஆசானின் தெய்வப்பற்றும் வள்ளத்தோலின் உலகியல் கருத்துகளும் 'ஜி'யின் பாடல்களில் வழிவழி வந்த மரபுச் செல்வங்களாக மிளிர்ந்தன. மாந்த இனத்தை வழிநடத்தும் இயல்பான மூதறிவுச் செம்மல்களாகக் கவிஞர்கள் விளங்க முடியும் என்பதை நிலைநாட்டிய இருபெரும் கவிஞர்களின் எண்ணங்களை இவர் கவிதைகள் மொண்டுநின்றன. அப்போது இலக்கியச் சுவையில் தோய்ந்த இளைய தலைமுறையினரைத் தாகூரின் கீதாஞ்சலி வெகுவாகக் கவர்ந்ததன் காரணம் அது நோபல் பரிசு பெற்ற நூல் என்பதைவிட, இந்திய ஆன்மீக மரபின் வெளிப்பாட்டுக்கு அது ஒரு எடுத்துக் காட்டாக விளங்கியது, என்பதே பொருந்தும். தாகூரின் போற்றிப்பாடல்களில் தன்னலமற்ற அருளுள்ளம் கொண்ட அழியா இயற்கை அன்னையின் ஏற்றமே எங்கும் காணப்பட்டது. உலகியல் அறிவும் ஆன்மீகச்செறிவும் கலந்து ஆசானின் பாடல்களிலும் ஜியின் பாடல்களிலும் கற்பனை நலமாகக் கனிந்தது. முன்னவர் நெடும்பாடல்களிலும் பின்னவர் தனித்த இசைப்பாடல்களிலும் இதனை வெளிப்படுத்தினர். தாகூரின் பாடல்களிலும் செல்லியின் காதல்கவிதைகளிலும் ஒரு புதிய கோணத்தைக் காணும்வரை ஆசான் வெறும் தெய்வப் பாடல்களை மட்டும் எழுதினார். 'ஜி'யின் தொடக்கக்கால நூல்களில்

தெய்வப்பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன என்றாலும் அவை கடவுளைப் பல்வேறு அவதார வடிவங்களில் வழிபடாமல் எங்கும் நிறைந்த உண்மையின் வடிவமாகப் போற்றுகின்றன.

இறைவா நீ உண்மையின் வடிவம்
வேதங்கள் என்னும் வானத்தில் மின்னும் விண்மீன் சுலோகம்
என் கண்ணுக்கு அந்த விண்மீன் ஒளி புலப்படா விட்டால்
நான் குருடனிலும் வேறுபட்டவன் அல்ல என அழுவேன்
இந்த அழுகைக் கண்ணீர் என்றும் பெருகட்டும்
என் கண்ணீரைத் தண்ணீராகப் பாய்ச்சி தங்கள்
அருளாகிய மரங்களைப் பசுமையாக என்றும் வளர்ப்பேன்
அம்மரங்களின் நிழலில் அமர்ந்து தங்கள் புகழ் பாடுவேன்
அதுவே என் பிறவியெடுத்ததன் பயன்
பேரண்டங்களை வானவெளியில் ஓட்டும் தேரோட்டியே என்
மனம் என்னும் தேரையும் தெய்வப்பற்று என்னும் பாதையில்
செலுத்துவாயாக.

நாளடைவில் கற்பனை வடிவங்கள் தெய்வவழிபாட்டின் வகைகளாயின. உலகப் பற்றும் தெய்வபற்றும் கலந்து உருவழிபாடுகளாயின. தெய்வ வழிபாட்டு வளர்ச்சிப் படிகளில் தாகூர் பாடல்களின் தாக்கத்தைக் காணலாம். உளவியல் அடிப்படையிலான காரணத்தையும் இதில் காணக்கூடும். அறிவியல் தொழில் நுட்பம் ஆகியவை வளர்ந்த இந்தப் பகுத்தறிவு நூற்றாண்டில் மாந்தரின் மனச்சான்று பகுத்தறிவுகள் கொண்டு எதனையும் நுணுகிப்பார்ப்பதாயிற்று. பல்வேறு மாந்த வடிவங்களிலும் அரைமாந்த வடிவங்களிலும் வழிபடப்பட்ட தெய்வங்கள் மக்களின் மனத்திலிருந்து மறையத் தொடங்கின. எனினும் முழுமுதல் கடவுளை எவரும் எளிதில் மறுக்கவியலவில்லை. மரபார்ந்த நெறியில் தொடக்க நிலை தெய்வப்பற்றைப் புலப்படுத்தும் பாடல்கள் தோன்றின. இவ்வாறு அடிப்படை தெய்வ உணர்வுகள் ஒருவகையில் ஒடுக்கப்பட்டன. ஒடுக்கப்பட்ட உணர்வுகள் கனவுகளிலும் ஆக்கம் தரும் கற்பனைகளிலும் மறுவடிவம் கொள்ளத் தொடங்கின. தாகூரின் புதிரான தெய்வப்பற்று இதுவே. இதில் என்றும் அழியா ஆண்மையும் பெண்மையும் உட்கூறுகளாயின. சில அஃறிணைப் பொருள்களும் கூட மாந்தரின் வடிவில் அவருடைய கற்பனையில் உருப்பெற்றன. "புல்லாங்குழல்" என்னும் கவிதை இதற்குச் சான்றாகும். இந்தச் சிறிய நாணற்புல்லாங்குழலை மலைமுகடுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் எடுத்துச்சென்று என்றும் இறவாத புதிய சந்தங்களை வாசிக்கின்றாய் என்னும் வரிகளை கீதாஞ்சலியிலும் காணலாம். கவிஞர் தன்னையே புல்லாங்குழலாக நினைக்கிறார். 'ஜீ'யின் ஓடக்குழல் (புல்லாங்குழல்) என்னும்

சிறிய பாடல். இதேபாணியில் இறைவன்பால் கொண்ட பற்றையும் தன்னையே காணிக்கையிட்டுக்கொள்ளும் பாங்கையும் புலப்படுத்துகிறது.

ஓ புனித ஆன்மாவே
நீ வாழ்வு என்னும் பண்ணை இசைக்கிறாய்
உள்ளிருந்து இயக்கும் உன்ஆற்றல் காலத்தையும்
இடத்தையும் கடந்து செயற்படுகிறது
கண்டறியா மண்ணுலகில் பிறந்த
அழியத்தக்க இந்த வெற்றுடலை உள் அருளால்
உன் மூச்சுக்கு இனிமை சேர்த்து
நாதம் எழுப்பும் புல்லாங்குழல் ஆக்கிவிட்டாய்
இந்த வெற்றுநாணற்குழல் இப்போது உயர்திணை
அஃறிணைப் பொருள்கள் அனைத்தையும்
இசையின்பத்தில் மூழ்கடிக்கிறது
உலகத்தில் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும்
தேவகானம் இசைக்கும் உலகங்களின் தலைவனே
நீ என் உள்ளத்தில் இசையாகவே குடியிருக்கிறாய்
நான் உன்னைத்தவிர வேறு யாரை என் உயர்ந்த
பாட்டில் அடைத்து களிப்புறப்பாடமுடியும்?

இதைப்போன்றே மலர்கள், மேகம், காற்று ஆகியவற்றைப் பாடிய பாடல்களும் தனித்தன்மை வாய்ந்தவை.

ஓ வானமே! அழகின் நீலக்கோலத்தலைவனே
உனக்கு ஆதியும் அந்தமும் இல்லை.
உன் இதயத்தின் விரிவே இந்தபேரண்டத்தின்
அகலம்; அதிலிருந்து அன்பு மழைபொழிகிறது. இனிய
அருள்துளிகள் பனித்துளிபோல் இந்த மலரின் மீது படிகிறது
இதற்காகவே நான் தவங்கிடந்தேன் எனலாம்.

மலர், காதல் வயப்பட்ட மங்கை, புலவனின் தன்னுணர்வு ஆகியவை தெய்வீகமான அன்புணர்வில் தோய்ந்து இன்புறும் காட்சி போற்றிப் பாடலாகத் தொடர்கிறது.

உன் கை பெருங்கடலை நிரப்பும்
கொடைத்திறம் வாய்ந்தது
அது இந்தச் சிறிய மலருக்குக் கொடையளிக்க
எப்பொழுதும் தயங்காது
ஒரே ஒரு துளி போதும்; மலரின் வாய் நிரம்பிவிடும்
ஓ அற்புதச் சுடரொளிக்குன்றே!

இந்த துளி தரையில் பட்டு மாசடையும் முன்
இதனை நீயே மீட்டெடுத்துக்கொள்ள
வேண்டுகிறேன்.

மேகத்தின் பாடலில் சூரியனை வானப்பரப்பில் தோன்றும் சுடரொளியாகவும், மேகங்களை அதன் அடியார்களாகவும் கற்பனை செய்து பாடியிருக்கிறார். 'என்றும் விழிப்பூட்டுவேன்' என்னும் பாடலில் பல்வேறு எழில் ததும்பும் அருட்கொடைகளை நிலத்தின் மீது பொழியும் இறைவனைப் போற்றுகிறார். இறைவன் இருளையும் ஒளியையும் விளையாட்டாகப் படைக்கிறார். உலகத்தின் படைப்பாற்றலாக விளங்கும் கதிரவன் ஆணும் பெண்ணுமாக உயிரினங்களை தோற்றுவிக்கிறான். உலகங்களை அன்பு என்னும் கயிற்றால் கட்டி பம்பரமாகக் சுழலச்செய்யும் கடவுள் காலத்தையும் உண்டாக்குகிறார். 'சயன பிரதக்கின' என்னும் பாடலில் உலகத்தின் சுழற்சியையும் பல அண்டங்கள் வானில் வலந்திரிதலையும் கோயில் வழிபாடு செய்யும் சடங்குகளாக வருணித்துக்காட்டுகிறார். கோயில்களில் அடியார் நெடுங்கிடையாகப் படுத்து உருண்டுகொண்டே கருவறையை வலஞ்சுற்றி உருள் தண்டம் செலுத்துவதை ஒப்பிட்டுக் காட்டுகிறார். உலகம் தன்னைத் தானே சுற்றிக்கொண்டே ஓராண்டில் சூரியனை வலம் வருகிறது. நிலவுலகம் சூரியனை வலம்வந்து வணங்குகிறது என்று மட்டும் கூறுகிறார். இந்த உவமை அறிவியலை முழுமையாகக் காட்டுகிறது. நோக்கங்களிலும் இதன் மூலக்கருத்து நம் உள்ளத்தைக் கவர்கிறது. மேகம் என்பது நீராவியின் இறுகிய தோற்றம். வடமொழியில் 'பஸ்ப' என்னும் சொல் நீராவியையும் கண்ணீரையும் குறிக்கும் இந்த உவமை. மேகத்தின் வடிவமைப்பையும் துயரத்தினிடையிலும் இன்பம் காணும் உண்மையான அடியார்களின் மனப்பாங்கையும் ஒருசேரப் புலப்படுத்துகிறது. மேகம் தன் வயிற்றில் படைப்பாற்றலைக்குறிக்கும் மின்னல் என்னும் நெருப்பை வைத்துக் கொண்டிருக்கிறது. விரிவானத்தின் விளிம்பிலுள்ள விண்மீன்கள் சிரிப்பதற்கென்றே பிறந்தவை. மேகங்கள் அழுவதற்கென்றே பிறந்தவை. மேகங்கள் வலம் வரும் வீதிகளில் விண்மீன்களின் புன்னகை விரைவில் மறைந்து விடுகிறது. ஆனால் மேகங்களின் கண்ணீருக்கும் ஆழ்ந்த செயலுண்டு. மூழ்குவோரின் பாவத்தைக்கழுவும் கங்கையாற்றின் நீரைப்போல் உலக உயிர்களின் மனத்தாகத்தைத் தணிக்கிறது. மேகத்திடையில் தோன்றும் இடிமுழக்கம் இறைவன் வெற்றிவருகையை அறிவித்து முரசின் அதிர்வாகக் கேட்கிறது.

காட்டுமல்லிகை யென்னும் பாடல் தன்னைப்பற்றியே அவர்பாடும் பாடலுக்கு மற்றொரு எடுத்துக்காட்டு ஆகும். அடக்கம், நாணம், பணிவு, அறியாமை, துயரம், பக்தி, இறைவனுக்குத் தொண்டாற்றும் ஆர்வம் ஆகிய

தனது இயல்புகளை மல்லிகைப்பூவின் இயல்புகளாக உருவகித்திருக்கிறார். பேராற்றலின் வடிவமாகச் சூரியனை வழிபடுகிறார். தான்மட்டும் அல்லாமல் ஏனைய பொருள்களும் ஆர்வத்துடன் வழிபடுவதைச் சுட்டிக்காட்டுகிறார். காட்டுமலர்கள் கூட இத்தகையனவென்பதை அவர் குறிப்பிட மறக்கவில்லை. உயர்ந்தவரெல்லாங்கூட பணிவோடு இறைவனைப் போற்றிப்பாடும் நிலையில் அவர்களுக்கு நிகராக காட்டில் ஓர் மூலையில் வளர்ந்த எளிய மல்லிகைப்பூ கைகூப்பி வணக்குவது வியப்பல்லவா? இறைவனை வழிபட்டு வரவேற்க தூய்மையான மனந்தவிர வேறு இடம் தேவையில்லை. பனிநீர்ப்பூவின் (ரோசா) மணமும், நீரோடைகளின் பின்னணி இசையுமாக இவையே அடக்கமும், ஆழந்த அன்பும் புலப்படுத்தப் போதுமானவை.

உயர்ந்த அன்பையும் பக்தியுணர்வையும் வெளிப்படுத்துவதற்கு 1933 ஆம் ஆண்டில் இவர் வெளியிட்ட "சூரிய காந்தி" யெனும் கவிதைத்தொகுப்பு இத்தகைய பாடல் வரிசையில் அமைந்த மற்றொரு நூலாகும். நாணமும் அடக்கமும், ஆராக் காதலும், குழந்தை மனப்பாங்கும் அமைந்த எளிய குடும்பத்துப் பெண் போல சூரியகாந்தி மலரை உருவகித்திருக்கிறார். சூரியனிடத்தில் பெருங்காதல் கொண்ட சூரியகாந்தி மலர், தாழ்ந்த குலப்பெண். நாடாளும் அரசகுலத்தில் பிறந்த மிகப்பெரும் அரசகுமாரனை மணக்க முயன்று அந்த முயற்சியில் காதல் தோல்வியுற்று, அவல முடிவிற்குத் தன்னைப் பலியாக்கிக்கொள்ளும் பெண்ணின் நிறைவேறாத காதலைப் படம் பிடித்துக்காட்டப்படுகிறது. அவன் தனக்கு எட்டாதவன் என்று தெரிந்து, அந்த இரகசியத்தைத் தனக்குள்ளே அடக்கிக் கொள்கிறாள். "கிட்டாதாயின் வெட்டென மற" என்னும் பழமொழி அந்தப்பேதைப் பெண்ணிற்குத் தெரியவில்லை. காலைப்பொழுதில் அவன் கதிரொளி அவள்மேல்பட்டதும் அவன் வினவுகிறான்.

"இளைய நங்கையே நீயார்?"
"விழியிமைக்காது என்னை ஏன் உற்றுப்பார்க்கிறாய்?
வானில் ஊர்ந்து செல்லும் என் தேரை வைத்தவிழி
வாங்காமல் பார்க்கிறாயே நான் எவ்வளவு உயரத்தில்
இருக்கிறேன் என்பது உனக்கு தெரியவில்லையே?
எனக்கு ஏதேனும் சொல்ல நினைக்கிறாயா?"

இதைக்கேட்டு அவளுக்கு வெட்கம் மேலிட்டது. உடனிருந்த அடக்கமும் சேர்ந்துகொள்ளவே, அவளால் ஒருசொல் கூட மறுமொழியாகச் சொல்லவியலவில்லை. விவரம் அறியாத இந்த உலகம் அவளுக்குச் சூரியகாந்தி யென்று பெயரிட்டது. அவளைப்பழித்துரைப்பது போன்றே தென்பட்டது.

நறுமணமற்ற மலர். ஆனால் வடிவில் பெரிது. இதுவே முரண்பாடல்லவா? வெட்கப்பட்டு முகத்தை மறைத்துக்கொள்ள முயலுகிறாள். கண்களில் ததும்பும் கண்ணீர்த் துளிகளைப் பனித்துளி போன்று வெளியுலகிற்குக் காட்டிக் கொள்கிறாள். அவள் நடுங்குகிறாள். அதற்கு வீசும் தென்றல்தான் காரணமென்று உலகம் நம்புகிறது.

"என்னுடைய காதல் என்னுள் அடக்கமாகவே இருக்கட்டும்.
முடியுமானால் அவன் இதை உன்னிப்பாக உணர்ந்துகொள்ளட்டும்"

வெட்கம் மிகுந்த அவள் முகத்தின் வாயிலாக அவள் மனத்திலுள்ளதை அவன் அறிந்து கொள்கிறான். அதுவே ஒரு காந்தத்தின் ஈர்ப்பாகிறது. இருவரும் பிரிய நேரிடும்போது அந்திப்பொழுதில் சூரியனின் முகம் சிவக்கிறது. சூரியகாந்திமலரைத் தொட்டுக்கொண்டிருந்த கரங்கள், வலிய பின்னுக்கு இழுத்துக்கொள்கிறன. அவளுக்கு இது பேரானந்தத்தை தந்திருந்தது. இனி இரக்கமற்ற இரவு காத்திருக்கிறது என்பதும் அவள் அறிந்த ஒன்றே. நன்றிப்பெருக்கினால் அவள் தலை சாய்த்துக்கொண்டாள். திடுமென கும்மிருட்டு என்னும் வஞ்சனைக்காரன் உள்ளே வந்தான். இரவெல்லாம் தங்கியிருந்து பொழுது புலர்கையில் முகம் வெளுத்துக்கண் சிவந்து அவன் யாரையோ தேடிக்கொண்டு வெளியே புறப்படும் போது அந்த அழகிய மலர் வாடி வதங்கிக்கீழே கிடப்பதைக் கண்டு அவன் துயரம் தாளாது கண்ணீர் சிந்துகின்றான். நாமிருவரும் சந்திக்கவும் இல்லை. காதல் வயப்படவுமில்லை. அதற்குள் இறந்து விட்டாயே என்கிறான்.

மற்ற மலர்களைப்பாடும் பாடல்களிலும் ஆணாக உருவகிக்கப் படும்பொழுது அன்பு பொழிவதாக இருக்கிறதேயன்றி, துயரம் விளைப்பதாக இல்லை. சூரியகாந்தி யென்னும் பாடலில் மண்ணுலகக் காதல் வெளிப்படையாகத் தெரிகிறது.

இருவரிடமும் தோன்றிய காதலன்பு, பாட்டாக மலரும்போது, மனத்திரையைக் கிழித்துக்கொண்டு உலகியல்புகளை வெளிப்படையாக உணர்த்துகின்றது! அடிமனத்தில் தோய்ந்துள்ள உணர்வுகளையும் துயரத்தில் முடிந்த காதல் ஏமாற்றத்தினையும் புலப்படுத்துகின்றது! விண்மீனிடத்துக் காதல் கொண்ட விட்டில் பூச்சியின் பழங்கதையொன்று இதற்குச் சான்றாகும். இதயத்தைச் சுண்டியிழுக்கும் ஏமாற்றமும், துயரமும் தோய்ந்த காதல்கதை அது! இதற்கு முந்தைய காதற்பாடல்கள் உலகியற்கை கடந்த இனியதூய அன்பைப் புலப்படுத்துகின்றன.

"உண்மையைச் சொல்லிவிடு. நீ என்னைப் பெயரிட்டு அழைக்கும் போது
அந்தச் சொல்லுக்கு அத்தனை சுவையேற்படுவது ஏன்?
உண்மைச் சொல்லி விடு. நீ என்னைத் தொடும்போது
நான் மலரைப்போல் மென்மையடைந்துவிடுவது ஏன்?"

இந்த மெல்லிய உணர்வு, குளிர்மை, இனிய எழிற்சுவை கூட்டும் இதயத் தாலாட்டு ஆகியவை தெய்வீக அமுதமழையாகப் பிற்காலப் பாடல்களில் ஆனந்த மூட்டுகின்றன. இருப்பினும் சில பாடல்களில் இந்திய மக்கள் அனைவருக்கும் அறிமுகமான கண்ணனும், இராதையும் தெய்வீக பந்தத்தைக்காட்டாது வெறும் மனிதர்களாகக் காட்சியளிக்கின்றனர். காதல் பிச்சைக்காரன் எனும் நாட்டிய நாடகத்தில் மழைக்கால முன்னிலவு நேரத்தில் யமுனையாற்றங்கரையில் உள்ள ஒரு குடிசையின் முன்புறத்தில் கண்ணனின் வரவினை எதிர்பார்த்து, இராதை ஆவலுடன் காத்திருக்கிறாள். அவனுடைய புல்லாங்குழலின் இனிமை அவள் உள்ளத்தைப் புல்லரிக்கிறது. அந்த அமுத கானத்தைச் செவி மடுத்தவுடன் அவளுடைய பாதங்கள் நிலத்தில் நிலைகொள்ளவில்லை! அவள் தன்னை மறந்தாள். அவளுடைய கனவில் ஒரு பிச்சைக்காரன் தோன்றினான். அவன் வேறொன்றுங் கேட்கவில்லை. பாட்டொன்று பாடினான். போய்விட்டான். அவன் பாடியது காதல் பாட்டு. அவளுடைய கூந்தல் அழகைக்காணவே அவன் ஒரு கணம் அங்கு தோன்றினான். மாறு வேடத்தில் வந்த பிச்சைக்காரன் யார்? என்னும் வினா அவள் உள்ளத்தில் எழுந்தது. பிருந்தாவனம் என்னும் மற்றொரு பாடலில் தெய்வீகப்புல்லாங்குழலில் வெளிப்படும் இன்னோசை இந்திய மக்களின் மனத்தை இன்பக்கயிற்றால் பிணித்து, மதிமயங்கச் செய்கிறது என்பதை விளக்குகிறது. கண்ணனும் இராதையும் சந்தித்த ஆற்றங்கரையின் மணல்திட்டுகளைப் பார்த்து, முன்பனிக்கால இரவுகள் ஆனந்தக் கண்ணீர்பொழிவதுண்டு.

அற்புதமான விரிவானத்து எல்லைகளின் பரப்பும், ஆதியந்தங்கடந்த காலத்தின் நீரோட்டமும் மனித அறிவுக்குப் புலப்படாத புதுமைகளாக இருக்கின்றன. இவை கவிஞரின் உள்ளத்தில் அளவுகடந்த வியப்பும், கவர்ச்சியும், இனதெரியா அச்சவுணர்வும் தோன்றுதற்குக் காரணமாயின. தொடக்க காலத்தில் எழுதிய சில பாடல்கள், மனிதனால் புரிந்து கொள்ள முடியாத அற்புதங்களையும், சோகங்களையும், வருத்தங்களையும் வெளிப் படுத்திக் காட்டின. இத்தகைய அறிவின் புலப்பாடான பாடல்கள் மனிதனின் உள்ளுணர்வைக் கவர்வதில்லையென்னும் கூற்று ஏற்கத்தக்கதன்று. உபநிடதங்கள் தோன்றிய இந்த நாட்டில் இத்தகைய பாடல்களுக்கு என்ன பெயரிட்டு அழைத்தாலும் அவை புதுமையைக் குறிப்பிடுவன அல்ல. முனிவர்கள் பலர் தோன்றிய இந்த மண்ணில் விரிந்த வானமும், நெடிய காலமும், கவிதையார்வத்தைத் தூண்டுவதில் எக்காலத்திலும் பின்னடைவதில்லை. ஜியின் இத்தகைய மற்றொரு பாடலில் பிருகத்தாரண்ய உபநிடதத்தில் காணப்படும் ஒரு கருத்தைத் தழுவி, காலத்தை உருவத்தில் பெரிய, மிக உக்கிரம் வாய்ந்த, குதிரையாக உருவகப்படுத்தியுள்ளார். "காலம்" என்னும் அந்தப்பாடலில் அந்தக் குதிரை மின்னல் வேகத்தில் தாவிப்பாய்கிறது!

எதிர்ப்பட்ட அனைத்தையும் காலால் மிதித்துச் சாகடிக்கிறது. இந்தக் கொடிய குதிரையைக் கட்டவிழ்த்துவிட்டது யார்? எப்போது? எந்தத்திசை நோக்கி? என்பது யாருக்கும் தெரியவில்லை. வட்டமிட்டபாதையில் அது வளைந்து வளைந்து ஓடிக்கொண்டிருக்கிறது. பல்வேறு நெடிய ஊழிகளில் குழந்தைகளான விண்மீன்கள் விதிர்விதிர்த்து உற்றுப்பார்க்கின்றன. கதிரவனும் நிலவும் காலக்குதிரையின் காலடிமுத்திரைகள். அதன்வாயில் நுரைதள்ளும் போது எழுந்த குமிழிகளே நாள்கள். வேகமாகப் பாய்ந்து வரும்போது விளைந்த தூசிப்படலமே இருளடைந்த இரவுகள். அந்த ஓட்டத்தில் மலைகளெல்லாம் மடுவுகளாகவும் அலைகடல்களெல்லாம் சமவெளிகளாகவும் மாறிவிடுகின்றன. மனித வாழ்க்கையும் அதன் மிதிபாடுகளிடமிருந்து தப்பமுடியாது. புகழ் மாளிகைகள் எல்லாங் கட்டாந்தரைகளாகிவிட்டன. மதங்களென்னும் எக்காளக்கருவிகளும், துத்தாரிகளும் ஓசையடங்கிவிட்டன. அரசர்களின் மணி மகுடங்கள் பொடிப்பொடியாகத் தகர்ந்து போயின. பேர்ரசுகளெல்லாம் பிடிசாம்பலாயின. மனிதத் தலைகளை அறுவடை செய்த போர்வாள்கள் எல்லாம் துருப்பிடித்துப் போயின. அறிவையும் அனுபவத்தையும் மேடைகளில் முழங்கி விற்பனை செய்த நாள்களெல்லாம் செயலிழந்தன. கவிஞர்களின் எழுதுகோலும் ஓவியனின் தூரிகையும், அவர்கள் மிகப்பெருமையோடு இயற்கையை வடித்துக்காட்டிய வார்ப்படங்களும் எங்கோ போய் மறைந்துவிட்டன. சினந்து, நெற்றியைச் சுருக்கி ஆயிரக்கணக்கான கப்பல்களையும் மண்ணாக்கிய மாவீரர்களெல்லாம் தாமும் பிடிசாம்பலாகி மறைந்துவிட்டனர். தங்க நாணயங்களை எண்ணிய விரல்கள் அழுகிப்போய்விட்டன. கண்மூடித்தனமான இந்த அழிவுக்கூத்தை என்னென்பது!

மேலைநாட்டவர்கள் அண்மைக்காலத்தே வளர்ந்த அறிவியலின் துணைகொண்டு உலக உயிர்களில் மாந்தன் தலைமையிடத்தைப் பெற்றிருப்பதையும், இந்தப் பேரண்டப் பரப்பில் நிலவுலகம் மாந்த வாழ்க்கைக்கு மையமாக இருப்பதையும் கண்டறிந்திருக்கிறார்கள். ஆனால் இந்தியத்தத்துவ மரபு நினைவிற்கெட்டாத நெடுங்காலத்திலிருந்தே இயற்கையின் நியதியில் மனிதனுக்கென்று தனித்த சிறப்பிடம் எதுவுமில்லையென்றும், இயற்கையின் கடுஞ்சீற்றக் கொடுமைகளில் எவ்வுயிர்க்கும் ஏற்றத்தாழ்வு காட்டப்படவில்லை யென்பதும் கருத்திலிருத்தி வருகின்றது. வேதங்களிலும், உடநிடதங்களிலும் கூறப்பட்ட மரபார்ந்த உண்மைகளை இவருடைய "காலம்" போன்ற கவிதைகள் வலியுறுத்துகின்றன. "நாள்" என்னும் கவிதையில் காலம் என்பது பேரண்டங்களின் வடிவிலமைந்த மிகப்பெரிய மரமாகக் காட்டப்படுகிறது. "அழிவின்மை" யென்னும் மற்றொரு பாடலில் எண்ணிறந்த இதழ்களைக் கொண்ட பூதாகரமான தாமரை மலராகக் கூறப்படுகிறது.

எத்தனை இதழ்கள் உதிர்ந்துவிட்டனவோ யாருக்குத் தெரியும்?
இனிமேல் எத்தனை இதழ்கள் விழப்போகின்றனவோ?
உதிர்ந்து விழும் இதழ்களால் மூடப்பட்டு அந்த நிழலின்
அடியில் ஊர்ந்து செல்லும் சிறு புழுக்களைப்போல
மனிதர்கள் காணப்படுகிறார்கள்.

1920 ஆம் ஆண்டளவில் இந்திய நாட்டின் வரலாறு குழப்பம் மிகுந்ததாக இருந்தது. விடுதலைப் போராட்ட உணர்வு சூடுபிடித்திருந்தது. அறிவாளிகளும் எழுத்தாளர்களும் விடுதலைப் போராட்டவுணர்வை வெளிப்படுத்துவதால் விளையக்கூடிய ஏதங்களை வெள்ளையர் அரசாங்கம் தெள்ளிதிற் தெரிவித்திருந்தது. பேச்சுரிமை, எழுத்துரிமை, தடை செய்யப்பட்டன. ஆட்சியாளர்க்கு அடிபணிவதும், ஆட்சிக்குரியோரைப் போற்றுவதும், இந்த மண்ணில் பலருக்கு இயல்பான பழக்கமாகவும், வழக்கமாகவும் மாறிவிட்டிருந்தது. குறிப்பிட்ட சில பிரிவினர் வெள்ளையரைத் தெய்வமாகவே போற்றினர். இந்திய மக்களில் ஒடுக்கப்பட்டவர்களின் இடையில் படித்து முன்னேறிய சிலர் மட்டும் வெள்ளையர்கள் மனித உரிமைகளை மதிப்பவர்கள் என்றும், பிற்பட்டவர்களை முன்னேற்றுவதில் ஆர்வம் கொண்டவர்கள் என்றும் கருதினார்கள். உயர்குடியைச் சார்ந்த இந்தியர்கள் என்றும் காட்டிக் கொடுப்பவர்களாகவே இருந்தார்கள். 'ஜி' சமத்துவத்தைப் பேணுவதிலும், ஆங்கில ஆட்சியை எதிர்ப்பதிலும், வள்ளத்தோளைப் பின்பற்றுபவராகவே விளங்கினர். 'ஜி'யின் தொடக்கப்பாடல்களில் விடுதலையுணர்வும், விடுதலை வீரர்களின் போராட்ட வரலாறுகளும் ஆக இவையே நிரம்பியிருந்தன. பெண்கள் எப்பொழுதும் அமைதியாக இருப்பவர்கள். விடுதலைப் போராட்ட காலத்தில் அவர்களுடைய பங்கு என்ன என்பதை ஒரு பழங்கதை மூலமாகப் "பெண்" என்னும் பாடலில் வெளிப்படையாகவே விவரிக்கிறார். தாய்நாட்டு விடுதலைக்காகப் போராடிய வீரன் விக்கிரமன் ஆவான். போராட்டத்தின் இடையே ஒருநாள் இவன் தன் மனைவியைப் பார்ப்பதற்காக மிகுந்த ஆர்வத்துடன் திடீரென்று வீட்டிற்குச் செல்கிறான். அவனுடைய மனைவி இந்துமதி விடுதலைப் போராட்டம் முடிந்து கணவன் வீடு திரும்பியதாக நினைக்கிறாள். ஆனால் விடுதலைப் போராட்டக் களத்திலிருந்து தன்னைப் பார்ப்பதற்காகவே இடையில் ஓடிவந்திருக்கின்றான் என்று அறிந்தபொழுது அவளுடைய உள்ளம் தளர்கின்றது. கணவனைப் பற்றி அவள் கொண்டிருந்த பெருமை புண்படுகிறது. மனைவி என்பவள் கணவனுக்கு கடமையுணர்வையூட்டிச் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து நிற்கச் செய்யாமல், பெண்மைக்குரிய காதல் உணர்வைமட்டும் ஊட்டிக்கடமை தவறச் செய்பவள் என்னும் பழி தனக்குச் சேருமோ என்றஞ்சி அவள் உயிர்விடவுந் துணிகிறாள். தன்னை

மாய்த்துக்கொள்ள வாளோச்சுகிறாள். அவன், தான் கடமை தவறிய குற்றத்தையுணர்ந்து உடனே கையிலிருந்த வாளைப் பறித்துப் பின்வரும் உறுதிமொழிகளைக் கூறி அவளிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்படுகிறான்.

"நான் வெற்றியைத் தழுவுவேன் அல்லது சாவைத் தழுவுவேன்
அதுவரை இந்த வாளைக் கீழே வைக்கமாட்டேன்
சிலர் இறந்தும் வாழ்கிறார்கள். பலர் வாழ்ந்தும் இறந்தவர்களாக இருக்கிறார்கள்.
சாவிலும் நான் அழியாதவனாக இருப்பேன்."

விடுதலைப்போராட்ட காலத்தில் இயற்கையை விவரித்துப் பாடிய பாடல்கள் கூட விடுதலைப்போராட்ட உணர்வைக் குறிப்பாக வெளிப்படுத்தின. "வைகறைக் காற்று" என்னும் பாடல் காந்தியடிகளாரின் போராட்டங்களை குறிப்பாக வெளிப்படுத்தியது. இரவு காவலர்களான விண்மீன்கள் வைகறை நேரம் புலருஞ் செய்தியை வைகறைக்காற்றின் வாயிலாக உணர்ந்து ஒளி மங்குகின்றன. இமயமுதல் குமரிவரை தோன்றும் விழிப்புணர்ச்சியைக் கற்றவர் கல்லாதவர் ஆகிய அனைவர்தம் உள்ளத்திலும் பாய்ச்சும் "வைகறைவிடியல்" உயிருள்ளன. உயிரில்லன ஆகியவற்றின் மீது படும் ஒளியின் வாயிலாகக் குறிப்புப்பொருளைத் தெரிவிக்கிறது. நல்ல விலங்குகளின் எலும்புகளுக்கிடையில் குருதிக்கறை படிந்த குகைகளில் படுத்துறங்கும் கொடிய விலங்குகள் என்னும் உருவகத்தின் வாயிலாக கொடுங்கோலர்களான ஆட்சியாளர்களைச் சாடுகிறார். "மேற்குக்காற்று" என்னும் பாடலில் மலர் களிலுள்ள பொன் மகரந்தங்களை களவாடிச்செல்வதால் அம்மலர்கள் ஒன்றோடொன்று மோதிச் சண்டையிட்டுக்கொள்கின்றன என்கிறார். இதன் வாயிலாக வெள்ளையர்களின் பிரித்தாளும் சூழ்ச்சியைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறார்.

இயல்பாகவே இறைப்பற்று நிறைந்த இவர் தன் கடவுட்பற்றினை கவிகளின் வாயிலாக வெளிப்படுத்துங்கால் எல்லையில்லா இன்பமெய்துகிறார். கடவுள் நெறியைப் பின்பற்றும் தன் தளராவுறுதியை ஆர்வந் ததும்பப் புலப்படுத்துகிறார். மனிதவுள்ளத்தைப் பண்படுத்தும் சமுதாயத் தொண்டுணர்வையுங் கடமையுணர்வையும் உள்ளடக்கிக் கொள்வது கடுமையானது. இந்த உள்முகப் போராட்டம் சில பாடல்களில் புலப்படுகிறது. "தாமரை" என்னும் பாடலில் சூரியனிடம் கொண்ட தளராத பற்றுணர்வு என்றென்றும் நீடிக்கும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

"என் வாழ்விடத்தை அலைகள் தாக்கி அலைக்கழிக்கின்றனா
இதை நான் துயிலெழுப்புவதாகவே நினைக்கிறேன்
சுற்றுவெளியின் பெருமூச்சுகள் திரண்டு

கட்டுக்கடங்காத புயலாக வளர்கிறது
அவையென்னை வேரோடு சாய்க்க முடியாது.
நான் உன்னையே உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில்
அவை என்முகத்தை வேறு திசைக்குத் திருப்பாதபடி என்னைக் காத்தருள வேண்டுகிறேன்.
இயற்கையின் அழியாத அழகு என்னைக் காத்து வளர்க்கிறது.
அந்த அமுத அரவணைப்பில் என்றும் என்னை
வாழச்செய்வாயாக".

"புயலுங் குழப்பமும்" என்னும் பாடலில் அரசியல் வல்லாண்மையும் விடுதலைப் போராட்டமும் உருவகிக்கப்படுகின்றன. மனச்சான்றின் ஒருபகுதி. தன் ஆன்மாவை மனநிறை செய்வதற்காகத் தன்னலத்தோடு வாழ்வதை எதிர்க்கிறது. சமுதாயத் தேவைகளுக்கு ஒவ்வொரு தனிமனிதனும் தன் பங்காக நேரடியாக ஈடுபட்டுச் சில கடமைகளைத் தவமாக செய்யவேண்டும் என்று அது வலியுறுத்துகிறது. மனச்சாட்சியின் மற்றொரு பகுதி தன் ஆன்மத் தேவைகளை நிறைவுசெய்வதற்காகத் தன்னலத்திற்கு முதலிடந்தர வலியுறுத்துகிறது. "குயில்" என்னும் பாடலில் மனச்சான்றின் இரு பகுதிகள் ஒன்றையொன்றை எதிர்த்து உரையாடுவது விளக்கப்படுகிறது. தன்பாட்டில்தானே மெய்மறந்து களிப்பில் திளைத்திருந்த குயிலைப் பார்த்து ஒரு வழிப்போக்கன் வினவுகிறான்.

"வெறும் ஒற்றையடி அளவில் வாழ்வு சுருங்கிவிட்டது.
கடமைகளோ விண்முட்டுமளவுக்கு விரிந்து பறந்தன
இது தெரிந்தும் கூட இந்தப் பனிக்கால முழுவதுந்
தன்னந்தனியாக வெறுமனே பாடிக்கொண்டு வீணாக
நீ பொழுதைப் போக்குவது ஏன்!
குயில் மறுமொழி சொல்லுகிறது.
உலகின் படைப்பில் உள்ள அழகுகளையும்
நாட்டுவிடுதலையென்னும் தெய்வக்கோயிலையும்
உலகின் கூரையாகவுள்ள பரந்த நீலவானத்தையுந் தொடுவதற்காக
என்னுடைய இதயம் எழும்பிக் குதித்துக்கொண்டிருக்கிறது.
ஆதலால் நான் ஒரு கணப்பொழுதையும் வீணாக்காமல்
என்னை மறந்து பாடிக்கொண்டிருக்கிறேன்.
நான் கடமையைத்தான் செய்கிறேன்.
இது உனக்குத் தெரியவில்லையா?"

இதுவே குயில் பறவையின் ஆறுதலான மறுமொழி. விடுதலைப் போராட்டக்களத்தில் தோல்விகண்டு துவண்டுபோன எண்ணற்ற வீரர்களின் இதயப்புண்களுக்கு ஏற்ற மருந்தாக இந்தப் பாடல்கள் விளங்குகின்றன.

இறுதியாக மனச்சான்றின் மறுபகுதி வெற்றிக்களிப்பில் மிதக்கிறது. காலத்தில் தேவைகளை உணர்ந்து சமுதாயத்தின் தொண்டிற்காகத் தன்னையே முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும் நாட்டுப்பற்று பாடலாக மலர்ந்து விட்டது. கவிஞரின் மனக்குமுறல்களுக்கு குயில்பாட்டும் ஒரு வடிகாலாகும். நாட்டு விடுதலைக்காக அக்காலத்து இளைஞர்கள் எல்லாம் எதனைக்கொடுக்கவும் துணிந்திருந்தனர். தாய்நாட்டு விடுதலைக்குத் தியாகமே தேவைப்பட்டது. எழுத்தாளர்களும் புலவர்களும் பொதுமக்கள் சிந்தனையில் புரட்சியைத் தூவி விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு புத்துணர்வு ஊட்டினார்கள். சொற்களே போர் வாள்களாக மாறின. இந்த புத்துணர்வுப்பாடல்கள் நுகர்ந்துவரும் துன்பங்களுக்கும் எதிர் பார்க்கும் நாட்டுவிடுதலைக் கனவுகளுக்கும் இடையில் முரண்பாடு தீர்க்கும் மருந்தாயின. வருங்காலத் தலைமுறையினர்க்கும் காலந்தோறும் போரிடப் பயன்படத்தக்க படைக்கலன்களாயின.

தொடக்ககால நிலைகளை விளக்கும் ஒருசில வருணனைப் பாடல்களும் உள்ளன. அவை துயரத்திருப்பங்களையும், நேர்மைப் போராட்டங்களையும், விதியின் விளையாட்டுகளையும் எடுத்தியம்புகின்றன. "தர்மதீரா" என்னும் பாடல் புத்த பெருமானின் அடியவளான சீமதியின் கதையைக் கூறுகிறது. புத்தபெருமானை வழிபடக்கூடாதென்ற அரசின் தடையை மீறினாள். அவளுடைய கணவன் பட்டாளத்து வீரனாக இருந்ததால் அரசாணைக்குக் கீழ்ப்படிந்து தன் மனைவியை அந்த இடத்திலேயே வாளால் வீழ்த்தினான். அப்பொழுதே உண்மைக்காதலுணர்வின் மேலீட்டால் தன்னைத்தானே வாளால் மாய்த்துக்கொண்டு வீழ்கிறான். அவனுடைய ஒரு செயல் காதலையும் மீறிய கடமையுணர்வைக் காட்டுகிறது. மற்றொன்று அவன் மனைவியிடங்கொண்ட மாளாக் காதல் நேர்மைக்குரிய கடமையைக் காட்டுகிறது. காதல் தியாகத்தின் தன்மையை மதிப்பிட்டுப் பார்ப்பதனால், மதிப்பிடுவோரின் கருத்துகள் வேறுபடலாம். கருத்துகள் காலத்திற்கேற்ப மாறலாம். இறுதியான முடிவு என்று எதுவும் இல்லை. எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய கருத்து ஒன்று உண்டு. தூய காதல் உணர்வில்கூட தன்னலம் உள்ளடங்கியிருக்கிறது. தன்னலத்தைத் துறப்பது காதலைத் துறப்பதாகும். மனிதனின் எண்ணத்தைக் கவரும் வகையில், ஊற்றங்கொண்டு இருப்பது இத்தகைய கதைகளில் வரும் தன்னலம் துறக்கும் மதிப்பீடுகளே ஆகும். அரிச்சந்திரன், சிபி, இராமன் போன்ற பெருமக்கள் வாழ்ந்த இம்மண்ணில் காதலைத் துறப்பது, பொது நன்மைகளுக்காக எல்லாத் துன்பங்களையும் ஏற்பது என்னும் மனப்பாங்குகள், மக்கள் அனைவராலும் தம்மை அறியாமலேயே எதிர்பார்க்கும் பண்புகளாகவே மாறிவிட்டன.

"திவாகரன்" என்ற மற்றொரு பாடலில் காதலின்பத்தை உதறித் தள்ளி, கடமையாற்றும் பொருட்டு வாளேந்தும் வீரனின் கதை கூறப்படுகிறது.

அவன் தனிமைச் சிறையில் வாடும் போது காதலி பரிமளாவின் நினைவுகள் அவன் இன்னும் உயிர்வாழ்வதற்கு ஊக்கம் சேர்த்தன. "சுதா" என்னும் பாடலில் கணவன் இறந்ததும் அவனோடு உடன்கட்டையேறித் தீயில் மாய்ந்து போக நினைத்திருந்த அவளைத் தாய்நாட்டின் விடுதலையுணர்வு தடுத்து நிறுத்திப் போராட்டத்தில் கலந்து கொள்ளச் செய்தது. தாய்நாட்டு விடுதலைக்காகத் தன்பங்கைச் செலுத்துவதன் மூலம், உண்மையாகவே தானோர் புனிதக் கடமையை ஆற்றமுடியுமென்று அவள் நம்பினாள். "ஒரு சதி" என்னும் பாடலில் இதற்கு முரணாக கணவன் இறந்ததும் தீப்பாய்ந்து மடிந்து விடும் மற்றொரு கற்புக்கரசியின் கதை கூறப்படுகிறது. அவள் தீப்பாய்ந்து இறந்ததை ஒரு வண்ணத்துப்பூச்சி சிவந்த அசோக மலர்க்கொத்தினுள் புகுந்தது போன்று இருக்கிறது என இவர் பாடியிருக்கிறார். இது எவ்வாறு பொருந்தும்? உடன்கட்டையேறுவதை ஓரிடத்தில் மறுத்துப்பாடி, மற்றொரு இடத்தில் புகழ்ந்துபாடுவது தகுமா? உண்மையைச் சிந்தித்தால் இதில் கருத்து முரண்பாடுகள் இல்லை. உலக வாழ்க்கையில், வாழ்வும் சாவும் முரண்பட்டதாகத் தோன்றினும், சமமதிப்பு வாய்ந்தவை. எது சரி என்று அப்பொழுதைக்கு முடிவு கட்டப்படுகின்றதோ, அது பின்பற்றத்தக்கதாகின்றது. சாவதைவிட வாழ்வதே பொருந்துவதாகத் தோன்றும் போது ஒருவன் வாழவேண்டும் என்ற முடிவையே மேற்கொள்கிறான். மடிவதே சரியென்று முடிவெடுக்கத்தக்க சூழ்நிலையும் ஏற்படக்கூடும். அத்தகு சூழலில் சாவைத் தழுவுவதே சரியான முடிவாகும். சட்டமும், சமுதாயமும் ஒப்புக்கொள்கிறதா, மறுக்கிறதா என்றெல்லாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. தனிமனிதனின் முடிவே சரியான முடிவாகும். ஒரு கோழை சாவைத் தழுவ முற்பட்டால் அதில் பெருமைக் குரியது ஒன்றுமில்லை. அது ஒரு பாவமாகவே கருதப்படும். ஒரு வீரன் எடுக்கும் முடிவு சரியானது மட்டுமல்ல, புனிதமுடையதுமாகும்.

"விமலா" என்னும் சிறிய ஓரங்க துன்பியல் பாடலில் இதே கருத்து நிலை நாட்டப் படுகிறது. வரலாற்றில் இடம்பெற்ற கேசவதாச அரசன் பகைவர்களால் சிறையிடப்பட்டான். அவன் பகைவர்களால் கொல்லப்பட்டானா? அல்லது தற்கொலை செய்து கொண்டானா? என்பது இன்னும் வரலாற்றில் முரண்பட்ட செய்தியாக இருக்கிறது. ஆயின் இந்தப்பாடலில் தற்கொலையாகவே காட்டப்படுகிறது. அவனுடைய இளமைக்காலத் தோழியாக இருந்த விமலா என்பவள் தந்திரமாகச் சிறைச்சாலைக்குள் நஞ்சினைக் கடத்திச் சென்று, அவன் தற்கொலை செய்துகொள்ள உதவுகிறாள். இதனை விமலாவின் வீரச்செயல் என்றே

எடுத்துக்காட்டியிருக்கிறார். விண்மீனிடம் காதல் கொண்ட புற்றீசலின் கதை "சுபத்திரா" என்னும் பாடலில், துன்ப முடிவைத் தாங்கி இருக்கிறது. ஏதுமற்ற பஞ்சைப் பராரியான ஒரு ஏழையின் மீது, ஒரு பணக்காரரின் மகள் காதல் கொண்டதை அவள் தந்தை ஒப்பவில்லை. ஒருநாள் அவன் அவளுடைய தந்தையின் துப்பாக்கியைக் காட்டில் வேட்டையாடுவதற்காக வாங்கிக்கொண்டு செல்கிறான். ஆனால் திரும்பி அவன் வரவேயில்லை. நிலையாக விடைபெற்றுச்செல்கிறேன் என்று அவன் எழுதிய கடிதம் ஒருநாள் அவன் கண்ணில்படுகிறது. காலங்கடந்த கடிதமாயினும், உடனே அவள் வீட்டைவிட்டு நிலையாகப்புறப்பட்டு காட்டிற்குப்போகிறாள். முற்றிலும் களைத்து, இளைத்துப் போன தோற்றத்தில் ஒரு துறவி அவளைக் காட்டில் காணுகிறான். அவள் தன் கதையைத் துறவியிடஞ் சொல்லிவிட்டுக் கீழே விழுந்து இறந்து விடுகிறாள். எல்லாக் கதைப்பாடல்களும் பொதுவாக நெஞ்சை நெகிழவைக்கும் துன்ப முடிவையே கொண்டிருக்கின்றன. புலவனின் உள்ளத்தில் உலகியற்கை தழுவிய நடப்புகளின் ஒளியோட்டம் பளிச்சிடுகிறது. தோல்வி தழுவிய காதல் துயரங்களே செங்கோலோச்சுகின்றன. அக நோக்கில் தோய்ந்த புலமையாளர் "எங்கள் இனிமைமிக்க பாடல்களெல்லாம் துயரந்தோய்ந்த நினைவுகளில் வார்த்தெடுக்கப்பட்டவையே" என்று நம்புகின்றனர்.

3. புலரும் விடியல்

1931 ஆம் ஆணடு, டிசம்பா மாதததில 'ஜி' திருமணஞ செயது கொணடார் சமயத்துறையிலும் அரசியலிலும் கேரள மாநிலததின் வரலாறறுப புகழ பெறற திருவஞ்சிக் குளத்தில் பிறநத சுபததிரை அமமாள என்னும் இவருடைய மனைவி இவரினும 12 ஆணடு இளையவா 1920 ஆம ஆணடில அங்கு அருகிலிருந்த பள்ளியில சிறிதுகாலம இவா ஆசிரியராக இருநதபோது அந்தக் குடுமபததினருடன தஙகி இருநதாா அப்பொழுது அநத அம்மையார் சிறு குழநதை 1929 ஆம ஆணடில இவருக்குத் திருமணம முடிக்க வேணடும என்ற பேசசு எழுநத போது தாம் முனபு தங்கியிருநத வீட்டுப் பெண குழந்தையையே மணக்க விருமபுவதாகத் தன் தாயிடம கூறினார். அப்பொழுது அந்தச சிறுமி உயாநிலைப பளளியில படித்துக்கொண்டு இருந்ததால், பள்ளிப்படிப்பை முடிக்கும வரை திருமணததை இரணடு ஆண்டு தளளி வைக்க நேர்நதது நுணணுணாவு மிக்க புலவருககுத தகுந்த வாழ்க்கைத துணையாகுமவரை சுபததிரை அமமாள தோநத இலக்கிய ஆர்வஙகொணடவராக இருநதாா இவருக்கு அனைதது வகையிலும உறுதுணையாகவும, ஊன்றுகோலாகவும ஆாவமூட்டும வகையிலும அநத அமமையார் சிறநத இந்தியப் பணபாட்டிறகேறற பெணமணியாகத திகழந்தார் அன்பு, அடக்கம, மென்மை, பொறுமை தனனலமினமை, எளிமை, இரக்கம, நிறைவு ஆகிய அனைதது நறபணபுகளும அநத அம்மையாாபால் குடிகொணடிருந்தன உளளதைக கொணடு நிறைவு காணும் மனபபாங்கும், கணவனின வருவாயக்கேறற செலவு திறமும அநத அம்மையார்பால் இருநதன அவர்கள வீட்டுக்குப பெருநதிரளாக சில நேரங்களில் வரும் பார்வையாளா, நணபா, விருநதினா ஆகியோரையும அந்த அமமையார் விருநதோமபத தவறியதிலலை இவவகையில்அவருடைய பணிகட்குத் தூணாகத துணைபுரியும காவல தெயவமாக அவர் விளங்கினாா அவருக்குத் தம துணைவியாரைத தவிர வேறு நணபரோ, தத்துவப பேராசிரியரோ, வழிகாட்டியோ, தேவைபபடவிலலை அவருடைய புலமை வாழக்கையில் ஏற்றததாழவுகள் இருநதபோதும, புகழேணியின உசசியில் நின்றபோதும், பலவேறு துன்பஙகளால மனம தளாநதபோதும, இவரது படைபபுகளைப பிறர் கடுமையாகச சாடியபோதும, நலலவாகளால பாராட்டபபட்ட போதும், பரிசுகள வநதபோதும, பழிகள குவிநத போதும இல்லற வாழ்க்கையில் ஏற்றததாழவுகள நோநத போதும, அநத அம்மையாரே அவருக்கு ஒரு சீரான, அமைதியான, வாழககைபபாஙகை அமைக்க உதவினார் அவர்கள் உணமையான அனபின் செறிவினால, பிறருக்கு எடுததுக்காட்டான வாழககைத துணைவாகளாக விளஙகினாாகள

பண்பு, உண்மை, அழகு ஆகியவற்றைக் காதலில் தோய்த்து அழகாகப்பாடும் எத்தனையோ புலவர்களுக்கு முற்றிலும் நேர்மாறான வாழ்க்கைத்துணை அமைந்துவிடுவது உண்டு. புலவன் அகத்தேயுணர்ந்த நல்லியல்புகளைப் புறவாழ்விற் செயற்படுத்த முடியாத இக்கட்டான சூழ்நிலைகள் ஏற்படுவதுண்டு. ஆனால் ஜியின் சிறந்த உள்ளுணர்வுகள் அகவாழ்விலும் புறவாழ்விலும் ஒருசேர மிளிர்ந்தன. 1930 ஆம் ஆண்டளவில், அவருடைய புகழ்பெற்ற பாடல்கள் சிறந்த படைப்புகளாக உருவாகி இலக்கிய வானில் ஒரு பொன்மயமான புலர்காலைப்பொழுதைத் தோற்றுவித்தன. இளந்தலைமுறையில் மிகச்சிறந்த புலவராக உருவானது என்பது மாபெருஞ்சாதனையாகும். அவருடைய பாடல் தொகுதிகளில் "சூரியகாந்தி" 1933-லும் "புதிய விருந்தாளி" 1935-லும், நாடகக்கற்பனையான "இருட்டுக்கு முன்னே" 1935-லும் படைக்கப்பட்டன. சூரியகாந்தி என்னும் பாடல்தொகுப்பில் "திருமணம்" "தேடல்கள்" என்னுந் தலைப்பிட்ட மூன்று பாடல்கள் பரவலாக எல்லாராலும் பாராட்டப் பெற்றவை. திருமணம் என்னும் பாடலில் வாழ்வு என்பது சாவை மணக்கும் காட்சியாகவே உருவகிக்கப்பட்டுள்ளது. கொடுமையான வல்லாண்மைக்குணம் கொண்ட சாவு என்னும் மணமகன் தான் மணந்துகொண்ட மனைவியை, ஒன்றும் விளங்காத "புதிர்" என்னுங் கோட்டையில் குடியேற்றுகிறான். அவனுடைய அரண்மனையில் இத்தகைய அடிமை மனைவிகள் எண்ணற்றோர் கடந்த காலத்தும் இருந்தார்கள். இப்பொழுதும் இருக்கிறார்கள். அவனுடைய கோட்டைக்குள் குடியேறிய அவனுடைய மனைவிமார்கள் தத்தம் வாழ்க்கை சொர்க்கம் என்னும் பொன்னுலமாக இருந்ததா? அல்லது நரகம் என்னும் நிரயமாக இருந்ததா என்பதை ஒருவரேனும் அங்கிருந்து திரும்பிவந்து சொன்னதில்லை.

> "மணப்பெண்களை அழுத கண்களோடும்
> புலம்பலோடும் சாவு என்னும் மணமகனோடு
> வாழ்க்கை நடத்த வழியனுப்பி வைக்கும்
> உற்றார் உறவினர்கள் செய்வதறியாது வழியனுப்பி
> விடைபெறுகின்றார்கள்."

வாழ்வு என்னும் மணப்பெண்ணுக்கு சாவு என்னும் கணவனின் பெயர் கேட்டதும் நெஞ்சு நடுங்குகிறது. துயரம் தொண்டையை அடைக்கிறது. அவள் தேம்புகிறாள்; விம்முகிறாள் விதியின் கொடுமையைக் கண்டு, காண்போரும் மனம் சாம்புகின்றனர்.

> "நெளிநெளியான என் கூந்தலை மல்லிகை மலர்களால்,
> காலம் என்னும் பெண் அழகு படுத்துகிறாள்.
> என் நெற்றியில் சந்தனப்பொட்டிடுகிறாள்.

அலங்காரம் எல்லாம் முடிந்துவிட்டன.

இனி மணமகன்தான் வரவேண்டும்.

ஆம்; அந்த அரிய பெரிய நேரமும் வந்துவிட்டது.

என் இதயத் துடிப்போசையில் மணமகனின் காலடி ஓசை
கேட்கிறது.

இனி ஒரு நிமிட நேரங்கூட என்னுடையதல்ல.

பேராற்றல் மிக்க இயற்கையின் சட்டத்தை யார் மாற்றமுடியும்.

என்னுடல், பொருள், ஆவி அனைத்தையும் அவன் காலடியில்
காணிக்கையிடுகிறேன்.

அஞ்சாமலும், தயங்காமலும்
முணுமுணுக்காமலும், நடுங்காமலும், என்னைஒப்படைத்து
விட்டேன்

புன்முறுவலோடு இந்த அற்பவுலக வாழ்வை உதறித்தள்ளினேன்.

மணமகனின் கைகளில் நான் அளிக்கும் படையல் இதுவே"

வல்லாண்மை மிக்க மணமகனாக சாவு உருவாக்கிப்பட்டுள்ளது, நம் அனைவர்தம் நெஞ்சையுந் தொடுகிறது. எம்.என். விசயன் என்னுந் திறனாய்வாளர், சாவு ஒரு முரண்பாடன்று என்று கூறுகிறார். நம் அடிமனத்தின் ஆழத்தில் அவர்கள் ஒரே வடிவம் பெற்றிருக்கிறார்கள்; வாழ்வு மணப்பெண்ணாகவும் சாவு மணமகனாகவும் கூறப்படும் உருவகத்தில் மணப்பெண்ணின் நரைத்த கூந்தல் ஒப்பனைகளும், முகத்திலும், உடம்பிலும் தோன்றிய சுருக்கங்களும் கற்பனையின் உச்சிக்கே நம்மை அழைத்துச்சென்று மெய்மறக்கச் செய்கின்றன.

தேடும் பொருளைக் காணமுடியாவிடினும் தேடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபடும் துயரம் மிருந்த தலைவிதிக்கு உரியவர்கள்தான். மெய்ப்பொருள் தேடுபவர்கள். "தேடல்கள்" என்னும் பாடலில் இடையறாது இறைவனைத் தேடும் நம்பிக்கை படம்பிடித்துக் காட்டப்படுகிறது. கடவுளைக் காண்பதற்கு ஐம்புலன்கள் போதாவிட்டாலும், இறைவன் மீதுள்ள நம்பிக்கை ஒரு சிறிதும் தளரவில்லை. நமக்குப் புலனாகக்கூடிய சான்றுகளை, வைத்துக் கொண்டுதான் கடவுளை நம்பவேண்டும் என்ற நிலை அல்லது மனப்பாங்கு உண்மையான அடியவனுக்குத் தோன்றுவதில்லை. இந்தப் பாட்டின் அமைப்பிலும் போக்கிலும் தாகூரின் கைவன்னமச்சாயல் இழையோடுகிறது. "காற்று" என்னும் பாடலில் தன் காதலியைத் தேடி ஒரு கணப்பொழுதும் எங்கும் நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கின்ற பாங்கினைப் புலப்படுத்துகின்றார். இந்தக் காற்றின் காதலி யாரென்று கூறப்பெறவில்லை. காற்றின் காதலியே ஒரு கற்பனைப்பொருள். எங்கு தேடியும் கிடைக்காத காதலியைக் காற்றால்

எவ்வாறு உணரமுடிகிறது. மல்லிகை மலர்களோடு மோதும் போதும் அதிலுள்ள மணம் காதலியின் நறுமணம் என்று காற்று நினைத்துக்கொள்கிறது. வாழ்க்கை அனுபவம் எதுவுமில்லாமல் கற்பனையால் மட்டும் இவற்றை எவ்வாறு உணரமுடியும் என்று மூங்கில்கள் தமக்குள் உரசி, ஒலியெழுப்பிக்கொண்டு சிரிக்கின்றன. உள்ளீடு இல்லாத மூங்கிலில், ஓசையெழுவது இயல்பு தானே? அவரோடு கொண்ட உறவு பழங்கனவு அன்று சில நினைவுகளே அவற்றை நிறுவுகின்றன. சிலநேரங்களில் அவள் கூந்தலிலிருந்து உதிர்ந்த மலர்களே வானத்தில் பளிச்சிடும் விண்மீன்களாக, நம்பச் செய்கின்றன. அவனுடைய கைவளைகளின் ஓசையே பறவைகளின் கீச்சிடும் ஒலியாகக் கேட்கிறது. விடியற்காலையில் அடிவானத்தில் காணப்படும் சந்தனங்கலந்த குங்குமச்செவ்வொளி நிறம், அவளுடைய பாதச்சுவடுகள் போலத் தெரிகின்றன. அவளுடைய மோதிரம், அவனுடைய மங்கலான கண்களுக்கு உதயசூரியனைப்போன்று ஒளிவீசுகிறது. அவளுடைய வெண்ணிறக் கைக்குட்டை வெண்மையான மேகம் போலத் தோன்றுகிறது. அவள் இருக்கிறாள் என்பது உண்மைதான். ஆனால் அவளை முழுவடிவில் காண்பது எப்படி? வழியில் எதிர்ப்படுபவர்களை எல்லாம் சந்தித்து, அவளை யாரேனும் கண்டதுண்டா? என்று கேட்டுக்கொண்டு அலைகிறான். இந்த ஓர் கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டுத் தொல்லைப்படுத்துவதால், கடுஞ்சினங்கொண்ட பெருங்கடல், தன்நுரைப்பற்களை நறநறவென்று கடித்துச் சீற்றத்தை வெளிப்படுத்துகின்றது. காற்றால் அலைக்கழிக்கப்படும் மரக்கிளைகள், ஐயோ, நான் யாரையும் பார்த்ததில்லை எனக்கொன்றுந் தெரியாது என்று வாய்விட்டுப் புலம்புகின்றன. மலைகள் எல்லாம் வானத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. வானமோ வாய்பேசவில்லை.

"யாரும் பார்த்ததில்லை. பார்த்ததாகச் சொல்பவர்கள்
ஏமாற்றுக்காரர்கள்; கடுமையாகப் பாடுபடு
உண்மையையே வழியாகக்கொண்டால் போதும். நானுந்துணை
நிற்பேன்"

தேடுபவர்கள் எல்லாம் பார்த்தவர்கள் அல்லர். பார்க்காவிட்டாலும் நம்பிக்கை நிலைத்து நிற்கிறது. பகுத்தறிவின் எல்லையைக் கடந்த கடவுள் நம்பிக்கைக்கு இப்பாடல் அரணாகிறது. தெய்வ நிந்தனையாளர்களுங்கூட இதனை வரவேற்பார்கள். இந்தப்பாட்டுக்கு பொருள் சொல்லத் தொடங்கினால், அது தன் உண்மையான உணர்வாழத்தை இழந்துவிடும். சாகித்திய பரிசத்து எனப்படும் கேரள இலக்கிய மன்றத்தில் ஐந்தாம் ஆண்டுவிழாவில் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு இப்பாடல், உணர்ச்சி ததும்ப பாடப்பட்டபொழுது, அவையில் கூடியிருந்த பெருந்திரளான மக்கள் மெய்மறந்து கேட்டு இன்புற்றனர். உலக இயற்கையே காதலன்பிற்குக் கட்டுப்பட்டதாதலால்,

காதலியைத் தேடுங் காதலனின் இலக்கியப்படைப்பு, அனைத்துலக உயிர்கள் எல்லாவற்றிற்கும் உள்ளக்கிளர்ச்சி ஊட்டுவதாக அமைந்தது. அதன் விளைவாக அப்பெருந்திரளான அவையோர் நடுவிலிருந்த "இந்து" நாளிதழின் செய்தி முகவரான சட்சித் என்பவர் "ஒரு மாபெரும் புலவரின் திடீர் உதயம்" என்னுந் தலைப்பிட்டுச் செய்தி வழங்கியதை எவரும் மறந்திருக்க இயலாது. பாடலைப்பகுப்பாய்வு செய்யும் ஆராய்ச்சியாளர்கள் இதில் இத்தனை உவமைகள், உருவகங்கள் பிற அணிநயங்கள் உள்ளன எனக்காட்டுவார்கள். பாடலில் உள்ள கருத்துகள் அல்லது சொற்கள் மட்டும் பாடலாகாது. உணர்ச்சி கொப்பளிக்கும், செறிவார்ந்த மொழி நடையே பாடலாகும். அதில் கூறப்படும் நோக்கம் இரண்டாவதாகவே கருதப்படும். மொழிநடையில் உருவாக்கப்படும் மரபார்ந்த உணர்வுகள் அள்ளிக்கொண்டு வருங்கருத்துக்களே, பாட்டுக்கு ஒரு வடிவந்தருக்கின்றன. இதனைக் காலம் படைக்கும் அறிவார்ந்த உணர்ச்சி குழந்தை எனலாம். இதில் வெறும் அணிநலத்தைப் பார்க்கக்கூடாது. மலையாளப்பாடல்களில் இறவாவரம் பெற்று ஈடுயிணையற்ற பேரெழில் பூங்கா என்று "தேடல்கள்" என்னும் பாடலைக்குறிப்பிடுவர் "திருமணம்", "தேடல்கள்" என்னும் பாடல்கள் புதிரானவை என்று வெளிப்படக் குறிக்கப்படவில்லை. அது உணர்பவரின் ஆற்றலைப் பொருத்தது.

கேசரி பாலகிருட்டினப்பிள்ளை என்னுந் தலைசிறந்த திறனாய்வாளர் "சூரியகாந்தி" எனத் தலைப்பிடப்பட்ட பாடல் தொகுதியைப்பற்றி எழுதிய திறனாய்வுகள் புலவரின் உள்ளத்தில் ஆழப்பதிந்தன. "குயில்" "தாமரையின் பாட்டு" என்பவை தன் பாடலைப்பற்றிய திறனாய்வாளர்களுக்கு மறுமொழி பகர்வது போல் தான் வாழும் காலத்தியச் சமுதாயத்தை எதிரொலித்துக் காட்டின. ஒடுக்கப்பட்ட மக்களிடையிலே தோன்றிய புரட்சிக்கருத்துகள் நாளடைவில் வலுவுற்று காலவெள்ளத்தின் குமுறல்களாக வெளிப்பட்டன. கேசரி பாலகிருட்டிணப்பிள்ளையின் திறனாய்வுகளே இதற்குத் தூண்டுதலாயின எனலாம். புலவரின் காதற்பாடல்களைப் போற்றிப் புகழ்ந்தாலும், சமுதாய உணர்வுகளைச் சரிவரக்காட்டாது தப்பித்துச் செல்கிறார் என்றே அவர் சுட்டிக்காட்டியிருந்தார். கண்ணெதிரில் காணப்படும் மக்கள் வாழ்க்கையை ஏன் பாடல்களில் வெளிப்படுத்தவில்லை என்று கேட்டார். இந்த வினாக்களுக்கு விடைபகர்வதற்காகவே "என்பாடல்கள்" என்னும் பாடலை எழுதினார்.

"நானொரு விண்மீன்; உறக்கமின்றிக் காவல்புரிகின்றேன்.
சீறும் புயலாக முழங்குகிறேன்; கடலின் அழகிய குழந்தையாக
விளங்கும் மூன்றாம்பிறையும் நானே;
அந்தக் குழவியை முத்தமிடும் கடலும் நானே
பல்வேறு பிறப்பின் தோற்றங்கள் எல்லாம்
இயற்கையின் அவதாரக் குழந்தைகள்"

திறனாய்விற்குத் திறமாக் மறுமொழி இறுக்கும் இத்தகு பாடல்கள் பலவற்றை அவர் எழுதியுள்ளார்.

விண்ணுக்கும் மண்ணுக்கும் அமைந்த இழுபறிப்போரை வாழ்வினுஞ் சாவினும் பிணைத்துக் காட்டுகிறார். "இன்று நான், நாளை நீ" எனும் பாடலில், கணவனை இழந்த கைம்பெண்ணுக்கும் அநாதைக் குழந்தை களுக்கும் சாவு எத்தகைய தோற்றத்தைத் தருமோ? அத்தகைய தோற்றத்தை வெளிப்படுத்திக்காட்டுகிறார். இரண்டு பக்கங்களிலும் முடிவிடத்தைக் காணாத நெடுஞ்சாலைகளாக வாழ்வை உவமித்துக்காட்டுகிறார். நெடுஞ்சாலையின் ஒரு பக்கத்தில் பேசுகின்ற மனிதன் நிற்கின்றான். பூதத்தைப்போல் அவனது நிழல் நெடுந்தொலைவிற்குத் தெரிகிறது. இதைப்போலவே அந்திநேரத்துக் கருக்கிருட்டும் அச்சமூட்டுந் தோற்றத்தைத் தருகிறது. மரங்களிலிருந்து இலைகள் மயங்கிக் கீழே விழுகின்றன. பகல் என்னும் சவப்பெட்டியைத் தூக்கிச் செல்வதற்கு அணியமாக நான்குதிசைகளும் வந்து நின்று கொண்டிருக்கின்றன. அந்திநேரம் என்னும் மகள் அந்தச் சவப்பெட்டியையும், வானத்தையும் முத்தமிட்டு மயங்கி விழுகிறாள். பறவைகள் ஒலியடங்கிப்போய்விட்டன. மரங்கள் செயலற்றன. அந்தச் சவப்பெட்டியின் பின்னால் சிலர் வந்துகொண்டிருந்தனர் கணவனை இழந்த மனைவி தேம்பி அழுதாள். அவள் தேம்பும் ஓசை தவிர, வேறெந்த சாவுப்பறையின் ஓசையும் அங்கு கேட்கவில்லை. துயரமும், அமைதியும் நிலவிய அச்சூழலில், சில நெருங்கிய உற்றார் உறவினர் மட்டும் பின் தொடர்ந்தனர். குழந்தை வீறிட்டழுதது. அதன் கன்னத்தில் விழுந்த கண்ணீர்த்துளிகள் தவிர, அங்கு மலர்கள் எதுவும் தூவப்படவில்லை. அந்தச் சவப்பெட்டியின்மேல், பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்ட "இன்று நான் நாளை நீ" என்ற சொற்றொடர் மட்டுந் தெளிவாகத் தெரிந்தது. இந்தப்பாடலில் காணப்படும் விவிலியக்குறிப்பும், தியாகத்தின் அடையாளமான சிலுவையின் புனிதத்தைப் போற்றிப்புகழும் வரிகளும், இந்தப் பாடலுக்குப் பெரும்புகழைத் தேடித்தந்தன.

அக்காலத்தில் நம் கவிஞருடைய வாழ்க்கை நிலை, சுற்றுச்சூழல், பொருளாதாரம், ஆகியவற்றைப்பற்றியும் இங்கு குறிப்பிடுவது பொருந்தும். பாட்டெழுதும் தொழிலோடும், தமது வாழ்க்கைச் செலவுகளை ஈடுகட்ட, தமது காலத்தையும் நேரத்தையும் இலக்கியஞ் சார்ந்த பிற அறிவுத்துறைகளில் செலவிட நேர்ந்தது. ஆசிரியப் பணியில் கிடைத்த வருமானம் போதுமானதாக இல்லை. இவர் இயற்கையாகவே எளிய நடையும், குழந்தைகளின் மனப்பாங்கு அறிந்து பாட நூல் எழுதக்கூடியவர் என்பதையறிந்த பாடநூல் வெளியீட்டாளர்கள் பள்ளி மாணவர்களுக்குப் பாடநூல் எழுதித்தருமாறு வற்புறுத்தினர். இரண்டு வெளியீட்டு நிறுவனங்களின் வேண்டுகோளுக்கேற்ப,

இருவகைப் பாடநூல் தொகுப்புகளை எழுதித் தந்தார். ஒரு நிறுவனம் அவருக்குப் பல தவணைகளில் ஈராயிரம் ரூபாய் கொடுத்தது. மற்றொரு வெளியீட்டு நிறுவனத்தார் அந்த பாடநூல் தொகுப்பு உரிமையைத் தாம் வாங்கிக்கொண்டு, அவருக்கு ரூ 250 மட்டும் கொடுத்தனர். பிறகு தாம் பெற்ற உரிமையை மற்றொரு வெளியீட்டாளர்க்கு ரூ. 7,000க்கு விற்றுவிட்டனர். அந்தக் காலத்தில், அந்தத் தொகைக்கு நகரில் பெரியவீட்டையே வாங்கியிருக்கலாம். உண்மையிலேயே அந்த வெளியீட்டாளர் விற்ற தொகையில் ஒரு வீடு வாங்கிவிட்டாராம். பத்து ஆண்டுகட்குப் பிறகு மற்றொரு பாடநூல் தொகுப்பை உருவாக்கி முன்பு ஏமாற்றிய அதே பதிப்பாளரிடம் கொடுத்தார். அந்தப் பதிப்பாளர் ஆறேழு தவணைகளில் ஒரு தவணைக்கு ரூ. 25 வீதம் கொடுத்தார். முன்பு செய்ததுபோலவே வாங்கிய உரிமையை மற்றொரு வெளியீட்டாளர்க்கு ரூ. 5,000க்கு விற்று விட்டார். அதனை வாங்கியவர் அச்சிடும் முன்பு அதனைச் சரிபார்ப்பதற்காக ரூ 500 கொடுத்து ஒரு வல்லுநரை அமர்த்தினார். இந்தச் செய்தியைக் கேட்டு "ஜி" பெரிதும் மனமுடைந்தார். இச்செய்தி 'ஜி'யிக்கு எட்டி விட்டது என்பதையறிந்த முதல் வெளியீட்டாளர் ஏதேனும் ஒரு அமைதிப் படுத்திக்கொள்வது நல்லது என்னுங்கருத்தில் கோவை அணுகி நயமாகப் பேசி ரூ. 500 கொடுத்து அவரை மனஅமைதி பெறச் செய்தார். சிறந்த கவிஞரேயாகினும் அவர்களுடைய வெள்ளைமனம் உலகியலை அறியாததால் வணிக நோக்கில் வருவாயை மட்டுங் கருதும் வெளியீட்டாளர்கள் ஏழ்மையில் வாடும் எழுத்தாளர்களை அந்தக் காலத்தில் எந்த அளவிற்கு ஏமாற்றி வந்தார்கள் என்பதை விளக்கவே இந்நிகழ்ச்சி இங்கு குறிப்பிடப்படுகிறது.

குடும்பச் சூழலிலும் இன்பதுன்பங்களில் இணைந்தே எதிர்கொண்டனர். 1933-ஆம் ஆண்டில் இவருக்கு ஆண் குழநதை பிறந்தது. குழந்தையை நோக்கிய களிப்பில் சில அழகிய குழந்தைப்பாடல்கள் வெளிப்பட்டன அவர் கடுமையாக உழைத்தகாலமும் அதுவே எனலாம். நள்ளிரவுவரை பாடநூல்களை எழுதுவதற்காக, அவர் அறையில் விளக்கு எரிந்து கொணடிருந்தது. ஏற்கனவே மெலிந்த தோற்றமுடைய இவருக்குக் கடியஉழைப்பும், கண்ணுறக்கமில்லா இரவுகளும் உடல்நலிவை ஏற்படுத்தின களைப்பும், மயக்கமும் அவரை வருத்தின. மருத்துவரும் இவருக்கு ஈளைநோய் இருக்குமோவென்று ஐயப்பட்டார். விலையுயர்ந்த மருந்துகள் எழுதிக் கொடுத்து, நன்கு ஓய்வெடுத்துக்கொள்ளுமாறும், வலுவூட்டும் உணவு உட்கொள்ளுமாறும் அறிவுரைத்தார். பாடநூல் எழுதியதால் வந்த சிறுதொகையும் இதற்கே செலவாகியது. ஈளைநோய் வருத்தியது. 1951-இல் அம்மை கண்டது. அதன்பிறகு நோய் மீண்டும் தாக்கவில்லை. இந்த இடைக்காலத்தில் அவருடைய படைப்புமுயற்சிகள் தளரவில்லை. 1935-இல்

"புதிய விருந்தாளி" எனும் பாடல் தொகுதி வெளிவந்தது. "முழக்கம்" எனும் பாடலிலும் மகிழ்ந்து களிப்பதற்கு மாந்தனுக்குள்ள உரிமை விரித்துரைக்கப்பட்டது. முன்பனிக் காலத்தில் இளங்காற்று, உழைப்பிலிருந்து விடுமுறைபெற்றுக்களிக்க வாருங்கள் என அழைப்பு விடுத்தது. மணமேந்திய மலர்களும், பண்சுமந்த பாடல்களும், நீடிய மகிழ்ச்சியோடைக்கு மடைதிறந்தன. எழில்கொஞ்சும் முன்பனிக்காலத்து முற்றத்தில் துயரப்பனித்துளிகள் என்றும் வீழ்வதில்லை. இந்தத் தொகுப்பிலுள்ள "மெய்யுணர்தல்" என்னும் சிறிய பாடல் உபநிடதக் கருத்தைக் கொண்ட "புதியவிருந்தாளி" "பனித்துளி" ஆகியவை, பனித்துளிக்குள் காணப்படும் வானத்தின் விரிவையும், வானத்திடைவெளியில் வந்துலவும், சிறுகல் முதல் பெருங்கோளம் வரை இடைப்பட்ட பொருள்களும் மாபெரும் தத்துவப் பேருண்மைகளாக வடித்துக்காட்டப்படுகின்றன.

இத்தொகுதியிலுள்ள பெரும்பாலான பாடல்கள், பல்வேறு வாழ்வின் சிக்கல்களான, வறுமை, ஏற்றத்தாழ்வு, ஒடுக்கப்படும் உழைப்பாளிகள், உழவர்நிலை ஆகியவற்றை மையமாகக் கொண்டன. "புதியவிருந்தாளி" என்னும் பாடல், தெய்வத்தன்மைபற்றிப் பாடுவதிலிருந்து மாறி மாந்தர் நிலைமைகளைப் பாடத்தொடங்கியதைக் காட்டுகிறது. சமுதாயத்தின் பொதுநலம் என்பது நாட்டு எல்லைகளைக் கடந்த பொதுவுணர்வு. இந்த வகையில் "இருட்டுக்கு முன்பு" என்னும் பெரியநூல் அதே ஆண்டில் வெளிவந்தது. அபிசீனியாவில் கட்டவிழ்த்த விடப்பட்ட வன்முறையாளரின் கொடுமைகளை இது விவரிக்கின்றது. இத்தியோப்பியா தாய், நாட்டு விடுதலையென்னும் குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு மனித சமுதாயம் தங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கூக்குரலிடுகிறாள். தியாகம் அவளுக்குப் பாதுகாப்பு நிழல் தரமுன்வரவில்லை. நேர்மையின் கைகள் கட்டப்பட்டு அவனுடைய மனைவியாகிய நீதி கடத்திச் செல்லப்படுகிறாள். அவளிருக்குமிடம் அரசியல் திரைகளால் மூடப்படுகிறது. நேர்மையின் அமைச்சனாகிய உண்மை சிறையிடப்ப்டுகிறான். மதம், அறிவியல், கலைகள் ஆகிய போர்வீரர்கள் உண்மையையும், உரிமையையும் காவல் காக்க கடமைப்பட்டவர்கள். சமயத்தலைவர்களின் பிடியில் சிக்கிய மதத்திற்கு செருக்கு என்னும் போதை தலைக்கு ஏறிவிடுகிறது. அறிவியல் சொல்லும் படைக்கலன்களைச் செய்து முடிப்பதற்கான பணியிலேயே தன் முழுநேரத்தையுஞ் செலவிட வேண்டியிருக்கிறது. மக்களுக்கு, மக்களிடையில் பண்பாட்டை வளர்ப்பதே தன்நோக்கம் என்பதை மறந்துவிட்ட கலைகள், வெறுமனே மகிழ்வூட்டும் பொழுது போக்குக்கருவிகளாகி விட்டன. வன்முறைக்கும்பல்கள், வலிவுகுறைந்த நாடுகளை தம்கைப்பிடிக்குள் அடக்கிக்கொண்டு தலைவிரித்தாடுகின்றன. உலக அமைதிக்காக

அமைக்கப்பட்ட பன்னாட்டு நிறுவனங்கள் செய்வதறியாது வாய் மூடிக்கிடக்கின்றன. அதனால் வருங்காலம் உண்மையாகவே இருட்டுலகமாகவே இருக்கும்.

சர்தார் கே.எம். பனிக்கர் பின்வருமாறு எழுதுகிறார். இந்த இலக்கியமொழியாக்கத்தின் சிறப்பு ஐயத்திற்கிடமின்றி அனைவராலும் போற்றப்படுகின்றது. எத்தியோப்பிய நாட்டு மலைகள், பாலங்கள், ஆறுகள், மக்களின் நிலை ஆகியவற்றின் உண்மைப்படப்பிடிப்புகள் பாத்திரங்களின் மூலமாக ஒவ்வொரு வரியிலும் பளிச்சிடுகின்றன. கவிஞரின் நேர்மையான ஈடுபாடும் உண்மையான உழைப்பும், இதன்வாயிலாகப் புலப்படுகின்றன.

சில ஆண்டுகளுக்குப் பிறகு 1975-இல் இந்நூலின் ஐந்தாம் பதிப்பிற்கு அணிந்துரை எழுதிய கேரள மேனாள் முதலமைச்சர் திரு. சி. அச்சுதமேனன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "உலகின் ஒரு மூலையில் வாழும் எளிய ஆசிரியர் ஒருவர் தேசிய எல்லைகளைக் கடந்து எத்தியோப்பிய நாட்டு மக்களின் துன்பத்தைத் தன் துன்பமாக மட்டுமன்றி மாந்தவினத்தின் துன்பமாகவே கருதிக்காப்பியம் படைத்திருப்பதைக் கண்டு இவரைப் புலவராக பெற்றதற்காக ஒவ்வொரு மலையாளியும் பெருமை கொள்ளலாம்".

மாந்தவினத்தை இரண்டாம் உலகப்போர் என்னும் வடிவில் மீண்டும் இருள்சூழந்து கொண்டது. அன்றிலிருந்து உலகின் பல்வேறு நாட்டு நிகழ்ச்சிகள் புலவரின் உள்ளத்தை அலைக்கழித்தன. அதில் தேசிய விடுதலை உணர்வு பெரும்பங்கு பெற்றது. குழப்பமான அந்தக்காலத்தில் தன்னலத்தை மட்டும் கருதி வாழ்கின்ற வாழ்க்கை இயலாமல் போய்விட்டது.

மாந்தவினத்தில் உழைக்கும் பாட்டாளிகளின் கைவிலங்குகளை உடைத்தெறிவதே உண்மையான விடுதலையாகக் கருதிய பொதுவுடைமைப் புரட்சி பொங்கிய அந்தப் பதிற்றாண்டில் உலகமெங்கும் சிந்தனையாளர் உள்ளங்களை பொதுவுடைமைக் கருத்து கவர்ந்தது. இந்திய நாட்டுப் புலவர் அனைவரும் ஆர்வம் ததும்ப இதில் ஈடுபாடு காட்டினர். பொதுவுடைமைக் கருத்தைப் புகழ்ந்து 1936 ஆம் ஆண்டில் 'ஜி' எழுதிய "நாளை" என்னும் பாடல் ஆட்சிக்கெதிராக அணிவகுத்து போராடத்தூண்டியது. அதன் தொடக்க முழக்கமே இவ்வாறு இருந்தது.

> "வானில் பிறந்த விண்மீனே! இந்நேரம் வரையிலும் உன்
> தகுதியையெண்ணி நீ செருக்குக் கொண்டிருக்கலாம்.
> உன்பிறப்புக் காரணமாகவே உனக்கு அத்தனைப்
> பெருமைகளும் வந்ததாகவும் நினைத்திருக்கலாம்.

ஆனால் இப்பொழுது ஆயிரங்கதிர்வீசி கதிரவன் வரும்
விடியல் நெருங்கிவிட்டது.
இனி நீ ஒளி மங்கி சாம்பல் பூத்து நடுநடுங்கி மறைந்துவிட
வேண்டியதுதான்.

விண்மீன்கள் அடக்கியாளும் மேட்டுக் குடிமகனாக உருவகிக்கப் பட்டுள்ளன. இது பொதுவுடைமைப் புரட்சியையே காட்டுகிறது. "நாளை விடியல்" என்னும் பாடலில் நீலவான் பட்டாடையில் சிவப்பு மலரை வைத்தது போலச் சூரியன் உதிக்கும் காட்சி வருணிக்கப்படுவதால், குருதி சிந்தும் போராட்டத்தையே அவர் குறிப்பிடுகின்றார் என்று உணரலாம். அந்த வருணனைகள் தொழிற்புரட்சியைச் சுட்டாமல் வேளாண்மை புரட்சியைச் சுட்டுவதாக இது தோன்றுகிறது. உழவன் பாராட்டப்படுகிறான். அவனுக்குள் விடுதலை வேட்கை கொழுந்துவிட்டு எரிகிறது. சாதிப் போராட்டத்தைப்பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. முதலாளித்துவ அமைப்பில் சமமான வாய்ப்புகளும், தகுதிப்பாடுகளுமே அவனுடைய கனவாகிறது. உழவன் கண்டறிந்த கனவே பாட்டின் வாயிலாக புரட்சிக் கனலைத் தூண்டுகிறது.

கொச்சி அரசின் கீழிருந்த உயர்ந்த கல்வி நிறுவனமாகிய மகாராசா கல்லூரியில் கீழைமொழிகள் பயிற்றுந்துறையில் ஒரு விரிவுரையாளர் பதவி வெறுமையாயிருந்தது. ஒரு சிலரே அப்பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர். ஆசிரியர் பயிற்சிப்பள்ளியில் ஆசிரியராக விருந்த 'ஜி' யிக்கு அப்பணி எளிதிற் கிடைக்க வாய்ப்பிருந்தது. இதன் விளைவாக இவர்மீது பொறாமை கொண்ட சிலர், இவர் ஒரு பொதுவுடைமைக்காரர் என்பதற்கு "நாளை" என்னும் பாட்டையே சான்றாகக் காட்டி இவருக்கு வேலை தரக்கூடாதென்று மொட்டை மடல் எழுதினார்கள். கொச்சி அரசின் திவானும் மற்ற அதிகாரிகளும் இதனைக் கடுமையாகவே கருதி, அரசு அதிகாரிகள் பொதுவுடைமைக்காரர்களாகி அரசியலில் ஈடுபடுவ்து பொறுத்துக் கொள்ள முடியாதது என்னுங் கருத்தையுடையவராகி 'ஜி'யின் மீது ஒழுங்கு நடவடிக்கையெடுத்து ஆசிரியப்பணியிலிருந்து நீக்கிவிடவுந் துணிந்தனர். ஆனால் சர்தார். கே.எம். பணிக்கர் தக்க நேரத்தில் தலையிட்டதால் நிலைமை திசை திரும்பியது. ஆசிரியர்கள் பொதுவுடைமைக் கருத்தைப்பரப்பக்கூடாதென்றும், 'ஜி' அத்தகு கருத்துக்களைப் பரப்பினார் என்பதற்கு, அவரது பாடல்களே சான்றாகுமென்றும் திவான் குறிப்பிட்டிருந்தார்.

"மொட்டைமடல்" எழுதுபவர்கள் துணிச்சல் இல்லாத கோழைகள் என்றும், தன் கருத்துக்களைத் தன்பெயரிலேயே துணிச்சலாக அச்சிட்டு வெளியிட்ட புலவர் 'ஜி' பாராட்டத்தக்கவர் என்றும் அவர் பாடலெழுதிய நேரத்தில் அவர்மீது எத்தகைய குற்றச்சாட்டுகளையுங் கூறவில்லை

என்பதையும் 'ஜி' யிக்கு உயர்பதவி கிடைக்கக் கூடாதென்று பொறாமைப்பட்டவர்களே அந்த மொட்டை மடல் எழுதியிருக்கிறார்கள் என்றும் பணிக்கர் தெளிவுப்படுத்தியதைப் புரிந்துகொண்ட திவான் 'ஜி' யிக்குப் பதவி உயர்வும், அமர்த்தாணையும் 1937-இல் பிறப்பித்தார்.

மற்ற பாடல் தொகுப்புகள் நாளடைவில் வெளிவந்தாலும் "பூப்படையல்" என்னும் பாடல் தொகுப்பு 1943-இல் வெளி வந்தது. இத்தொகுப்பிலுள்ள "விண்மீனின் பாட்டு" "காலம்" "கடலுக்கு விடைபேறு" ஆகிய மூன்று பாடல்களும் சிறப்பாகக் குறிக்கத்தக்கவை.

"விண்மீனின் பாடலில்" தன்னையே "ஒப்புரவு" (தியாகம்) செய்து கொள்ளும் உணர்வால் மேலுந்தப்பட்டு விண்மீன் தனக்குத்தானே பேசிக்கொள்வது வருணிக்கப்படுகிறது.

"என் வாழ்வுத்திரி எரியட்டும்.

அதற்கு அன்பே எண்ணெய். துயரத்தீ புனிதமாக எரிகிறது.

புகைக் கொழுந்துகள் என்னுடைய பெருமூச்சால் கடவுள் நடந்துவரும் வானப் பாதையை

மாசுப்படுத்துமோ என அஞ்சுகிறேன்.

எதையும் உருக்கும் வெப்பம் என் இதயத்தை அழுத்துகிறது.

என் கடைசிமூச்சுவரை அதைப்பொறுத்துக்கொண்டு நான்

எரிகிறேன். இத்துயரினை யாருடனும் பகிர்ந்து கொள்ள இயலாது.

சுடுகாட்டு நெருப்பு சூழ்ந்து கொண்டது. இருப்பினும் தொலைவில் நடந்து செல்லும் வழிப்போக்கர்கள் ஏதோ வெளிச்சம் கண் சிமிட்டுகிறது என்று அமைதிப்புன்முறுவல் பூக்கின்றனர்

அற்பப் புல்லினும் சிறிய அளவுடைய நான்,

அளந்தறியாத பேரண்டத்தில் மூழ்கிவிடுவேன் அல்லது

சாம்பலாகி விடுவேன்.

காலக்கடலில் நீந்திச்செல்லும் நான் வெறுந்தீப்பந்தந்தான்

என்பது எனக்கு உண்மையாகத் தெரிகிறது.

ஆனால் உலக உயிர்கள் அமைதிக்கு வழி காட்டும் கலங்கரை விளக்கமாக என்னை நினைக்கின்றன.

விண்மீன் வெடித்துச்சிதறி பிடிசாம்பலாய் பறந்தோடிவிடும் என்னும் அறிவியல் உண்மையைத் தன் கற்பனைத் திறனைக்கூட்டிப், பின்னிப் பிணைந்து சோவியத்து நாட்டு புரட்சியின் பின்னணி தநது புலவர் விளக்கிக் காட்டியிருக்கிறார்.

"காலம்" என்னும் அகவற் பாடலில் வியப்பையும் அச்சவுணர்வையும் இழையோட விட்டிருக்கிறார். காலத்தின் நீட்சியை ஒரு பாம்பாக வடிவமைத்துக்காட்டுகிறார். இரவும் பகலும் இந்தப் பாம்பின் இரட்டை நாக்குகள். அந்தப் பாம்பு உரித்த தோலே நீலவானமாக காட்சி தருகிறது. வானத்துக் கோள்களெல்லாம் வானப்பறவையின் முட்டைகள். மிகப்பெரிய எதிர்பார்ப்புகளோடு தன் முட்டைகளை வானப்பறவை அடைக்காக்கிறது. அந்தோ! முட்டைகளையெல்லாம் காலம் என்னும் பாம்பு உறிஞ்சிக் குடித்துவிட்டது என்பது வானப்பறவைக்குத் தெரியும். வானப்பறவையால் அடைக்காக்கப்படுவன வெறும் காலி முட்டைகளே. எல்லையற்ற விடிவானத்தில் எண்ணிக்கை கடந்து விளங்கும் கோள்கள் எத்தனையோ கோடி உயிர்கள் வாழ்ந்தாலும் அவை நிலையற்றன என்பதை இப்பாடல் விளக்கிக்காட்டுகிறது.

"கடலுக்கு விடைகொடுத்தல்" என்னும் தலைப்பிட்ட ஒருவகை நான்கு அகவற்பாடலில் தன் கூற்றாக வருங்கருத்துகள் சுவையாக அமைந்துள்ளன. ஏனெனில் இது தன் வரலாற்றைத் தானே கூறுவதாக அமைந்துள்ளது. அண்டப்பெருவெளியின் ஆனந்தப்பண் கேட்டு விழித்தெழுந்த காலம் என்னும் பாம்பு பல்லாயிரந்தலைகளைத் தூக்கி, பகட்டாகப் படம் விரித்து, அண்ட பேரண்டமெல்லாம் அஞ்சிநடுங்கும் வண்ணம் ஆனந்த நடனமிடத் தொடங்கிவிட்டது. அண்டப் பெருவெளியின் ஆனந்தப்பண் மிக மெதுவாகக் கேட்கக்கூடியது எனினும், கடலின் காதுகளுக்கு மிகத் தெளிவாகப் புலனாகிறது. அழியாத பேராற்றல் காலக்கண்ணாடியில் காணப்படுவது போன்று 'ஜி' யின் நெஞ்சிலும் நீங்காத இடம்பெற்று தெய்வீகப்பாடல்களாக உருவெடுத்தன. காலப்பாம்பின் நாட்டியத்தில் மயங்கிய புலவர், அதன் பண்ணிசைக்கேற்ப தானும் நாட்டிய மாடுகிறார். இரண்டாம் பாடலில் இயற்கையின் அழகுணர்வையெல்லாம் தன் அலைக்கரங்களால் நீந்தி, கடல் உலகுக்குக்காட்டுவதாகக் கூறப்படுகிறது. அழகுணர்வைப் புலப்படுத்துவதே உண்மையான புலவனின் சிறந்த தன்மையாகும். மூன்றாம் பாடலில் அன்புமாறாத காதலனாக கடல் வருணிக்கப்படுகிறது. ஐந்தாம் பிறை நாளின் அந்திப்பெண்ணே கடலின் காதலி. நிலவு அமுதம் பொழிகிறது. தன் நுரையிதழ்களால் அந்த அமுதத்தைச் சுவைத்து கடல் புன்முறுவல் பூத்து மகிழ்கிறது. அழியாத அந்த ஆனந்த மேலீட்டால் மெய்மறந்து பாடுகிறது. நிலவுக் காதலி கடற்காதலன் மார்பில் தலைசாய்த்துக்கொள்கிறாள். அவளுடைய மூச்சுக்காற்றால் கடல் அலைகள் நாட்டியமாடுகின்றன. அவளுடைய கருங்கூந்தலிலிருந்து கீழே விழும் ஆயிரக்கணக்கான மல்லிகை மொட்டுகள் விண்மீன்களாய்த் தோற்றமளிக்கின்றன.

உலகியற்கையின் தோற்றங்கள் அழியக்கூடியனவாய் இருந்தாலும் அவற்றைப் பின்னிப் பிணைக்கும் காதல் உணர்வு என்று அழியாதது என்பதை இப்பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. நான்காம் பாடலில் கடல் வேறுவகையாக வருணித்துக் காட்டப்படுகிறது. அமைதியற்ற மனக்குமுறல்களோடு கொந்தளித்துக் குமுறுங்கடல் நம் மனக்கண் முன் தெரிகிறது. புரட்சிக்கனலைப் பாட்டாகப் பாடிக்கொண்டு அலைகள் பீறிட்டு எழுகின்றன. அசைவற்ற நிலத்தை அலைக்கழிக்கின்றன. இத்தகைய பாடல்கள் கவிதைப்பாங்கின் ஒரு புதிய திருப்பத்தையுண்டாக்குகின்றன. பொதுவுடைமைப் புரட்சியால் ஏற்பட்ட மறுமலர்ச்சிகள் எல்லாம் கற்பனைத் திறனால், கவிதைச் சிற்பங்களாக வடித்திருக்கிறார் என்றுங்கூறலாம். "காற்றுக்கு விடைகொடுத்தல்" என்னும் இப்பாடல் வங்காள மொழியில் சி.ஆர்.தாசு எழுதிய பாடல்களை ஒத்திருக்கின்றன என்று திறனாய்வாளர் கூறுகின்றனர். தன் நீண்ட கடற்பயணத்தின் போது கடலைக் கற்பனைத் திறனோடு கூர்ந்து நோக்கிக், கவிதை மெருகு கூட்டிக், காவியச்சுவையேற்றி அழியாத இலக்கியமாக்கிய சி.ஆர். தாசின் பாடலும் கோவின் பாடலும் வெவ்வேறானவை எனினும் பாம்பும் அலைகளும் பாடல் பொருள்களாக இருக்கின்றன. பாம்பு என்னும் உருவகம் ஆதியந்தமற்ற இயற்கையின் உருவகமாக சி.ஆர். தாசு படைத்துக்காட்டுகிறார். அண்டப் பெருவெளியின் ஆனந்தப்பண் கேட்டு நடனமிடும் கடலைப் பாம்பாக 'ஜி' வருணித்துக் காட்டுகிறார். பாம்பு வருணிக்கப்படுகிறது என்பதைத் தவிர வருணனையிலும், உட்கருத்திலும் பொருத்தம் இருப்பதாகக் கூற இயலாது. "ஊர்வசி" என்னும் பாடலில் தாகூர் பாம்பினை உருவகித்துப் பாடியுள்ளார். இந்திய இலக்கியங்களை ஒப்பிட்டு ஆராயும் ஆய்வு மேற்கொள்ளப்படின், பல்வேறு மொழிகளில் உள்ள இந்திய இலக்கியங்கள் அனைத்திலும், பாம்பை உருவகித்துப்பாடும் பாங்கு பரவிக்கிடப்பதைக் கண்டறியக்கூடும்

"கடலுக்கு விடைகொடுத்தல்" 'என்னும் பாடலில் தன் கற்பனைத் திறனால் வானத்தியல்புகளை வண்ணமுற விளக்கியிருக்கிறார் முதல் மூன்று பாடல்கள் படிப்படியான வளர்ச்சிப் படிநிலைகளிலும், நான்காவது பாடல் மாபெரும் புரட்சித்திருப்பத்தையும் புலப்படுத்துகின்றது. ஒருவர் கற்பனையை ஒருவர் பின்பற்றுவது என்பது ஒவ்வாததாகும். ஏனெனில் ஒருவர் கற்பனையை மற்றொருவர் பின்பற்றும்போது அவரது சொந்தக்கற்பனை பயனற்றதாகி விடுகிறது. ஆதலால் கற்பனையைக் கடன்வாங்குவது என்பது ஏற்கத்தக்கதன்று.

அரிவம்ச ராய் பச்சன் என்பவரால் 1957 ஆம் ஆண்டு இப்பாடல் இந்தி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.

1944 இல் "சந்தியா" என்னும் நாடகம் வெளியிடப்பட்டது. புராணத்தில் வரும் அகலிகையின் கதையை விடியற் பொழுதாகவும், மீண்டும் இருட்டுப்பெண்ணாகவும், மாறிவரும் பகலிரவுகளோடு ஒப்புமைப்படுத்திக் கற்பனை செய்திருக்கும் பாங்கு, வேதத்தில் பொதிந்திருக்கும் புராணக் கதைக்குப் புதுவடிவம் தந்ததுபோலுள்ளது. பகற்காலம் கௌதம முனிவராகவும், ஆகாயம் திருட்டுக்காதலனாகிய இந்திரனாகவும் வருணிக்கப்படுகிறது. வானமாகிய இந்திரன் தன் கள்ளக்காதலை விடிவெள்ளியின் வாயிலாகத் தூது அனுப்புகிறான். சந்தியா என்னும் அந்த மாலைப்பெண்ணின் மனக்கருத்தை இந்திரன் பக்கம் திசைதிருப்பச் செய்த முயற்சி வெற்றிகரமாக முடிகிறது. முதலில் சந்தியா என்னும் அந்திமாலைப்பெண் தயங்கினாலும், வானமும் மண்ணும் சந்திக்கும் அந்திமாலை அடிவானத்தில் கள்ளக்காதலனைச் சந்திக்க ஒப்புக்கொள்கிறாள். அந்த நேரத்தில் அங்குச் சென்றது மட்டுமன்று, தன்னைமறியாது மயங்கிக் கள்ளக்காதலனின் மார்பில் சாய்ந்துவிடுகிறாள். கணநேரத்தில் இதைப் பார்த்துவிட்ட பகல்நேரம் என்னும், கௌதம முனிவரின் நெருப்புப்பார்வை, கோடியிடி போல் அவள்மேல் விழுகிறது. பொன்மயமான அவள் உடல், கருங்கற்பாறையாகக் கறுத்துப் போய்விடுகிறது. உலகஉயிர்கள் எல்லாம் உற்றுப்பார்க்கின்றன. வானமும், மண்ணும் ஒரே இருட்டாய்த்தெரிகிறது.

திரு. கிருட்டிணசர்மா என்பவர் இதனை வடமொழியில் மொழிபெயர்த்தார். சோ நோபல் என்னும் செருமானிய அறிஞர் பின்வருமாறு கூறுகிறார். "வேதகாலப் புலவர்களின் இலக்கியக்கற்பனைகளைக் "சந்தியா" என்னும் பாடல் நிரூபிக்கிறது. இந்தியாவிலுள்ள மிகச் சிறியமொழியாகிய மலையாளத்திலும் அதனை எழுதமுடியும் என்னும் செய்தி எனக்குப் பெரிதும் வியப்பூட்டுகிறது".

1938-39 ஆம் ஆண்டுகளில் புலவரின் உடல்நலம் பெரிதும் குன்றத் தொடங்கியது. முழுமையான ஓய்வு தேவைப்பட்டது. ஆயின் அளவுக்கதிகமான கண்டிப்புக்காரரான கல்லூரி முதல்வர், அவருக்கு மருத்துவவிடுப்புத்தர மறுத்துவிட்டார் இது பெரிதும் போராட்டத்தை உருவாக்கியது. அவருக்கு உடல்நலம் சற்றுத்தேறியபிறகு மருத்துவவிடுப்பு வழங்கப்பட்டது. அந்த மருத்துவவிடுப்புக்காலத்தில், காளிதாசனின் மேகதூதத்தை மொழிபெயர்த்தார். இதற்குரிய யாப்பமைதியாக பதினேழு அசை நெடிலடிக்கு மாற்றாக இருபத்தியோரசை நெடிலடிகளைப் பயன்படுத்தினார். அதனால் பாட்டு மேலும் நெகிழ்வுடைதாயிற்று. கற்பனை வளமும், உணர்ச்சிப்பெருக்கும் சிறிதும் குன்றாமல், காளிதாசனின் பாடல்களை மொழிபெயர்த்தது இமாலய சாதனையாகும். அத்தகைய சாதனையில் தன்சொந்தக் கற்பனையையுங்கட்டி, மலையாளத்தில் ஒரு புதிய

படைப்பிலக்கியமாகவே செய்ததால், இந்நூல் பலபதிப்புகளாக வெளிவந்தது. ஒவ்வொரு பதிப்பும் திருந்திய பதிப்பாக வெளிவந்தது. மலையாள மொழிபெயர்ப்பிலக்கியங்களிலேயே இது முதலிடம் பெற்றது. இதற்கு மலையாளத்தில் "மேகச்சாயா" (மேகத்தின் நிழல்) என்று பெயரிட்டார்.

1939 இல் இரவிக்கு ராதா என்னும் தங்கை தோன்றியதால், குடும்ப உறுப்பினர் தொகையில் ஒரு எண் கூடிற்று.

பாரசீகக் கவிஞர்களைப்பற்றிய கட்டுரைத் தொகுப்பாகிய "இராப்பாடிகள்" (குயில்கள்) என்னும் நூலை அடுத்து "சிரத்யோபகாரம்" என்னும் தலைப்பில் பல்வேறு கட்டுரைகள் அடங்கிய தொகுதிநூல் வெளிவந்தது. அதற்கடுத்து "லேக்கமாலா" என்னும் கட்டுரைத் தொகுப்பும் வெளியிடப்பெற்றது. எளிமை, அழகு, கற்பனையால் ஈர்க்குந்திறம், கவிதைவளம், தெளிவு, தெளிந்த உரைநடையாக்கம், ஆகியவற்றால் மலையாள இலக்கியவுலகில் 'ஜி' யின் புகழ், குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிர்ந்தது.

4. பொதுவுடைமை, மாந்தநேயம் தேசியம்

"நாளை" என்னும் நூல் வெளியிடப்பட்ட 1936 ஆம் ஆண்டு மலையாள இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கவொன்றாகும். சிறிது காலத்திற்கு முன்பு தோன்றிய மறுமலர்ச்சி இயக்கங்கள் முளைவிட்டு வளர்ந்து பரவத்தொடங்கின. சாகித்திய பரிசத்தின் ஆண்டு மாநாட்டின் போது மறுமலர்ச்சி இயக்க எழுத்தாளர்கள் அதில் சிறப்பாகப் பங்கு பெற்றதால் ஒரு புதிய திருப்புமுனை தோன்றியது. அக்காலத்தில் அது வளரும் இலக்கிய மறுமலர்ச்சியாகக் கருதப்பட்டது. அந்த மாநாட்டிற்கு 'ஜி' தலைமை தாங்கினார். அம் மாநாட்டின் போது அவர் ஆற்றிய உரை உலக அளவில் பாசிச எதிர்ப்பை விளக்குவதாகவும், உள்நாட்டளவில் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும், எழுத்தாளர்களும் நாட்டிற்கு ஆற்றவேண்டிய கடமைகளை பொறுப்புணர்வோடு விளக்குவதாக அமைந்திருந்தது. இதனையடுத்து பெரும்புலவர் வள்ளத்தோளின் மகனாகிய திரு. அச்சுதகுருப்பு தானே அமைப்பாளராகி மறுமலர்ச்சி எழுத்தாளர் இயக்கங்களுக்குத் தயங்காமல் அனைத்து உதவிகளையும் செய்தார். கேசரி பாலகிருட்டிணபிள்ளை என்னும் புகழ்பெற்ற பெருமகனாரும், எம்.பி.பால் என்னும் சிறந்த இலக்கியத் திறனாய்வாளரும் இந்த மறுமலர்ச்சி இயக்கப்பணிகட்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் தந்து வழிகாட்டிகளாய் அமைந்தார்கள். அவர்கள் பொதுவுடைமைக்கட்சிக்காரர்களாக இல்லாவிடினும். பொதுவுடைமைக் கருத்துகளை நன்கு விளக்கிப் பொதுமக்களிடையே மறுமலர்ச்சி எண்ணங்களைப் பரப்பும், புத்திலக்கியப் படைப்புகளுக்கு தம் முழு ஒத்துழைப்பையும் நல்கினர். கேசவதேவ், தகழி சிவசங்கரன் பிள்ளை, பொன்குன்னம் வார்க்கி ஆகிய சிறுகதை எழுத்தாளர்களும், பேராசிரியர் ஜோசப்பு முண்டசேரி, எம். எசு. தேவதாஸ், கே. தாமோதரன் போன்ற இலக்கியத் திறனாய்வாளர்களும், கே.பி.ஜி. போன்ற கவிஞர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள். இந்த மாநாட்டிற்கும் 'ஜி' யே தலைமை தாங்கினார். இது அறிவுப்புரட்சியாயின் பழமையானவற்றையெல்லாம் அழித்துவிடவேண்டும் என்பது 'ஜி' யின் நோக்கமன்று. தன்னல நோக்கமெதுவும் இல்லாமல் தன் கடமைகளைச் செய்வனே செய்யவேண்டுமென்று பகவத்கீதையில் உள்ள கருமயோகத்தில் கூறப்பட்ட நன்னெறிகளை 'ஜி' எப்பொழுதும் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து வந்தார். தன்னுடைய தனித்தன்மை என்பது ஆக்கச் செயல்களுக்கு அடிகோலுவதாக அமைந்ததால், மறுமலர்ச்சி, முன்னேற்றப்பணிகளில் முட்டுப்பாடு ஏற்படவில்லை. எனினும்

பழமையானவை எவையும் முன்னேற்றப்பாதைக்கு வழிவகுக்காது என்று சிலர் கருதிக்கொண்டிருந்தனர்.

கட்டை மாட்டுவண்டிக் காலமாகிய பழங்காலத்திற்கு நம்மை இட்டுச்செல்ல இவர் முயலுகிறார் என்று 'ஜி'யின் மீது குற்றஞ்சாட்டினர். தேவதாசு என்னும் திறனாய்வாளர் எழுத்தாளர்களின் மனப்பாங்கினை உய்த்துணர்ந்து, அவர்களுள் பழமையை விட முடியாமலும், புதுமையை ஒதுக்கித் தள்ளாமலும் நிற்பவர்களின் எழுத்துப்பாங்கினை விளக்கிக்காட்டினார். அரசியலில் நேரு தனக்கென்று நடுநிலைப்பாதை வகுத்துக்கொண்டது போலக், கவிதையுலகில் 'ஜி'யும் நடுநிலையான பாதையை வகுத்துக்கொண்டார் என்று தேவதாசு குறிப்பிடுகின்றார்.

அடுத்துக் கோட்டயத்தில் நிகழ்ந்த மறுமலர்ச்சி எழுத்தாளர் மாநாட்டில் அரிந்திரநாத் சட்டோபாத்யாயா பங்கு பெற்றார். அந்த மாநாட்டில் 'ஜி' ஆற்றிய உரையும், இருவேறுபட்ட கருத்துப்பாங்குடைய எழுத்தாளர்களிடையில் நடுநிலைக் கூற்றாக அமைந்திருந்தது. "குழப்பத்தையோ, மனத்தாக்கத்தையோ விளைவிக்கும் சமூக அனுபவத்தை மையமாகக் கொண்டு, எழுத்தாளர்கள் வடிக்கும் படைப்பிலக்கியங்களில் அத்தகைய கருத்துகளே கருவாக அமைந்திருத்தலைக் காணலாம். அல்லது எழுத்தாளரின் காலத்தில் சமகாலத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் இலக்கியத்தில் வடிக்கப்படுவது தகாது என்னும் கூற்று முற்றிலும் தவறான கருத்தாகும் மக்களை மீட்டெடுத்து முன்னேற்றப்பாதையில் செலுத்துவதற்கு பொதுவுடைமை நெறிகளே சிறந்தவை என்று எழுத்தாளர்கள் கருதுவாராயின், அதற்கு ஏற்றவகையில் அத்தகு கருத்துகளைத் தம் படைப்பிலக்கியங்களில் புலப்படுத்த வேண்டும். உலகியல், பொருளாதாரப் புரட்சி தொடர்பான கோட்பாடுகளை மட்டும் விரித்துச்சொல்வதில் எனக்கு உடன்பாடில்லை. பொதுவுடைமைக் கோட்பாட்டின்படி அனைவரையும் உடன்பிறந்தவர்களாகக் கருதி நடத்த வேண்டுமென்பதையும், மாந்தவினம் முழுவதும் ஒன்றுபட்டு ஓரணியில் நிற்க வேண்டுமென்பதையும், நான் முற்றிலும் வரவேற்கிறேன். மாந்தவினம் எல்லாவற்றிற்கும் பொதுவான இன்பதுன்பவுணர்வுகளை யாவரும் சமமாகப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதையும் நான் ஏற்றுக்கொள்வேன். துன்பமில்லாத தோற்றம் அல்லது படைப்பு என்பது உலகில் எங்கும் இல்லை. குருதிச்சிந்தி துன்பத்தையேற்றுத்தான் மறுமலர்ச்சி செய்யமுடியும் என்பதை நான் நம்பவில்லை. குருதிச்சிந்தாமல் அன்புநெறியிலேயே அதை அடைய விரும்புகிறேன். இதுவே அவர் அம் மாநாட்டிலாற்றிய உரையின் மையக்கருத்தாக அமைந்துள்ளது. 'ஜி'யின் ஆற்றொழுக்கான இனிய சொற்பொழிவைக் கேட்டு சட்டோபாத்யாயா பெரிதும் மகிழ்ந்தார். 'ஜி'யின் சொற்பொழிவை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பொழுது, சட்டோபாத்யாயா 'ஜி'யை மனமகிழ்ந்து பாராட்டினார்.

1945-ஆம் ஆண்டில் செங்கதிர்கள் என்னும் பாடல்தொகுப்பை வெளியிட்டார். இடதுசாரிப் பொதுவுடைமையாளரின் கருத்தை எதிரொலிப்பதாக அது அமைந்திருந்தது. கதிரவனின் செங்கதிர்கள் உதயமாகும் மறுமலர்ச்சியையும், தினைக்கதிர்கள் வேளாண்மைப் பெருக்கத்தையும் குறிப்பாகப் புலப்படுத்துகின்றன. அடக்குமுறையாளர்களை எதிர்த்து அனைவருக்கும் சமவாய்ப்பு என்னும் பொதுவுடைமைக் கருத்து பரப்பும் நோக்கத்தை இப்பாடல்கள் வெளிப்படுத்த தயங்கவில்லை. ஆனால் இதற்கான போராட்டத்தில் குருதி சிந்தும் வன்முறை தலையெடுத்தல் ஆகாது என்று வலியுறுத்துகிறார். திறனாய்வாளர் இவரது கருத்தை வன்மையாக மறுத்துள்ளனர். இவரது அணுகுமுறை வேட்டை நாயை அவிழ்த்துவிட்டு, முயலையும் காப்பாற்ற முயல்வது போன்றுள்ளது என்று எள்ளிநகையாடினர். இந்திய எழுத்தாளர் எவருக்கும் அவரது மனப்பாங்கில் புலப்படும் உண்மைக்காட்சி இவ்வாறே இருக்கும். 'ஜி'யின் பாடல்கள் இயல்பாகவே போருக்கு வித்திடும் வன்முறைக்குச் சிறிது இடந்தராதனவாகவிருந்தன. வருண வேறுபாடுகளால் ஒற்றுமை இழந்த இந்திய மக்களின் முரன்பட்ட நிலைகளைத் தன் கவிதை வாயிலாகப் படம் பிடித்துக்காட்டி உறங்கிக் கிடந்த மக்களைத் தட்டியெழுப்புவதைக் 'ஜி' தன் நோக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு பாடலில் பெருந்தன்மை மிகுந்த ஒரு குடும்பப் பெண்ணின் பாங்கைப் புலப்படுத்துகிறார். குடிக்க மறுக்கும் ஒரு பூனைக்கு அவள் பாலூட்ட முயல்கிறாள். ஒரு பிச்சைக்காரச் சிறுவன் அதை உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறான். "நான் ஏன் மாந்தப் பிறவியெடுத்தேன்?" இதை நினைத்து அவன் பெருமூச்சு விடுகிறான். திடுக்கிட்ட அவள், அந்த சிறுவனை பார்த்துச் சீறினாள்.

"கருமூஞ்சிப்பயலே! இங்கிருந்து போய்விடு
உன்னுடைய கொள்ளிப் பார்வை அல்லி
மலர்மீது வீழாது இருக்கட்டும்"

கவிஞர் பேசுகிறார்.

அதிர்ச்சியுற்று வானத்தை உற்று நோக்கினான்.

அந்த வருத்தப் பார்வையில் தெறித்த தீ

கடவுளையே சாம்பலாக்கிவிடுவது போல் தெரிந்தது. அவன்விட்ட பெருமூச்சு தருமமென்னும் கோட்டையின்

அடித்தளத்தையே அசைப்பதாக இருந்தது.

சயித்திர படகம் எனனும் பாடலில உருசிய நாட்டுப்போா வீரனின் வெற்றிகள் புகழப படுகின்றன (வெறறியின் எக்காளம்) இது ஒரு உரைநடைபபாட்டு அபபாடலகள சிலருக்கு பொதுவுடைமைக் கொள்கை பரப்பும் செயலாகவும மறறும சிலருக்கு ஒனறுமறற உளறலாகவும தோன்றின 1935-க்கு பிறகு பாசிசக்கொள்கைகள் எதிர்பபுக்குள்ளாயின 'பாரத இருதயம' 'மலாததோட்டம' என்னும இரணடு பாடலகளிலும் வலலரசுகளின் கொடுங்கோனமை கடிநதுரைக்கப்படுகிறது

'மலாததோட்டம' எனனும பாடலில் வலை பினனி வைததுக்கொணடு இரையை எதிாப்பாாததுக்கொணடிருக்கும சிலநதிபபூச்சியை உவமையாககககாட்டி. சுரணடலகாராகள மலிநத உலகியறகையை உயததுணரச செயகிறாா

சிலநதிபபூசசி போனற சுரணடல்காராகளின் கொடுமைகளை உலகம நெடுநாள தாங்கிக்கொணடு இருக்காது உலக உழைபபாளாகளின நெடிய பெருமூசசு சிலநதி வலைகளைச சினனாபின்னபபடுததிவிடும

'பழிக்குப பழி எனனும பாடலில துணைபபடைகளுக்காகப போரிடும இநதியவீரன் தன போாததிறனையும நாட்டுப பறறையும விளக்கும வகையில நனகு சிததிரிக்கபபட்டுளளான பகைவரின தலைகளைக கொயது குவிக்கவோ வலலரசின பாராட்டைப பெறுவதறகாகக குருதிக்குளியல நடததவோ பெருவீரன எனனும பாராட்டுமேகததில மிதக்கவோ சொநதக குடுமபததின பொருளாதார நிலையை மேமபடுததிக்கொளளவோ நான இநதப போரில ஈடுபடவிலலை பகைவாகளால் பூட்டபபட்ட அடிமை விலஙகுகளை அறுததெறிநது இநதியாவை விடுதலை பெறற நாடாகக காணவேணடும பகைநாடுகளைப பழிக்குபபழிவாஙக எணணும இநதியர்களுக்குத் துணையாக நிறகும ஐரோபபிய நாடுகளுடன இணைநது இநதப புனிதப போரில வெறறிவாகை சூடவிருமபுகிறேன்

தான செயத பாவஙகளே தமககுக கைவிலஙகுகளாகி விட்டதை முதலாளிகள உணருகிறாாகள இநத முதலாளிகளின கைவிலஙகுகளைத தகாததெறிநது அவாகளை விடுவிகக அவாகளிடம பணியாறறும அடிமைகள முன வருகிறாாகள இன்னா செயதாாககும இனியவை செயது பழிவாங்கும பணபாட்டின இநதிய அடிபபடைக்கூறுகளையும, தீமை செயதார்க்கும நனமை செயயுமாறு கூறும இயேசுவின் அறிவுரைகளையும இந்தப் புதுமையான 'பழிககுப பழி' பாடலில உட்கருததாக அமைந்திருபபதைக் காணகிறோம 1945 ஆம ஆணடில வெளியிடப பட்ட 'நிமிடம' 1946-ஆம ஆணடில வெளியிடபபட்ட முததுக்கள ஆகியவை

இசைப்பாடல் தொகுதிகள் சிறந்த கவிதைக் கருவிற்கேற்ற சீரிய படைப்புகளாகும்.

"நிமிடம்" என்னும் தலைப்பிட்ட பாடலில் அரிய குறிப்புகள் புலனாகின்றன. வரம்பற்ற காலமும் எல்லையற்ற இடமும் ஆகிய பேரண்டப் பெருவெளியின் தோற்றமும், அமைப்பும் உள்ளார்ந்த அமைதியும் அடி மனத்தின் அடிப்படைக்கூறுகளாக அமைந்திருப்பதை உய்த்துணர வைக்கின்றன.

வண்ணத்துப்பூச்சிகள் வானில் பறந்து செல்லும் ஊர்வம் போல் நமது கற்பனையையும், காட்சியையுங் கடந்து, காலத்தின் நாழிகைத்துளிகள் ஒன்றபின் ஒன்றாகக் கடந்து செல்கின்றன. ஒரு துளி நேரத்தையாவது நம்மோடு தங்கவைத்துக்கொள்வது எப்படி? பறந்தோடும் வண்ணத்துப் பூச்சியைத் தவழ்ந்தபடி, தாவிப்பிடிக்க முயலும் கைக்குழந்தையைப் போல் பறந்தோடும் நேரப்பறவைகளைப், பின்தொடரும் மனிதனின் கற்பனையும் தோற்றுப்போய்விடுகிறது.

பேரண்டப்பெருவெளியின், சுழற்சிகள், மாற்றங்கள் ஆகியவற்றின், வேகங்களுக்கு ஊற்றான, ஆற்றலுக்கு ஆற்றல் தரும் ஆற்றலாகவே நேரத்துளிகள் செயற்படுகின்றன. இவை நுண்ணியவற்றிலும் நுண்ணியவை, வலியவற்றிலும் வலியவை. இவற்றின் தோற்றத்தை என்னவென்று சொல்வது நேரப்பறவை சிறகடித்தால் போதும் அது உருவாக்கும் மின்சார வேகம் விண்ணிலுள்ள கோள்களிலும் மண்ணுலகிலும்,, இயக்கங்களை உருவாக்கி, பிறப்பிறப்புகளைக் காணச்செய்து பேரண்டப் பெருவெளியை சண்டமாருதம் போன்ற படுவேகத்தில் சுழலச் செய்கிறது. நேரப்பறவை தன் எண்ணற்ற இறகுகளைப் பரப்பிப் பறக்கும் போது, கீழே தெரியும் நிழலே இந்த அண்டவெளிப்பரப்பு. நேரப்பறவை சிறகடிக்கும் போது, அண்ட கோளங்கள் எல்லாம் பனித்துளிகளைப்போல் நடுங்குகின்றன. பெருமைகொண்ட, பேரரசர்களின் அதிகாரச்செருக்கு சிலந்திவலையைப் போல் சிதறிப்போகின்றன. படைப்பும், ஒடுக்கமும் அடுத்தடுத்து நிகழுகின்றன. வானவெளி முழுவதும், ஒளிவெள்ளம் பாய்ச்சும் சூரியன் நாளையே மடிந்துபோய், பிடி சாம்பலாகிவிடக் கூடும். ஆயின் படைப்பிற்குரிய பேராற்றல் தன் உலைத்துருத்தியை ஊதி மற்றொரு சூரியக் குடும்பத்தை உண்டாக்கிவிட முடியும். உதயமாகும் புதிய சூரியக்குடும்பத்தின் சுழற்சியை மீண்டும் புதிய ஒளித்திரள்கள் உருவாக்கிவிடக்கூடும்.

அளப்பரிய இடம் மற்றும் காலத்தின் தொடர்ச்சி பேரண்டங்களின் விரிவு அண்டப் பெருவெளியின் நிலைப்பு ஆகியவை தொடர்பான அறிவியல் கோட்பாடுகள், மனிதனின் நினைவிற்கெட்டாத எளிதில் விளங்கிக்கொள்ள முடியாத பேரண்ட நிலைகளை எண்ணிப்பார்த்து வியக்கும்

அளவிற்கு நம் சிந்தனையை விரிவுப்படுத்துகின்றார். இந்தப்பாடலில், அறிவுலகக் கண்டுபிடிப்புகளும் வேதகால முனிவர்களின் கண்டு பிடிப்புகளும், ஒருசேர இணைந்திருப்பதைக் கண்டு, வியந்துபாடும் பாங்குகள் புலப்படுகின்றன.

முற்றிலும் ஆழ்ந்த எண்ணங்கள் அலைமோதும் இப்பாடல்கள் தெளிவும், எளிமையும் ததும்புவன. ஆற்றொழுக்கமான சொல்லாட்சிகள், அணிநலன்கள் கொஞ்சும் யாப்பமைதி ஆகியவை, துயரம், மகிழ்ச்சி, வெறுப்பு, விருப்பு ஆகிய பல்வேறு உணர்வுகளை உள்ளடக்கிக் கொண்டு இயற்கைத் தாயின் பண்களை எதிரொலித்தவாறு வெளிப்பட்டிருக்கின்றன. இப்பாடலின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்த தீபன் பெண்டர் எனும் பெருமகனார் இதனைப்பெரிதும் போற்றி தன்னிடமுள்ள இந்தியப்பாடல் தொகுப்புகளுள் சிறந்த ஒன்றாகத்தான் சேர்த்துக் கொண்டதை அமெரிக்க நாட்டு இதழ் ஒன்றில் வெளிப்படுத்தியுள்ளார். இந்தத் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ள "காளான்கள்" என்னும் சிறிய பாடல் அடக்குமுறையும், ஆணவமும் கொண்ட மேலினத்து மக்களையும், தன்னாட்டு ஆட்சியாளர்களையும், கடுமையாக இடித்துக் கூறுவதாக அமைந்திருக்கிறது. அயல்நாட்டு ஆளவந்தார்களின் முன்னிலையில் அனைவர்களும் அடிமைகளே. இருப்பினும், உள்நாட்டுச் செல்வங்களும், சிற்றரசர்களும் தம்மை உரிமையுள்ள மேன்மக்களாக நினைத்துக்கொள்கிறார்கள். அந்த நேரத்தில் அறியாமையின் காரணமாக அவர்கள் தம்மை மகிழ்ச்சி நிரம்பிய மேன்மக்களாகக் காட்டிக்கொண்டாலும், விதியின் அதிர்ச்சிகள் அவர்களின் முன் பளிச்சிடும்போது, தம்வீட்டு வாயிற்படிகளிலேயே புரட்சி வெடிப்பதை அவர்கள் பார்க்கக்கூடும். உழவனுடைய ஏர் தன் வலிமைகாட்டும் நேரம்வரும். அதன் செல்வாக்கை அறியச்செய்யும் சூழலும் வரும். இந்தக்கற்பனை வடிவத்திற்புகுந்துள்ள கருத்து, புரட்சி வித்தூன்றவல்லதாகும். அப்பொழுதுள்ள சமுதாய நிலைமையை அக்குவேறு ஆணிவேறாகத் திறனாயும் இந்தப்பாடல் இவர் எழுதிய "நாளை" என்னும் பாடலைப் போன்றேயிருக்கிறது. "நாளை" என்னும் பாடலில், காணப்பட்ட புரட்சிக் கருத்துகளின் விளைவாக இவர்மீது மேலதிகாரிகள் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய சூழல் ஏற்பட்டதும் உண்டு. எத்தகைய தண்டனையும் பொருட்படுத்தாத துணிச்சல் இவருக்கு இருந்ததையும், இத்தகைய பாடல் எழுதியதன் வாயிலாக அறிய முடியும். எனினும், நோக்கர்கள் பலரும் "நாளை" என்னும் பாடலில், கற்பனைகளுக்கு வடிவம் கொடுத்திருப்பதால் பொருட்படுத்தத் தக்கது அன்று என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இத்தகைய பாடல்களில் வன்முறையுணர்வு தூண்டப்பட்டிருக்கிறது என்ற கூறப்படினும், மார்க்சீயக் குறிக்கோளும், காந்தியக் கொள்கையும்,

ஒருங்கிணைந்த மாந்தநேயமே இப்புலவருடைய தெளிவான குறிக்கோளாகும். இக்கொள்கை, இரண்டு படகுகளில் காலூன்றி நிற்பதை போன்றது என்று, எள்ளி நகையாடிவர்களைப் பார்த்து, இவர்கூறிய மறுமொழி பின்வருமாறு.

"குருதி சிந்துவது ஒன்றே, பிறந்த குழந்தையின் உடல்நலத்திற்கும், நீண்ட வாழ்நாளுக்கும் உறுதியளிப்பதாகாது. இத்தாலியிலும் ஸ்பெயின் நாட்டிலும் நிகழ்ந்தது போன்று செத்துப்பிறக்கும் குழந்தைகளும், வரலாற்றில் நிகழ்ந்துள்ளன. காந்தியடிகளின் வன்முறை சாராத அன்புநெறியே மெதுவாகப் பயன்தரினும், நிலையானதும், நம்பத்தகுந்ததுமான நல்ல விளைவுகளைத் தரும்."

இந்த மறுமொழிக்கு எவரும் மறுப்புச் சொல்லவில்லை. இரண்டாம் உலகப்போரின் போது, இவர் பாடிய பாடல்கள் பற்பல. போர்வெறியைத் தூண்டும் பேரரசு வல்லாளர்களின் கையில் மாந்த இனம் சிக்கித்தவித்த துயரக்காட்சிகளை விவரிப்பனவாகும். அந்தப் போர்வெறியர்கள், துப்பாக்கி மருந்தையே போற்றுதற்குரிய பொருளாக விரும்பி ஏற்றவர்கள். அவர்களுக்கு வெண்ணெய் கசக்கும், வெடிமருந்து இனிக்கும் என்னும் மனப்பாங்கே மேலோங்கி இருந்தது.

கிழக்காசியாவில் ஒடுக்கப்பட்டுக்கிடந்த மக்களுக்கு, விழிப்பூட்டும் பாங்கில் இவர் எழுதிய பாடல்களில் "ஆசியாவின் இதயம்" என்னும் பாடல் குறிப்பிடத்தக்கது. படையெடுப்பாளர்களும் போர்வெறியர்களும் கிழக்காசிய நாடுகளைத் தொடக்கநிலையிலேயே அழித்துவிட முயன்றனர். "ஆசியாவின் இதயம்" என்னும் பாடலில் அடையாள வடிவமாக கண்ணாடிப் பேழையில் மூடிவைக்கப்பட்ட வண்ணத்துப்பூச்சியின் வடிவம் எடுத்துக்காட்டாக விளங்கியது. வெளியில் உள்ள விடுதலை, வெளிச்சம், வண்ணத்துப்பூச்சியை வெளியே வாவென்று அழைக்கிறது. வெளியில் வரமுயன்ற வண்ணத்துப்பூச்சி கண்ணாடிக்கதவில் மோதிக்கொள்கிறது. பேரரசு வல்லாளர்கள் "நாங்கள்தான் உனக்குப் பாதுகாப்பாளர்கள் அமைதியாக இரு. உன்னைக் கொல்லவரும் கொடும் பறவைகளிலிருந்து உன்னைக் காப்பாற்றிப் பாதுக்காக்க விரும்புகிறோம் என்று கூறுகின்றனர்" சிறைக்குள் இருந்து வாடும் உயிரிடம் அடிமைத்தனம் என்பதற்கு, இனிமையான பாதுகாப்பு என்று ஆணவம் கொண்ட முதலாளிகள் கூறுகின்றனர்.

தேசியப்பாடல்களுள் "ஆற்றுக்கழிமுகம்" என்னும் பாடல் சிறப்பு வாய்ந்தது. இப்பாடலில் கேரளநாட்டின் பழம்பெருமைகளையும், இன்றைய கேரளம் பெருமை குன்றிக் காணப்படுவதையும் ஒப்பிட்டுக் காட்டுகின்றார். வில்லின் தோற்றம் முக்கோண அமைப்பில், மூன்று கூறாக வளைந்து இருப்பதுபோல் கேரளநாட்டின் நில அமைப்பு, பல்வேறு அரசர்களின்

ஆளுமையின் முக்கூறுகளாகப் பிளவுபட்டு இருக்கிறது. அந்த வில்லிசைக் கருவியை இணைத்துக்கட்டி, வில்லிலிருந்து இன்னிசை எழுப்பவல்லவர் யாரோ தெரியவில்லை. கேரளத்தின் வில்வடிவிலான தோற்கருவி ஒரு காலத்தில் இருந்தது. இன்று பெரும்பாலும் அது மறைந்துவிட்ட கருவியாயினும், ஒரு காலத்தில் ஓணத்திருவிழாவின் போது இசைக்கப்படும் இன்றியமையாத இசைக்கருவியாயிருந்தது). அவருடைய நாட்டுப்பற்றின் உணர்வுகள் பீறிட்டு எழுந்து இந்திய நாடளாவிய தேசீய உணர்வாக மாறியது.

"ஆம் அந்த நாள் வரும்
உண்மையாகவே அந்நாள் வந்துவிடும்
எங்கள் நாட்டின் தேசியக்கொடி இந்துமாக்
கடல்வரை பட்டொளி வீசிப்பறக்கும்
ஆம் அந்த நாள் வரும்.
உண்மையாகவே அந்நாள் வந்துவிடும்
அப்பொழுது என்தாய்நாடு என்ன சொல்கிறது
என்று காதுகளை அகலவிரித்துக் கொண்டு
உலகமே உற்றுக்கேட்கும்"

இந்தியநாடு விடுதலை பெறுவதற்கு வெகுநாள்முன்பே பாசிசக் கொள்கை கொண்ட சப்பான் நாட்டின் பிடியிலிருந்து சீனநாடு தன்னை விடுவித்துக் கொண்டது. அந்நிகழ்ச்சியை பாராட்டுவதற்காகப் "பாரதசந்தேசம" என்னும் பாடலை எழுதினார். பல ஆண்டுகளுக்குப் பிறகு சீன இந்திய எல்லைப்போர் தொடங்கிய காலத்தில் புலவரின் எதிராளிகள் சிலர் அவருக்குத் துன்பம் விளைவிப்பதற்காக இப்பாடலை எடுத்துக்காட்டித் தாய்நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள் எனக் குற்றம் சாட்டினர். இது ஆட்டுக்குட்டியின் மீது ஓநாய் பழிசுமத்திய கதையைப் போன்றதாகும். பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படப்போகும் போரைப்பற்றிப் புலவர் முன்கூட்டியே எப்படி அறிந்திருக்க முடியும். புலவருக்குக் களங்கம் கற்பிக்கவும், அவர் புகழுக்கு மாசு தேடவும், அவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டனர். பிரஞ்சுப்புரட்சியின் போது வேட்கவொர்த்து என்னும் புலவர் வெகுவாகப் பாராட்டினார்.

"புரட்சிவிடியலில் வாழ்ந்திருப்பதே பெருமகிழ்ச்சிக்குரிய ஒன்று
அதிலும் இளைஞர்களாயிருப்பது தெய்வீகமான நற்பேறு"

இப்படி எழுதிய வேட்கவொர்த்து மீண்டும் ஒருநாளில் ஓ பிரான்சு நாடே இதுதான் உன் தற்பெருமையா? மனிதகுலத்திற்கு நீதான் தலைவனா? என்று கடுமையாகத்தாக்கி எழுதும் சூழ்நிலை உருவாகியது. சமகாலத்து நிகழ்ச்சிகள், அதற்கேற்ற உணர்வலைகளை உருவாக்குவதும் இயல்பானதேயாகும்.

பாலை நிலப்பாடகன் எனப்பொருள்படும் "வனகாயகன்" என்னும் பாடல் தொகுதி 1947-ஆம் ஆண்டு வெளிவந்தது. புலவரைத் தாக்கிய புல்லர்களுக்கு நல்லறிவு புகட்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. வண்டுகளால் துளைக்கப்பட்ட நெடிய மூங்கிலே இங்கு குறிப்பிடப்படும் பாடகனாகும். அதில் ஏற்பட்டதுளைகளே மூங்கிலைப் பாடகனாக்கிவிட்டது.

"முற்றிலும் துயரத்தில் தோய்ந்த உள்ளமே
இனிமை கொப்பளிக்கும் இன்னோசைப் பண்களை
எழுப்பமுடியும்"

"அந்த மாலைப்பொழுது" என்னும் காதல் பாடல் தன்வரலாறு கூறுவது போன்று அமைந்துள்ளது. இது அவருடைய புகழ்பெற்ற பாடல்களுள் ஒன்றாகும். அவளை அவன் கண்ட நாளில், அவளுடைய விற்புருவங்கள் அவனை தேவலோகத்துக் கோபுரங்களுக்கே கொண்டு சென்றன. தெளிந்த காதல் நீரோடையின் பனித்துளிகள், காதலர்களின் உள்ளங்களைப் புல்லரிக்கச் செய்து, புதுமைத்தேன் பிலிற்றின. மற்ற எல்லாக் காதல் பாடல்களையும் விட இது மேலோங்கி நின்றது. "கல்விளக்கு" என்னும் பாடல் வெள்ளப் பெருக்கில் அடித்துச்சென்ற கிழவியைக் காப்பாற்றும் முயற்சியில் உயிர்நீத்த கட்டிளங்காளையின் உயர்ந்த ஒப்புரவை வெளிப்படுத்துகின்றது. காதலியை இழந்த தனிமையில் இருண்ட வாணாட்களை வெறுமனே கடத்திக்கொண்டிருந்த மீனவ இளைஞன் அவன். ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் தன் காதலியின் கல்லறையில் மாவுக் கல்விளக்கு ஏற்றுவது வழக்கம். அப்பொழுது பெரியாற்றில் வெள்ள பெருக்கெடுத்து ஓடியது. கல்விளக்கையும் அடித்துக் கொண்டு போய்விட்டது. அது கிடைக்குமா என்று தேட முயன்றபோது சேவல் ஒன்று அஞ்சிக் கூவுவதைக் கேட்டான். - சிறிது தொலைவில் ஆற்றிடைத் தீவிலிருந்த இக்குடிசை வீடு சிறிதுசிறிதாக மூழ்கிக்கொண்டிருப்பதையும், அந்தக் கூரைவீட்டின் மேல், கையில் சேவலை வைத்துக்கொண்டு ஒரு கிழவி உட்கார்ந்திருப்பதையும் பார்த்தான். அம்மூதாட்டியைக் காப்பாற்றும் நோக்கத்துடன் நாட்டுப்படகிலேறி முழுமூச்சுடன் விரைந்து சென்றான். அந்தக் கிழவியிருக்குமிடத்தை நெருங்குவதற்கு முன்பே சீறிவரும் ஆற்றின் சுழல் ஒரு பாம்பைப்போல், அவன் படகைச் சுற்றிவளைத்துக்கொண்டது. மற்றொரு பெரிய அலை படகை அடியோடு அடித்துக்கொண்டு போய்விட்டது. இளைஞனின் கதை முடிந்தது. ஆற்றில் சிறிதுசிறிதாக வெள்ளப்பெருக்கு குறைந்தது. இந்தத் துயரக்காட்சியை அழுத கண்ணீரோடு விவரித்துச்சொல்ல அந்தக் கிழவி உயிரோடு இருந்தாள். யாரும் கேட்பாரற்றுப் பார்ப்பாரற்று அந்தக் விளக்கு மட்டும் ஆற்றங்கரையின் ஓரத்தில் ஒதுங்கிக்கிடந்தது.

1943-44 ஆம் ஆண்டுகளில் இவரை ஈளைநோய் அடிக்கடி தாக்கியது. ஒருமுறை சாவையே நேருக்குநேர் சந்தித்தார். அந்த அனுபவங்களை விவரித்து "நசிகேதசு" என்னும் பாடல்களை எழுதினார். சாவின் உண்மையையும் ஆன்மாவின் தன்மைகளையும் பற்றி காலதேவனாகிய எமன் கூறுவனவே "நசிகேதசு" என்னுந் தலைப்பில் கதா உபநிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கூட்டுக்குடும்பத்தில் வீட்டுச்செலவுகள் அதிகரித்ததால், அதிகச் செலவுகளை ஏற்கவேண்டிய சூழ்நிலையும், கூடுதலாகப் பொருளீட்ட வேண்டிய கட்டாயமும் அவருக்கு ஏற்பட்டது. இதனால் பாடநூல்கள் எழுதியாவது பொருள் தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். உடல்நலமின்றிப் படுக்கையில் இருந்தபோதே பங்கிம் சந்திர சாட்டர்சியின் நாவல் சுருக்கத்தை எழுதி முடித்தார். "இராதாமணி" என்னும் தலைப்பில் அமைந்த அந்நூலின் உரிமைகளை நூற்றி ஐம்பது ரூபாய்க்கு ஒரு பதிப்பகத்தாருக்கு விற்றுவிட்டார் அந்தக் கதை அழகிய உரைநடையில் எழுதப்பெற்றது. பாடநூல்குழுவில் இருந்த அவரது நண்பர் ஒருவர் புலவருக்குத் தக்கநேரத்திற்செய்யும் உதவியாக நினைத்து ஏழாம் வகுப்பிற்குத் துணைப் பாடநூலாக்கினார். அந்நூலின் உரிமைகள் பதிப்பகத்தாருக்கு விற்கப்பட்ட செய்தி அவருக்குத் தெரியாது. வருவாய் முழுவதும் பதிப்பகத்தாருக்கே போய்ச் சேர்ந்தது. தனக்குப் பணத்தேவை ஏற்பட்டபோதெல்லாம் இவர் எழுதிய கதைப் புத்தகங்களுக்கு இதே நிலை ஏற்பட்டது. இவர் எழுதிய நூல்களுள் ஒரு சிறுகதைப்புத்தகம் ஐம்பது ரூபாய்க்கும், "ஐதர் அலி" என்னும் புத்தகம் முப்பத்தைந்து ரூபாய்க்கும், "தர்மபுத்திரர்" நூற்றி இருபத்தைந்து ரூபாய்க்கும், 'கொசசிமாநில நிலநூல்" முப்பது ரூபாய்க்கும் விற்கப்பட்டன. இயற்கை, விலங்குகள், பறவைகள், ஆகியவைகளைப்பற்றி பல்வேறு காலங்களில் எழுதபபட்ட சின்னஞ்சிறிய குழந்தைப்பாடல்கள் "இளம் உதடுகள்" "ஓலைப் பீப்பி" என்னுந் தலைப்புகளில் இரண்டு தொகுதிகளாக வெளிவந்தன. மலையாளத்திலுள்ள குழந்தைப்பாடல்களுள் பேரும் புகழும் பெற்ற தொகுதிகள் இவை "சமத்த கேரள சாகித்திய பரிசத்து" என்னும் அனைத்துக் கேரள இலக்கியக்கழகம் 1927 முதல் செயற்பட்டு வந்தது. பழைய தலைமுறையைச சார்ந்த எழுத்தாளர்கள் அதில் பெரும்பங்கு பெற்றிருந்தனா அக்கழகம் காலாண்டு இதழ் வெளியிட்டதோடு ஆணடு மாநாடுகளும் நடத்தியது அதில்படிக்கப்பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் பழைய தலைமுறையிலும், புதிய தலைமுறையிலும் புலமை சான்றவர்களின் படைப்புகளாய் இருந்தன. சில நேரங்களில் இளைய தலைமுறையினர் முதிய தலைமுறையினரைத் தாக்கி எழுதுவதும் உண்டு

மலர்வெளியீட்டில் பதிப்பாசிரியராக உள்ளூர் பரமேசுவர அய்யர் இருந்தபோது அவரைத் தாக்கி எழுதப்பட்ட கட்டுரை ஒன்றைப் பதிப்பிக்கத்

தயங்கினார். பதிப்பாசிரியர் பதவியைவிட்டு விலக நினைத்தார். புலவர் 'ஜி' அவரை மனமாற்றினாலும், சிறிது காலஞ்சென்று அவர் பதவி விலகினார். அவர் பணிசெய்த இடத்தில் 'ஜி' பதிப்பாசிரியராக அமர்த்தப்பட்டார். இவர் இளைஞர்கள் தாக்கி எழுதும் திறனாய்வுகள் அனைத்தையும் வெளியிட்டதால் இதழ்கள் நன்கு விற்பனையாயின. காலாண்டு இதழ்இருமாத இதழாகி அதன்பிறகு மாதஇதழாகி விட்டது. திறனாய்வு மதிப்பீடுகள் ஆராய்ச்சிக் கட்டுரைகள், படைப்பிலக்கியங்கள் ஆகியவை அதில் இடம்பெற்றன.

இச்செய்தி இங்கு ஏன் குறிப்பிடப்படுகிறது என்றால் 'ஜி'யின் தலைமையின் கீழ் இந்த இதழ் 12 ஆண்டுகளுக்கு மேலாக வெளிவந்தது. என்பதற்காகத்தான். 'ஜி' எழுதிய கட்டுரைகளும், ஆசிரியவுரைகளும் அவ்வப்பொழுது நிகழ்வில் உள்ள செய்திகளைக் குறித்தும் உள்ளூர் நடப்புகள் நாட்டு நடப்புகள், உலக நடப்புகள் ஆகியவற்றைக் குறித்தும் அமைந்திருந்தன. மிகச்சிறந்த மலையாள உரைநடை எழுத்தாளர்களுள் இவரும் ஒருவர் எனப் புகழ் பெற்றிருந்தார். பாட்டெழுதும் திறம்வாய்ந்த இவருக்கு நல்ல உரைநடை எழுத வருமா என்னும் ஐயம் அகன்றது. இவர் உரைநடையாக எழுதிய கட்டுரைகளும், ஆசிரியவுரைகளும், தனித்தொகுப்புகளாக 'ஜி'யின் உரைநடைகள்" 'ஜி'யின் நோட்டுப் புத்தகம்" என்னுந் தலைப்பில் வெளிவந்தன. இந்நூல்கள் இவரது உலகியலுணர்ந்த பரந்த அறிவுத்திறமைக்கும், பல்வேறு சிக்கல்களை நடுநிலையாக அலசி ஆராயுந் திறமைக்கும், பல்வேறு அறிவியற்கலைக்கூறுகளில் தோய்ந்த ஆர்வத்திற்கும், வழிகாட்டியாக அமையும் நுண்ணறிவுக்கணிப்பிற்கும் கட்டியங்கூறுகின்றன. இவரது உரைநடை எல்லோரையுங் கவரக்கூடியது. கேரளநாட்டுப் பழக்கவழக்கங்களையும், பண்பாட்டுக் கூறுகளையும் சிறப்பாக விளக்கிக் காட்டும் ஆற்றல் இவரது எழுத்திற்கு உண்டு. மலையாள மொழிப்பேச்சுத் திறமையிலும் இவர் கேரளத்தில் நிகரற்று விளங்கினார். அருவியின் வீழ்ச்சிபோல் அவர்விரைந்து வெளியிடுங் கருத்துக் கோவைகளை, அதே வேகத்தில் குறிப்பெடுக்க இயலாது செய்தியாளர்கள் திணறுவதுண்டு. உரைநடை, பாட்டு, பேச்சு ஆகிய மூன்றும் மடைதிறந்த வெள்ளம்போல் ஒருங்கே அவர் உள்ளத்தினின்று அழகிய நீர்வீழ்ச்சியாகப் பொங்கி வழிந்தகாட்சி இலக்கிய வரலாற்றில், அந்தப்பேரறிவாளரின் புலமைத்திறத்தை உலகிற்குப் பறைசாற்றிக்கொண்டிருக்கிறது.

5. கவிந்த இருளும் புலர்ந்த பொழுதும்

தேசியப்புலவர் எவருக்கும் நாட்டுக்கு விடுதலை வரும் நாளை எதிர்நோக்குவதே வாழ்நாள் கனவாக அமைவது இயல்பு. புலவர் 'ஜி'யும் மேட்டுக்குடிகளின் ஆதிக்கம் உள்நாட்டுப் பிரிவினை போன்ற பிற்போக்கு மனப்பாங்குகளை எதிர்த்து நாடு விடுதலை பெற வேண்டும் என்றார். அவர் வெறும் நாட்டு விடுதலையைப் பெரிதாக நினைக்கவில்லை. விடுதலை பெற்ற நாட்டில் ஒடுக்கப்பட்டவர்களும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களும் சமவாய்ப்பு பெற்று அவர்களுடைய நெடுங்காலத்துயரப் பெருமூச்சுகளுக்கு விடுதலை கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்றே நினைத்தார். நெடுங்காலமாகப் பொதுவுடைமைக்கட்சியிலும் கூட்டுடைமைக் கட்சியிலும் உள்ள தலைவர்களோடு தொடர்பு கொண்டிருந்தாலும் வெறும் அரசியல் மாற்றத்தைப் பெரிதாக நினைக்காத இடது சாரியினரின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. நாளடைவில் அனைத்தும் ஒரு சீரான நிலைக்கு வரும என்பதில் அவருக்கு நம்பிக்கையிருந்தது. இதனை "வழிபாடு செய்யலாம்" பாடலில் குறிப்பிட்டிருக்கிறார்.

"விடியற்காலம் கடைசியாக வந்துவிட்டது
நாட்டுவிடுதலை சிறகை விரித்திருக்கிறது
ஏழு கடல்களும் ஆனந்தப்பண்பாடுகின்றன
விடியற்காலம் கடைசியாக வந்தே விட்டது
அமைதி என்னும் நற்செய்தி நாலாப்புறமும் அனுப்பப்பட்டுவிட்டது.
மற்ற நாடுகளும் இந்த மகிழ்ச்சியில் பங்கேற்கின்றன.
அவற்றின் நம்பிக்கைகளும் மயில்தோகைபோல் விரிகின்றன
போர்வெறியர்கள் தலைதாழ்த்தி வணங்குகிறார்கள்
துப்பாக்கிகளின் வாயகள் பூட்டப்பட்டுவிட்டன
புதிதாகப்பெற்ற நாட்டு விடுதலையின்
நிழலைக் கணடதுமே அந்தப் போர்வெறியர்கள்
முற்றிலும் அடங்கிப் போய்விட்டார்கள்"

1956 ஆம் ஆண்டு நடந்த தேசியப்புலவர் அரங்கத்தில் குடியரசு நாளை முன்னிட்டு "வழிபாடு செய்யலாம்" என்னும் இந்தப்பாடல் வானொலியில் ஒலிப்பரப்பத் தெரிந்தெடுக்கப்பட்டது. பாட்டை இயற்றியவர்களே பாடுமாறும் இந்தியில் மொழி பெயர்க்குமாறும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அகரவரிசைப்படி மொழிப்பாடல்கள் பாடப்பட்டதால் எச் எழுத்தை

முதலாகக்கொண்ட இந்தி மொழிப்பாடலை அடுத்து மலையாளப்பாடல் ஒலிப்பரப்பப்பட்டது. 'ஜி'யின் பாடல் நீளமாக இருப்பதால் இதனைச் சிறிதாக்கவேண்டும் என்று கூறியபோது இந்தியில் முழுதும் மொழிபெயர்த்து வைத்திருந்த தினகர் என்பவர் முழுமையாகப்படித்தாக வேண்டும் என்றார். அதனால் முன்னிரவில் நெடுநேரம் இந்நிகழ்ச்சி நீண்டது. இந்தியிலும் இதனை தினகர் அழுத்தந்திருத்தமாகப் பாடிக்காட்டியபோது வானொலி நேயர்கள் அனைவரும் மெய்மறந்து கேட்டு இன்புற்றனர். நாடுவிடுதலை பெற்ற நிலையில் வல்லரசு என்னும் சிங்கம் பாரததேவியின் முன் பூனைபோல் அடங்கி ஒடுங்கிவிட்டது என்பதும், இதற்கு முன்பு கொடுங்கோன்மை என்னும் நச்சுப்பாம்பு எவ்வாறு பாரததேவியைக் கயிறுபோல் கட்டிப் பிணைத்திருந்தது என்பதும், எப்பொழுதும் கொட்டித்துன்புறுத்தக் காத்திருந்தது என்பதும் மக்கள் மனதில் பதியுமாறு பாடல்வரிகள் அமைந்திருந்தன. நாட்டு விடுதலைக்காக போராடிய வீரப்பெருமக்களின் குருதியால் சிவப்பேறிய விடுதலை விடியற்காலத்தின் செந்நிறத்தை பொதுமக்களின் குருதியால் சிவப்பேறிய விடுதலை விடியற்காலத்தின் செந்நிறத்தை பொதுமக்கள் மனக்கண்ணில் காணமுடிந்தது. "விடுதலை எங்கள் பிறப்புரிமை" என்று முழங்கிய நாட்டுத்தலைவர்களின் நெடிய முழக்கங்கள் காதில் தெளிவாக ஒலித்தன. இங்கிலாந்து நாட்டுக்கொடியை வேரறுந்து விழச்செய்த விடுதலை முழக்கத்தின் ஆற்றலைப்புரிந்துகொள்ள முடிந்தது. தீயால் எரிக்க முடியாததும் வாளால் வெட்ட முடியாததுமான "இன்னா செய்யாமை" (அகிம்சை) என்னும் உயர்ந்த ஒரே வழியைக் கடைப்பிடித்த செயல் வீரர் காந்தியடிகளின் வரலாறுகளை மக்கள் நினைவு கூர்ந்தனர்.

இந்தக் கருத்துகள் மட்டும் மக்களுக்கு உள்ளக்கிளர்ச்சியூட்டின என்று கூறிவிடமுடியாது. மரபார்ந்த பொதுப்பண்பாட்டு உணர்வுகள் ஒவ்வொரு இந்தியன் உள்ளத்திலும் உருவாக்கிய தெளிந்த உணர்வோட்டங்களே இத்தகைய வியத்தகு விளைவை உண்டாக்கின என்று கூறுவது பொருத்தமானது. ஒன்றற்கொன்று தரத்தின்படி மதிப்பீடு செய்வதானால் 'ஜி ' யின் படைப்புகளில் "நாம் வழிபடலாம்" என்னும் பாடல் சிறந்த இடத்தைப்பெற்றது. ஆயின் தாய்நாட்டின் கனவுகள், இன்பத்துன்பங்கள், அவலங்கள் ஆகியவற்றின் துடிப்புகளைத் திறம்படப் படம் பிடித்துக்காட்டி, மக்களின் இதயத்தை இப்பாடல் தொட்டிருக்கிறது. மற்றொரு பாவலர் இதனைப்பற்றிக் குறிப்பிடும் போது இது 'ஜி' யின் காலம்" எனக்கூறினார். அப்பொழுது அவையிலிருந்த மார்க்சியத் தலைவரான சங்கரன் "ஜி 'யின் புலமைத்திறத்தைப்பற்றி இங்குள்ள போவையினர் யாருக்கும் ஐயப்பாடில்லை என ஒருமுறை குறிப்பிட்டார்.

நாட்டின் விடுதலை உதயமானபோது அந்த வெற்றிக்களிப்பு குறுகிய காலமே நீடித்தது. நாடுவிடுதலை பெற்றதைத் தொடர்ந்து அடுத்தடுத்து நேர்ந்த நாட்டுப் பிரிவினை வகுப்புக்கலவரங்கள், காந்தியடிகள் படுகொலை, அளவில்லாத அகதிகளின் முடிவிலாத துயரங்கள் ஆகிய சோகங்களின் அதிர்வுகள் மக்களை வருத்தின. இந்தக்கால கட்டத்தில் எழுதப்பட்ட பாடல்கள் அனைத்தும் துயரத்தின் வெளிப்பாடுகளாக அமைந்தன. மனித மேம்பாடே ஜியிக்கு எப்பொழுதும் பெரிதாகத் தெரிந்தது. அவருடைய மதம் எது என்று கேட்டால் மனிதநேயம் என்பாரேயன்றி இந்துமதம் என்று சொல்லமாட்டார். இந்தக்கால கட்டமே மனிதஉரிமைகளும் நலங்களும் பறிக்கப்பட்டுச் சேற்றிலாழ்ந்த நேரம் என்று கருதினார். இந்துமத வெறியர் களும் இசுலாம் மதவெறியர்களும் படுகொலையில் ஈடுபட்டார்கள். இருமதத்தாரும் தம்மையழித்துக்கொண்டபோது பல்லாயிரம் பேர்களில் ஒருவனாக மடிந்த இளைஞனைப்பற்றி ரகீம் என்னும் பாடல் எழுதினார். இந்தியா ஒரு நரகமாகவே மாறிவிட்டது. ஒவ்வொரு மதத்தாரும் வகுப்பாரும் தத்தம் சிந்திக்கும் திறனையும், பொறுமையையும், ஒருவரை யொருவர் புரிந்துகொள்ளும் திறனையும் இழந்து விட்டதையே காட்டுகிறது.

"உலகமதங்கள் மனிதனைத் தெய்வமாக
உயர்த்துவதற்குத் தோன்றியவை
நீங்கள் மனிதர்களை விலங்குகளாக மாற்றுகிறீர்களே
புலவனின் சொற்கள் பொருளற்ற வெற்றோசைகளாகிவிட்டன
அந்தச் சொற்கள் முறைப்படி உங்களைச்சாம்பலாக்கவல்லவை
மனிதநேயத்தைச் சுற்றியும் வேலிகட்டி விட்டீர்கள்
வேறுபாட்டு உணர்வுகளையே விதைத்திருக்கிறீர்கள்
அதனால் நாங்கள் அடிமைத்தனம், இழிவு பூசல், போர்
ஆகியவற்றை அறுவடைசெய்ய வேண்டியிருக்கிறது
நீங்கள் வேற்றுமை வேலிகளை நட்டுக்கொண்டிருக்கிறீர்கள்
இந்நிலை நீடிப்பது இன்னும் எத்தனை நாளைக்கு?

"மனிதனிடமுள்ள விலங்கு உணர்வுகள்
இவ்வாறு தூண்டப்பட்டால் கொலைவெறிப்
பிடித்த நகங்கள் கொல்வதற்காக நீள்கின்றன.
ஆ கொடியபுலி கூட இந்த மனிதர்களைப்
பார்த்து வெட்கப்படும்" (ரகீம்)

"வரலாற்றுக்கனவுகள்" என்னும் பாடலில் பழைய தலைவர்களும் அரசர்களும் தாம் செய்த கொடுமைகளை இப்பொழுது நடைபெறும் கொடுமைகளோடு ஒப்பிட நேர்ந்தால் பெரிதும் நாணுவார்கள் அக்பா

கல்லறையில் புரண்டுபடுத்துமனங்குமுறுகிறார். "இந்த மதவெறியர்களுக்கு புனிதத்திருமுறையிலிருந்து மேற்கோள்காட்டி கடவுள் ஒருவரே என்று வலியுறுத்தமுயன்றேன். ஆனால் மனித இனம் ஒன்றே என்பதை வலியுறுத்திச் சொல்ல மறந்துவிட்டேன். சிந்தும் குருதியின் நிறமும் பொழியும் துயரக் கண்ணீரும் மாந்தரனைவர்க்கும் ஒன்றே என்பதையும் சொல்ல மறந்துவிட்டேன்"

"கார்த்திகை மீன்களைக் கொண்ட இரவு வானத்தின்
ரோசாமலர்த்தோட்டம் அவுரங்கசீப்பின்
கல்லறையைப் பார்த்து முகம் வாடியது
விழித்துப்பார்த்த அவுரங்கசீப்பின் கண்களில் நீர்
துளித்தது அரசதேவதையின் கழுத்தில் பூட்டி அழகுபார்த்த
ரோசாமலர்த்தோட்டத்தின் பூக்கள்
குருதியிலும் கண்ணீரிலும் அமிழ்ந்துவிட்டனவே
செங்கோல் உடைந்து விட்டது
நெஞ்சத்துணிவும் எவரும் அஞ்சத்தக்க
ஆற்றலும், தளராத நம்பிக்கையும் கொண்ட
மாமன்னனின் பேரரசு எவறும் கனவாய்
அவன் கண்முன்னாலேயே கலைந்து போயிற்று"

அடுத்து மாவீரன் சிவாஜி கல்லறையிலிருந்து பேசுகிறான்.

"இந்துக்களின் அரசு அமைக்க நீ இன்னும்
கனவு காண்கிறாயா/
வரலாற்றின் படிப்பினை உனக்கு எட்டவில்லையா?
ஒருமுகமதியன் இந்த மண்ணில் முடிசூட்டிக்
கொள்வதைக்கண்டு நான்பொறுக்கமாட்டேன்
என்னுடைய குறிக்கோளை காலம் ஏற்றுக்
கொள்ளவில்லை
இந்துக்களின் அரசு காண்பதற்காக நான் சிந்திய
குருதியையும் பொருட்படுத்தவில்லை"

'இந்திய நிலவு" என்னும் இரங்கற் பாடலில் காந்தியடிகளின் படுகொலையால் நாட்டுக்குநேர்ந்த அவலத்தைப்பாடினார்.

மாந்தனின் மனத்தில் வேங்கையின் கொடிய
கண்களும், குருதிதோய்ந்த அரிமாவின்
நகங்களும் கருநாகத்தின் நச்சுப்பல்லும்
ஒளிந்து கொண்டிருக்கின்றன.
இருப்பினும் அவன் தன்னை நாகரிகமுள்ளவனாகச்
சொல்லிக்கொள்கிறான். உண்மையில்
அவனே கொடிய விலங்குகளிலும் கொடிய விலங்கு

அந்தக் கொடிய நாளில் நிலமகள் காலத்தாயின் மடியில் கண்ணீருகுத்தாள். பற்றி எரியும் வீட்டில் உதவிகேட்டு வீறிட்டு அழும் குழந்தையைப் புதிதாகப்பெற்ற நாட்டுவிடுதலையுடன் ஒப்பிட்டு மற்றொரு பாடலில் பாடியிருக்கிறார். வழிப்போக்கன் என்னும் பாடலில் தனிமையாகப் பயணம் செய்யும் வழிப்போக்கனின் நெஞ்சார்ந்த துயரம் கற்பனை நயத்துடன் படைக்கப்பட்டிருக்கிறது.

"முன்னும் பின்னும் பக்கவாட்டிலும்
யாரேனும் உதவிக்கு வருவார்களா எனத்திரும்பிப்பார்த்து
வீறிட்டு அழும் குழந்தையின் ஓலம் நெஞ்சைப்பிளக்கிறது
தம் தாகத்தைத் தணித்துக்கொள்வதற்காகச் சிலர்
மற்றவர்களின் கண்களைக் குத்துகிறார்கள்
அந்த உப்புக்கண்ணீரைப் பருகுகிறார்கள்.
இன்னும் தனியாத தாகத்துடன் அலைகிறார்கள்
அவர்கள் நெஞ்சில் ஒரு துளி இரக்கமும் சுரக்கவில்லை
திருடனுக்குரிய முகமூடியணியாதவர்கள் எவரையும்
தேடி நண்பராகப் பெறமுடியவில்லை"

தன் குழந்தைப்பருவத்துத் தோழனான விண்மீனைப்பாாத்து, நண்பனே நீண்ட நெடிய அடிவானத்தில் ஏதேனும் நம்பிக்கையொளியின் விடியல் தென்படுகிறதா? நீ மிக உயரத்தில் இருக்கிறாய். உனக்காவது அது தெரிகிறதா? என்கிறார். விண்மீன் இந்த முயற்சியில் இறங்கினால் ஒருநாளைக்குள் அது கிழடுதட்டி நரைத்துத்திரைத்துத் தள்ளாடும் நிலைக்குப் போய்விடும்.

இந்தக்காலத்தில் அரசியல் தலைப்புகளிலிருந்து மெல்ல விலகி ஏழை எளியவர்களின் அல்லல்களைப்பாடும் பணிதொடர்ந்தார். அத்தகைய பாடல் ஒன்றில், தன்னலங்கருதாத நாட்டுப்புறமக்களின் எளிய இயல்புகள் என்னைப்பெரிதும் கவர்ந்தன என்றும் இயற்கையோடிணைந்த நாட்டுப்புற மக்களின் வாழ்வு என் உள்ளத்தில் ஆழ்ந்த அடிச்சுவடுகள் உண்டாக்கியிருக்கிறது என்றும் கூறுகின்றார். பறவைகள் என்னும் பாடலில் விதியை எதிர்த்துப் போராடும் உண்மைக்காதலனின் துணிச்சலைப்பாராட்டு கிறார். வேலுவும் ஜானு எளியவர்களாயினும் அன்பிலும் பண்பிலும் உயர்ந்த காதலர்கள்.

"வேலை செய்ய உடம்பில் வலிமையும்
நம் இருவரின் நான்கு கண்களில் கரைபுரளும் காதலும்
இரண்டறக் கலந்திருக்கும் போது
நமக்குக் காசெதற்கு பணம் எதற்கு?

இப்படித்தான் அவர்கள் அடிக்கடி நினைப்பார்கள். வாழ்ந்திடும் பொழுது நல்லவர்களுக்கும் துன்பம் தந்து வேடிக்கைபார்ப்பதுண்டு. இரு பெரும் துன்பங்கள் அவர்களைத்தாக்கின. அவளுடைய தாய்மைக்கனவுகள் குழந்தை இறந்துவிட்டதால் ஒரே வாரத்தில் தகர்ந்தன. சில நாளுக்குள் அவளுக்குப் பச்சை வாதம் வந்து இடுப்பிற்குக்கீழ் இருகாலும் விளங்காமற் போய் விட்டது. வேலு அயராது அவளுக்குப் பணிவிடைகள் செய்துவந்தான்.

"மருந்துக்கானமூலிகைகள் கிடைக்கவில்லை
அடுப்பெரிக்க விறகு கிடைக்கவில்லை
வீட்டுக்கூரையின் சாரங்களைப் பிரித்து
அடுப்பெரிக்க வேண்டியிருக்கிறது.

இருப்பினும் அவன் மனம் தளரவில்லை. அவள் ஒருமனதாக இறந்துவிடத் துடித்தாள். அவன் அவளைத் தேற்றினான்.

"வேண்டாம் இறந்துவிட நினைக்க வேண்டாம்
நாம் விதியிடம் தோல்வியை ஒப்புக்கொள்ளக்கூடாது
நாம் நம்பிக்கையுடன் போராடுகிறோம் என்று
உலகத்தாருக்குத் தெரியட்டும். மிதந்தாலும் சரி மூழ்கினாலும் சரி.
நாம் இருவரும் சேர்ந்தே
இந்த துயரக்கடலை நீந்தலாம்"

"உடைந்தநெஞ்சம்" என்னும் பாடலில் நாட்டுவிடுதலைப்போரில் சிறையிலடைக்கப்பட்டு, விடுதலையாகி வீடு திரும்பிய வீரன் வீட்டுக்குள் நுழைந்ததும் தன் காதலி மற்றொருவனுக்குத் திருமணம் செய்யப்பட்டு விட்டதைக்கேட்டு அதிர்ச்சியடைகிறான்.

"அசையும் ஈமச்சுடர்" என்னும் பாடலில் இதைப்போன்றே காதலனைக் கைப்பிடிக்க முடியாமற் போன பெண்ணின் அவலம் பேசப்படுகிறது. அவளுடைய காதலன் நாட்டு விடுதலைவேள்வில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டதால் திருமண எண்ணத்தைக் கைவிட்டுவிட்டான். அதனால் மனமுடைந்த காதலி தான் வேறொருவனை மணக்க நேர்ந்தது. நீண்ட காலத்திற்குப்பிறகு பழைய காதலன் உள்ளூருக்குத் திரும்பி வந்தான். நோயில் நொடிந்து பாயில் கிடந்து குருதிகொப்பளிக்க வாயாலெடுத்துச் சாவுடன் போராடும் அவனைக் காண்பதற்காகச் சென்றாள். அவருடைய இரக்கவுணர்வுகளுக்குக் களங்கம் கற்பித்து ஊரார் பேசிய பேச்சுகள் அவளைப்பெரிதும் வாட்டின. அவள் கண்களில் நீர் ஆறாகப் பெருகியது.

"அவள் அருகில் வந்ததை அறிந்ததும் அவன்
மனம் மலர்ந்தது. ஆயினும் சுவரின்பக்கம் திரும்பிப்

படுத்துக்கொண்டான். அவளைப்பார்ப்பது தவறு
என நினைத்தான். அவள் அருகில் அமரவும்
தொடவும், நீவியும் தடவியும் ஒத்தடம் தரவும்
உமிழும் சட்டியை அருகில் வைக்கவும், சில சொற்கள்
மனந்திறந்து பேசவும் அவளுக்கு
ஆசையிருந்தது. ஆனால் அவனுக்குப்
பணிவிடை செய்வது அவள் கடமையல்லவே!
என்ன செய்வாள் பேதை!

நோயால் நொடிந்த அவன் நள்ளிரவில் இறந்து விட்டான். சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்றார்கள். வழியில் பிணத்தையாவது எட்டிப்பார்க்க முடியவில்லை. அறைக்குள் அடைப்பட்ட நிலையில் வெளிப்பட கண்ணீர்விட்டு அழவும் முடியவில்லை. இரவுமுழுதும் கண்ணுறங்க முடியவில்லை. அவனுக்கு ஈமத்தில் இட்ட தீ அவள் நெஞ்சில் எரிந்து கொண்டிருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது. அடக்கப்பட்ட துயரவெள்ளமும் குற்ற மனப்பான்மையும் அவள்மனத்தில் கொழுந்து விட்டெரிந்ததில் வியப்பில்லை.

குற்றமனப்பாங்கைப் புலப்படுத்தும் பெருந்தச்சன் என்னும் பாடலில் மகன்மீது தந்தைகொண்ட பொறாமை இருவருக்கும் விதியின் முடிவாக அமைவது விளக்கப்படுகிறது. தந்தையை விடத் தச்சு வேலையில் மகனின் புகழ் மேலோங்கத் தொடங்கியது. பெருந்தச்சன் ஒருமுறை ஆற்றுப்பாலத்தின் எல்லையில் மரப்பதுமையொன்று செய்து வைத்தான். ஆற்றுப்பாலத்தைக் கடந்து வருபவர்கள் முகத்தின்மீது அது நீர்மட்டத்திலிருந்து மேலே எழும்பி வந்து நீரைப்பீச்சியடிக்கும். இந்த அருமைப்பாட்டைக் காண்பதற்காக ஆற்றுப் பாலத்தருகில் நாள்தோறும் மக்கள் கூட்டம் கூடினார்கள். அடுத்த நான்குநாள்களுக்குள் அங்கே மற்றொரு மரப்பதுமை காணப்பட்டது. அது மக்கள் மீது நீரைப் பீச்சியடிப்பதற்காக முதல் மரப்பதுமை வாயைத் திறப்பதற்குள் அதன் முகத்தில் பளார் என்று அறையும், பழிக்குப்பழிவாங்கும் இந்தப் புதிய மரப்பதுமையைக் கண்டு ஊரார் வியந்தனர். இந்த இரண்டாம் பதுமையைச் செய்து அங்குப் பொருந்தியவன் பெருந்தச்சனின் மகனே என்று யாவரும் அறிந்தனர். மக்கள் மகனைப் புகழ்வது கேட்டுப் பெருந்தச்சன் பெரிதும் நாணி உள்ளுக்குள் பொருமினான். பெரிய அவமானமாகவும் கருதினான். பொறாமை பெருகியது. தந்தைக்கும் மகனுக்கும் மனக்கசப்பு வளர்ந்தது.

ஊரில் கோயில் கட்டும் பணி தொடங்கியது. ஊர்த்தலைவர் பெருந்தச்சனை அழைத்து அப்பணியை ஒப்படைத்து உன் மகனிடமும்.

அறிவுரை கேட்டுச்செப்பமாகச் செய் என்று ஆணையிட்டார். கையில் அகலமான உளியெடுத்து உச்சிக்கூரையமைக்கும் வேலையில் பெருந்தச்சன் ஈடுபட்டான். கோயிலுக்குள் தரையில் அமர்ந்தவாறு சந்தனமரத்தில் தாமரைப் பூ வேலைப்பாடுகள் செய்வதில் மகன் ஈடுபட்டிருநதான். பெருந்தச்சனின் கையிலிருந்த அகலவுளி நழுவி தரையில் செங்குத்தாக இறங்கி மகனின் பிடரியில் இறங்கியது. மகன் அங்கேயே இறந்தான். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் நடந்துவிட்ட கொடூரம் ஊரையே நிலை குலையச் செய்தது. வயதுமுதிர்ந்த நிலையில் தனக்குத் துணையாக இருக்க வேண்டிய குலக்கொழுந்து மறைந்துவிட்டதே என்னும் கொடுந்துயரம் பெருந்தச்சனின் உள்ளத்தைக் குடைந்தது. இருந்தும் என்ன பயன், காலங்கடந்த தெளிவு அது. எதிர்பாராமல் நடந்துவிட்ட நிகழ்ச்சியென்றே அனைவர்க்கும் அவன் சொல்லக்கூடும். ஆனால் மனச்சான்று குற்றஞ்சாட்டிக்கொண்டேயிருப்பதை எப்படித் தடுக்க முடியும்? துயரவெள்ளத்திற்குள் அவன் மூழ்கிப் போய்விட்டான். மனப் போராட்டம் எத்தகைய பெரியவர்களாயினும் எதிர்பாராத தீயவிளைவுகளைச் சந்திக்கச் செய்துவிடும் என்னும் கருத்தை இப்பாடல் விளக்குகிறது.

அரசியல் நிலைமைகளில் ஆர்வம் காட்டுவது குறைந்திருந்தாலும் அப்பொழுதைய சமுதாய நிலைமைகளைப் பாடுவதைத் தவிர்க்கவில்லை. நாட்கூலிக்காரன் என்னும் பாடலில் நாட்டு விடுதலைக்குமுன் செல்வர்களால் புறக்கணிக்கப்பட்டு வறுமையில் சீரழிந்து வேலையின்மையால் வாடி வதங்கிய கூலிக்காரனைப்பற்றிக் கூறுகிறார். வறுமை வாட்டினால் உழைத்து வாழமுடியும் என்னும் நம்பிக்கை அந்நாளில் குன்றாமலிருந்தது.

"தொழிற்புரட்சியினூடே புகையும் நெருப்பைக்
கிண்டிவிட்டால் அது அணுகுண்டைவிட
அதிக ஆற்றலுடன் வெடிக்கும். அதன்
செங்காவித் தழல் மண்ணுக்கும்
விண்ணுக்கும் வண்ணத் தோரணமாக
அணிசேர்க்கும்"

நாட்டு விடுதலைக்குப் பிறகு எழுதப்பட்ட "விறகு தேடுவது எப்படி" என்னும் பாடலில் நம்பிக்கை தளர்ந்த பாங்கே காணப்படுகிறது. கேலு என்னும் விறகு வெட்டி நாள்தோறும் காலையில் வேலை தேடிப்புறப்படுவான்.

"உயிர்வாழ்வதற்காக வாய்திறந்து இரக்கவும்
தண்ணீர் தாகத்திற்காகத் துடிக்கவும்
கற்றுள்ள இந்தநாக்கு தாகத்தில் மூழ்கி சாகட்டும்"

ஒருநாள் அவன் வழக்கம் போல் நாள்முழுதும் நகரில் வேலை கேட்டு அலைந்தான். வீட்டில் நோய்வாய்ப்பட்ட மனைவி தனித்திருந்தாள். அவன் மாலையில் வீடு திரும்பியபோது அவள் இறந்துவிட்டிருந்தாள். அவளை எரிப்பதற்கு விறகு வேண்டும். யாரேனும் மரம் தருவார்களா என ஏங்கினான். பாட்டாளி மக்கள் இன்னல்களிலிருந்து மீட்க புரட்சிப்புயலை உருவாக்கும் கனவுகளின் வெளிப்பாடுகள் இந்தக் காலகட்டத்தில் வெளிவந்த பாடல்களில் காணப்படாமலிருந்தது

1948-55 க்குள் நான்கு திரட்டுகளும் தெரிந்தெடுக்கப்பட்ட பாடல்களின் தொகுதியொன்றும் வெளிவந்தன. அவை இதழ்கள் (1948), வழிப்போக்கனின் பாடல் (1951), அந்தர்தாகம் (ஆன்மப்பசி) (1953) வெள்ளிப்பறவைகள் (1955), 'ஜி' யின் பாடல்களைப் பற்றி பேராசிரியர் எஸ். குப்தன்நாயர் எழுதிய பொதுவான அளவீட்டுத் திறனாய்வு முன்னுரையுடன சிறந்த 60 பாடல்களைக் கொண்ட ஓடக்குழல் (புல்லாங்குழல்) 1950 இல் வெளிவந்தது. இது எண்ணங்கவரும் ஏரார்ந்த எடுத்துக்காட்டான தொகுதியாக அமைந்தது. தெரிந்தெடுத்த பாடல்களின் தொகுப்பு வெளியிடவேண்டும் என்னும் கருத்து அந்த நல்ல நேரத்தில் அரும்பியது. அது வெளியிடப்படாமலிருந்தால் ஞானபீடத்தின் விருதுக்காகப் பாடல் தொகுதிகளை அனுப்புமாறு கேட்டபொழுது எதுவும் அனுப்பமுடியாமல் போயிருக்கும்.

அந்தத்தொகுதியிலுள்ள சில அரிய பாடல்கள் முன்பே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. மேலும் சிலவற்றைக் காணலாம். இதழ்கள் என்னும் தொகுதியிலுள்ள தலைவன் என்னும் பாடல் கடலலையைப் பற்றிக் குறிப்பிடுகிறது. செருக்கின் பெருக்கத்தால் ஊதிப்புடைத்துத் தோன்றும் கடலலை கடலின் வன்மையை உணராமல் கடலின் கட்டளைக்கு அடிபணிய மறுக்கிறது. அதனால் சினங்கொண்ட கடல் அந்த கடலலையைக் கூரையின் மீது வீசியெறிகிறது. தான்வழி நடத்திச்செல்லும் மக்களே தனக்கு வலிமையென்றுணராத வீண்பெருமைக்காரனாக அலை உருவகிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் வெறுத்து ஒதுக்கினால் அந்தத் தலைவன் ஒன்றுமில்லாமல் போய் ஓட்டாண்டியாகிவிடுவான்.

தாயும் மகனும் தோழன் என்னும் பாடல்களில் நெடுகவும் மேலைக் கடற் புறங்களில் வறுமையில் உழன்று வாடும் எளிய மீனவர்களின் துணிந்த வாழ்க்கை படம் பிடித்துக் காட்டப்படுகிறது. ஆக்கவும் அழிக்கவும்வல்ல கடலின் கொடிய தாக்குதல்களுக்கு அஞ்சாமல் போராடுபவர்கள் அவர்கள். கடல் அலை என்னும் குதிரை மீது பயணம் சென்றோர் வீடு திரும்பவில்லையே என்று கண்ணீர் வடிக்கும் தாயைத் தேற்றும் இளஞ்சிறுவனைப்பற்றி தாயும் மகனும் என்னும் பாடல் சித்தரிக்கிறது.

" அம்மா அழாதே
நீ அழுதால் நானும் அழவேண்டிவரும்
ஆண் குழந்தை அழக்கூடாது என்று
நீ தானே எனக்குச் சொன்னாய்!"

தோழன் என்னும் பாடலில் மீனவனின் இளஞ்சிறுவன் கடலைத் தன்வீட்டுக் காவல் நாயாகக் கருதுகிறான். அந்தச்சிறுவன் நள்ளிரவில் குறட்டைவிட்டவாறு அயர்ந்து தூங்குகிறான். தென்னை மரங்களுக்கிடையில் நிலவு எட்டிப்பார்க்கிறது. அதைக்கண்ட கடல் என்னும் காவல் நாய் மணலில் நான்கு கால்களையும் பிறாண்டியவாறு உரத்துக்குலைக்கிறது. நிலவு அச்சத்தால் முகம் வெளுத்துப்போகிறது. ஆனால் சிறுவனுக்குக் கடலைக்கண்டால் சிறிதும் அச்சமில்லை. ஏனென்றால் அது அவனுடைய வீட்டுக்காவல் நாய்.

"அச்சமா! எங்களுக்கு ஒரு அச்சமும் இல்லை
நாங்கள் அந்தக் கடலுடன் தூங்குகிறோம்
அதனோடே கண் விழிக்கிறோம்"

"நினைவுகொள்" என்னும் அந்தப்பாடலில் நாட்டுவிடுதலைப்போரில் ஈடுபடத்தயங்கியவர்கள், எவ்வகைத்துன்பத்தையும் ஏற்றுக் கொள்ளாதவர்களாகிய பணக்காரக்கும்பல் நாடு விடுதலை பெற்ற பிறகு விடுதலைநாள்விழா கொண்டாட ஓடோடிவருகிறார்கள். நன்கொடைகள் தருகிறார்கள். மகிழ்ச்சிப்பெருக்கால் வெற்றியோசை எழுப்ப பத்தாயிரம் ரூபாய் செலவழித்து பெரிய வெண்கல மணிவாங்கித்தருகிறோம் என்று சிலர் கூறுகின்றனர். அடக்குமுறையாளர்களின் போலிப்பிரிவுகள் பெருந்தன்மையும் இரக்கமும் கலந்த நற்குணங்கள் போல் பசப்புகின்றன. கனவு என்னும் பாடல் இந்த நூற்றாண்டின் இருவேறுப்பட்ட மார்க்சீய காந்தியக்கொள்கைகளை இருபெருந்தலைவர்கள் விளக்கிச் சொல்வதாக அமைந்துள்ளது. மேட்டுக்குடிகளுக்கும் அடித்தளத்து பாட்டாளிகளுக்கும் இடையில் மூண்ட பொருளாதார இடைவெளிப்போரும் அதனால் விளைந்த துன்பங்களும் அழிவுகளும் உள்ளபடியே விளக்கப்படுகின்றன. இயற்கையின் தூண்டுதலால் சூழ்ந்த கருத்துவேறுபாட்டு போராட்டமேகங்களின் இடையில் தோன்றிய மின்னல் இடி தொடர்ந்த குருதிஅடைமழை. பெருக்கெடுக்கும் துயரவெள்ளத்தால் நேர்ந்த அழிவுகள் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

பின்கண்ட புரட்சியின் முழக்கம் எங்கும் எதிரொலிக்கிறது. "சமுதாயத்தின் மூடநம்பிக்கைகளையும் உருப்படாத கட்டுப்பாடுகளையும் அழிப்போம்". அடுத்த காட்சியில் அமைதிதவழும் முகம் அன்பான குரலில் பேசுகிறது. "வரலாறு என்பது வகுப்புக் கலவரம் அன்று. சீர்திருத்தச் செம்மல்களாக

முன்னின்று போராடியவர்கள் போற்றத்தக்கவர்கள், அவர்கள் மாந்த இனத்தை நேசித்தவர்கள்" காரல் மார்க்சுக்கு காந்தியடிகள் செலுத்திய மேற்கண்ட அஞ்சலி ஒரு பகற்கனவாகப் போய் விட்டது. ஏனெனில் இருவேறு முரண்பட்ட கருத்துகள் ஒருமித்தும் ஒருமைப்பாடு எதிர் பார்த்த படி வளரவில்லை.

"பாடும் கற்கள்", "அரண்மனையில் கோட்டான் அலறுகிறது." "நொண்டி ஓநாய்கள்" என்னும் பாடல்களில் கொடுங்கோலர்களின் வீழ்ச்சி விளக்கப்படுகிறது. இவற்றில் முறையே கேரளத்துத் தன்னாட்சி மன்னர்கள், சாவைத் தழுவிய படையெடுப்பாளர்கள், தைமூர் போன்ற நாடுகவரும் கொள்ளைக்காரர்களின் வெறிச்சோடிப்போன வெற்றார வாரம் ஆகியவை இடம் பெறுகின்றன. இவை கடந்தகால வரலாற்றுக் கதைகளல்ல. இன்றும் நாளையும் என்றும் நல்ல படிப்பினை வழங்கும் பாடங்கள்

உலக வாழ்க்கை மாந்தனுக்கு ஏற்படும் தோல்விகளால் துன்பமானதாகத் தோன்றினாலும், மாந்தன் எல்லாநிலைகளிலும் தளராமல் வெற்றிபெற்று முன்னேறக் கூடியவன் என்றே 'ஜி' கருதினார். மாந்தனின் திறமையில் அவருக்கு நம்பிக்கையிருந்தது. நன்றிக் கடப்பாடு என்னும் பாடலில் நம்பிக்கையொளியைப் பாடுகிறார். விரிவானத்தின் எல்லைக்குள் பலகோடி அண்டங்களில் உள்ள உயிருள்ளனவும் உயிரில்லனவுமாகிய பருப்பொருள்களுள் மாந்தனின் இருப்பு மிகச்சிறிய நுண்துளி போன்றது. எனினும் அந்த நுண்துளிக்கும் ஒரு சிறப்பு இருக்கிறது. ஆதலால் உலகப்படைப்பில் பொருட்படுத்தக்கூடாதது என்று எதுவும் இல்லை. தவக்கோலத்தில் செம்மாந்திருக்கும் மலை, கொந்தளிக்கும் கடல், ஒழுங்கான சுற்றுப் பாதையில் சீராக இயங்கும் கோள்கள் நாண்மீன்கள், வண்ண வண்ண சிறகுகள் விரித்து வானத்தின் மோனக்களிப்பில் சிந்துபாடித்திரியும் பறவைக்கூட்டங்கள். இயற்கையாற்றலால் உந்தப்பட்டு உயரமாக வளர்ந்து காற்றையும் ஒளியையும் கட்டியணைத்து ஊஞ்சலாடி களிப்புக் கள்ளருந்தி மெய்மறந்து கனவுலகில் கண்மூடிக்காட்சியளிக்கும் மரங்கள், எண்ணிலாத பல்வகை உயிர்களின் கூட்டங்கள் ஆகியவற்றின் வானவெளி ஊர்வலக்காட்சி நெஞ்சையள்ளும் திறன்வாய்ந்தது. ஒரு சின்னஞ்சிறிய புல்போன்ற நானும் இதில் கலந்துகொள்கிறேன். இந்த இயற்கையழகைக் காணும்போது நான் என் கடமையையும் மறக்கமுடியவில்லை. ஏனெனில் அவற்றில் நானும் ஒரு கூறாக இருக்கிறேன். மலையின் உயர்ச்சியும், கடலின் முழக்கமும், வானத்தின் விரிவும் புயலின் சீற்றமும் என்னுடையவனாகவும் உணர்கிறேன். இயற்கையோடு தன்னை இணைத்துக்கொள்ளும் பாங்கு தொடக்கமுதல் இறுதிவரை இவர் பாடல்களில் காணப்படுகிறது. இருகுரல்கள், என்ன பெருமிதமான வளர்ச்சி என்னும் பாடல்களில் மாந்தன் வடிவில்

சிறியவனாக இருந்தாலும், அவனுடைய தனித்தன்மை, விரிவானத்தின் பரப்பில் சிறகடித்துப்பறக்கும் உயர்வாழ்க்கைப்பயணத்தில் மிகச்சிறந்த பங்கேற்று சிறப்பாகச் செயற்பட முடியும் என்பதை நிலைநிறுத்திக் காட்டுகின்றன.

"அண்டகோளங்களின் மீது அடிவைத்துத் தாண்டும்
மாந்தனின் அஞ்சாமையை அறிவுத்திறனைப்
போற்றுகிறேன். விரிவானத்தின் நாற்புறங்களிலும்
தான்செல்லும் பாதைகளில் விண்மீன்கள்
பூக்களாக வந்து விழுகின்றன.
எத்தகைய வெற்றிப் பயணம் இது!
வெற்றிமேல் வெற்றிபடைக்கும் வரலாற்றைச் சாதனைப் பயணம்
என்பது நிலவில் காலெடுத்து வைத்தபோது
நிலைநாட்டப்பட்டுவிட்டது. இனி மாந்தனால்
முடியாததில்லை, அவன் தன்னை
அடக்கியாள்வது தவிர வேறெதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை"

தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்வது ஆன்மீக வலிமையையும் வளர்க்கும். இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச்செல்லும் உள்ளுக்குள் உறங்கிக் கிடக்கும் பேரொளி புறத்தே பரவ வேண்டும் என்னும் வழிபாடே உயிர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் பேராற்றலாகும்.

6. அண்டப்பெருவெளியின் காட்சி

எர்ணாகுளம் மகராசர் கல்லூரியில் மலையாளப் பேராசிரியராக விருந்த 'ஜி' 1956-ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றார். அதன்பிறகு திருவனந்தபுரம் வானொலி நிலையத்தில் இரண்டாண்டுக்காலம் பேச்சுமொழி நிகழ்ச்சியமைப்பில் தயாரிப்பாளராகப் பணியாற்றினார். நிருவாகக்கெடுபிடிகள் மென்மை உள்ளங்கொண்ட புலவருக்கு உள்ளூர வெறுப்பை உண்டாக்கியதன் விளைவாக தனக்கு ஒத்துவராத அப்பணியை விட்டுவிட்டார். அத்துறையினரே இவரை எர்ணாகுளத்துக்கு மாற்றி சாகித்திய கலாகார் என்னும் பதவியிலமர்த்தினர். இப்பணியில் வெறும் அறிவுரைஞராக இருந்தால் போதும் என்றும் அதுவும் வீட்டிலிருந்தே பணியாற்றி முன்னேற்ற அறிக்கைகளை அனுப்பி வந்தால் போதும் என்றும் கூறப்பட்டது. எர்ணாகுளத்தில் வீடுகட்டி முடித்தார். 1958 ஆம் ஆண்டில் தன் ஒரே மகளான ராதாவை மகராசர் கல்லூரியில் தன்னிடம் படித்த மாணவனாகிய திரு. எம். அச்சுதன் என்னும் மாப்பிள்ளைக்கு மணமுடித்து வைத்தார்.

1968 ஆம் ஆண்டுவரை சாகித்திய கலாகாரராகப் பணியாற்றியபின் அரசின் மேலவைக்கு உறுப்பினராக அமர்த்தம் பெற்றார். ஒழிவாக எதையும் கவனிக்கத்தக்க ஓய்வு கிடைத்ததால் அவருடைய படைப்பிலக்கியப்பணிக்குப் போதிய நேரமும் ஊக்கமும் ஒருங்கு வாய்த்தன. இரவீந்திரநாத்தாகூரின் "ஏகோத்தரசதி" என்னும் நூலை மலையாளத்தில் மொழிபெயர்த்தார். வங்காள மொழி தெரிந்திருந்த 'ஜி'யின் பழைய ஆசிரியரான ஆர். சி. சர்மா இவருக்கு வங்காளமொழி கற்பித்தார். அதன்விளைவாக தாகூரின் பாடல்களை முழு நம்பிக்கையோடு மொழி பெயர்க்க முடிந்தது. விரைவில் மொழி பெயர்ப்பு முடிந்ததும் 1961 ஆம் ஆண்டில் நடுவண் சாகித்திய அக்காதெமியால் வெளியிடப்பட்டது.

தாகூரின் பாடல்களில் ஏற்கனவே உள்ளம் பறிகொடுத்தவராதலின் மெய்ப்பொருள் உணர்விலும், இயற்கையை வியந்து போற்றும் வழிபாட்டிலும், பேரண்டத்தின் காட்சிகளைச் சுவைபட விவரிப்பதிலும் தாகூருக்கு இணையான ஆர்வம் பெருகியதால் இவருடைய மொழி பெயர்ப்புப் புனிதப் பயணம் வாகை சூடியது. இவ்வருடைய மொழிபெயர்ப்புகளில் "விசுவரூபதரிசனம்" புகழ் பெற்ற பாடலாகும். இயற்கையின் மாட்சியைப் பழங்கால முனிவர்களும் இக்கால அறிவியலாளர்களும் கண்டுரைத்த செய்திகள், சிலவகைகளில் ஒத்திருக்கின்றன. பேரண்டத்தின் இயற்கையை முனிவர்கள் தம் உள்ளுணர்வால் தவ ஆற்றலாலும் காரண காரியத்

தொடர்புகளாலும் நன்குணர்ந்தனர். ஆனால் அறிவியலார் அதே காட்சிகளையும் பல்வேறு அறிவியல் ஆய்வுகளாலும், தொலைநோக்காடிக் கணிப்புகளாலும் கணக்கீடுகளாலும் கண்டறிந்தனர். சர் ஜேம்ஸ் கீன்ஸ் எழுதிய மிஸ்டீரியஸ் யூனிவர்ஸ், சர் ஆர்தர் எட்டிங்டன் எழுதிய எக்ஸ்பாண்டிங் யூனிவர்ஸ் என்னும் நூல்கள் இன்றைய அறிவியலார் கண்டறிந்த பேரண்டத்தின் இயற்கைக் கோட்பாடுகளையும் புலப்படுத்தின. இவற்றையெல்லாம் தன் ஆர்வத்தால் கற்றுணர்ந்து வேத காலத்து முனிவர்களின் முன்னுணர்வுகளோடு குழைத்து மெருகேற்றி தனக்கேயுரிய கற்பனைப் பாங்கில் கவிதைகளைப் புனைந்தார். இப்பாடல்கள் மொட்டுப்பருவம், மலர்ப்பருவம், வழிபாடு என்னும் மூன்று பகுதிகளாக இயற்றப்பட்டன. முதற்பகுதியில் பல்லாயிரம் பால்வெளித் தொகுதிகளையும் விண்மீன் கூட்டங்களையும், சூரியன்கள், கோள்கள் நிலவுகள் ஆகியவற்றைப் படைத்துக் காத்தலையும் பேரண்டத்தின் விரிவு ஒடுக்கங்களையும் தனக்குள் உள்ளடக்கிய பேராற்றல் படைத்த இறைவனை பாடுகிறார். சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டாத இப்பேராற்றல் கணப்பொழுதில் சுழற்காற்றாடியைபோல் நுரைததும்ப சுழல்வதால் மீதுதிரும் துகள்களே சூரியக்குடும்பங்களாகவும் பால்வெளிகளாகவும் கோடிக்கோடி விண்மீன்களாகவும் எண்ணிலடங்கா எண்ணிக்கையில் நம் நினைவுக்கெட்டாமல் இயங்குகின்றன.

"உலகப் படைப்பில் உன்னதங்களைத் தெரிந்து கொள்ள
வேண்டுமா?
இயற்கையை உற்றுப்பார்! அறிவால் அளந்தறிய முடியாததை
உணர்வால் எட்டிப் பிடிக்கலாம். படைப்பின் இனிமைகள் உன்
வாழ்வுக்கும் அமுதச்சுவை கூட்டுவதைக் காண்பாய். இறைவனின்
பேரருள் என்றும் வற்றாத இன்பஊற்றாக அன்பின் வடிவத்தில்
பேரண்ட
மெங்கும் பெருக்கெடுத்தோடுகிறது. அந்த அன்புப்
பெருக்கு இயற்கையின் இதய நீரோடையில் என்னைத் திளைக்கச்
செய்கிறது"

அந்த அன்பு இதயம் பல்லாயிரக்கணக்கான பால்வெளி மண்டலங்களைத் துயிலுறுத்தியும் துயிலெழுப்பியும் அளப்பரிய ஆற்றல் ஊட்டியும் தாலாட்டி வளர்த்திருக்கிறது. இதே தெய்வீக ஆற்றல் நீரிலும் நிலத்திலும் வானத்திலும் தன்னிருப்பைப் புலப்படுத்திக் காட்டுகிறது. திடப்பொருள்களாக மட்டுமன்றி மனத்தில் வெளிப்படும் உண்மை, அழகு, கடமை பான்ற உயரிய பண்பாட்டுக் குணங்களாகவும் தன் முடிந்த இறுதித் தோற்றத்தைக் காட்டுகிறது.

"மனம் என்னும் அரிய மாணிக்கத்தை என்னுள் புதைத்து வைத்திருக்கிறாய். அருளால் உந்தப்பட்டு என்னைத் தேர்ந்தெடுத்து என்னுள்

குடிபுகும் வீடாக அதனை அமைத்துக்கொண்டாய். புற உலக அழுக்குகளிலிருந்து காப்பாற்றி அதனை மாத்தூய்மையாக வைத்துக் கொள்வது எப்படி". தன்னந்தனிமையில் இயற்கையின் மெல்லோசை இசையின் வடிவத்தில் மூழ்கும் தவ அனுபவங்களில் தன்னைப் பறிகொடுத்த இனிய எண்ணக்கோலங்களை நூலின் இரண்டாம் பகுதி விவரிக்கிறது. கண்ணைப் பறிக்கும் வைரங்கள் பதித்த நீலவெல்வெட்டு ஆடையுடுத்திக் கொண்டு இணையற்ற அழகுமிளிர இருட்டுப்பெண் காட்சியளிக்கிறாள். மென்மையாகப் பட்டாடை அவள்மேல் உரசுகிறது. அவள் பாடும் அமைதியான பண்ணோசை அண்ட பேரண்டங்களையெல்லாம் கடந்து விண்மீன் கூட்டங்களை இசையுகிலல் மிதக்கச் செய்கிறது. அந்த இன்னோசை புலவரின் காதிலும் பாய்கிறது. இயற்கைத்தாயின் உறக்கத்தில் தோன்றும் மென்மையும் இனிமையும் கலந்த நள்ளிரவுக் கனவுபோல் மெல்லிய அரும்புகள் மலர்கின்றன. இது இசையின் அற்புதமாகலாம். வியந்து நோக்குபவரின் மருட்சியற்ற கண்முன்னே அளவிடற்கரிய இயற்கையழகு விரிகிறது. பார்ப்பவரின் செருக்குணர்வு பனிபோல் மறைகிறது. நமக்குப்புலப்படும் எல்லையற்ற விரிவானத்தின் சின்னஞ்சிறு மூலைக் கோணத்தைக் கூட நம்மால் புரிந்துகொள்ள முடியாது. கண்கள் தம் பார்வைத்திறனை பதினாயிரமாகப் பெருக்கிக் கொள்ள முடியாது. அளந்தறியாத விரிவானப் பெருவெளியில் சிதறிக்கிடக்கும் வியத்தகு படைப்புகளின் பல்வேறு தோற்றங்களில் மாந்தரின் கண்ணால் சின்னஞ்சிறு துளியளவுதான் மேலோட்டமாகப் பார்க்க முடியும் பலகோடி சூரியர்களும் கோள்களும் விண்மீன்கூட்டங்களும் புடைசூழ்ந்து வணங்க, பேராற்றல் வடிவிலான மூழுமுதற்கடவுள் நடுவில் செம்மாந்து வீற்றிருக்கிறார். அவர் முன்னிலையில் விடியலும் அந்திப்பொழுதும் நாட்டியமாடுகின்றன. பிறப்பும் இறப்பும் என்னும் காவலர்கள் தலை வணங்கி கட்டளை எதிர்நோக்கி நிற்கின்றன.

"என் இதயத்துடிப்பு என்னும் பறை யோசைக்கு ஏற்ப
இறைவனுடைய
புகழைத் தொடர்ந்து பாடிக்கொண்டிருக்க நான் எவ்வளவு ஆசை
கொண்டிருக்கிறேன் என்பது தெரியுமா? அவனுடைய
திருக்கோயில்
கோபுர வாசலில் நின்று மூலக்கருவறையை உற்றுப்பார்த்த
வண்ணம்
காலமும் தாளமும் கணித்து அவனைப் போற்றிப் பாடும்
இன்பத்திற்கு எல்லையில்லை."

மூன்றாம் பகுதி காணமுடியாததைக் கண்டுணரும் வியத்தகு அனுபவங்களின் தொகுப்பாக விளங்குகிறது. தொலைவும் இருட்டும் தெளிவான காட்சிக்கு இடையூறாக இருப்பவை எனினும் இங்கு அதே இருளும் தொலைவும் தெளிவான காட்சிக்கு உறுதுணையாகும் புகைப்படக்கருவிகளாக மாறிவிட்டன. பேரண்டத்தை நுனித்து நோக்க அவை உதவின. மனம் என்னும் தொலை நோக்காடியின் மூலம் பார்க்கும் போது நெடிய தொலை தூரங்கள் குறுகி விரிந்தன. வானத்து விளிம்பின் ஒளிவெள்ளம் வெளிச்சத்தை மட்டுப் படுத்திக்கொடுத்தது. அதனால் மனத்திரையில் எல்லையற்ற பேரண்டத்தின் வடிவம் தெளிவாகப் படிந்தது. இருண்ட கருவானம் நீலச்சிறுகோடாகக்குறுகியது. கரும்பச்சை இலைகளின் விளிம்பில் சின்னஞ்சிறு மஞ்சள் குருவி இறகினால் வளைந்த வண்ணக்கோடுகள் பளிச்சிட்டன. அடடா! அது மூன்றாம்பிறை எனப் பின்னர் தெரிந்தது. கண்ணுக்கு எட்டிய தொலைவு ஒளிவிடும் மலர்க்கொத்துகள் ஏராளமாகப் பூத்துக் குலுங்கின. சில நீலம், சில சிவப்பு, சில மஞ்சள், சில வெள்ளை.. கவிந்த காரிருளும், உள்ளபடியே, உவப்பூட்டியது.

காரிருள் பூவின் மகரந்தப்பொடிகள் என் கற்பனைச் சிறகுகளின் மீது விழுந்தபோது என் மனத்தில் புத்தொளி பாய்ச்சி கற்பனைச் சிறகை விரியச் செய்தன. கற்பனைப் பறவை விண்ணிலேறி எட்டாத உயரங்களில் ஒய்யாரப் பண்பாடி பறந்தபோது என்பாட்டு மொழிகளால் அதன் உயரத்தை எட்டிப்பிடிக்க முடியாமல் திணறினேன். என் முயற்சி வெற்றுவேட்டாயிற்று கள்வெறி கொண்ட கற்பனைப் பறவை மலர்க்காவில் புகுந்து மகரந்தப் பொடியூதித் தேனருந்திய களிமயக்கத்தால் தன்னை மறந்தநிலையில் பறந்து நடனமாடியது. பொழியும் ஒளி வெள்ளக் கதிர்களின் ஊடே பறந்து பால் வெளிமண்டலங்களைக் கடந்து பெருஞ்சுடர்கோளத் தொகுதிகளில் போய் உட்கார்ந்து ஓய்வெடுக்கிறது. அங்கிருந்து முளைத்து ஓடிய கொடியின் விளிம்பில் ஒரு மூக்குத்திப் பூ தெரிகிறது. அதுதான் சூரியன். ஒரு வண்ணத்துப்பூச்சி வானவில்லின் வண்ணங்கொண்ட மலர்மொட்டுகளை முத்தமிட்டவாறு சுற்றிப்பறக்கிறது. அதுதான் மண்ணுலகம். அதன் விளிம்பின் ஒரு கோடியில் காணப்படுவது யார்? அது நானேதான்.

இந்த அளப்பருங்காட்சி மாந்தனின் உள்ளத்தில் தெய்வப்பற்றைத் துலங்கசெய்து பணிவு, அறிவுடைமை, வியப்பு ஆகிய உணர்வுகளைப் பதியச்செய்யவல்லதாகும்.

> "சிறிது பணிவு காட்டினால் போதும் சிறிது உள்ளத்தூய்மை
> வெளிப்படுத்தினால் போதும்.
> பேரண்டப்பெருவெளியின் தேவகானத்தை உறுதியாகச்

செவிமடுத்து மகிழலாம்.
இறைவன் புகழைப்பாட வேண்டும். அவனே
அனைத்துலகங்களுக்கும் அடிப்படையான மூலம்
என்றுணரவேண்டும். அவனிடமிருந்தே இந்தப் பேரண்டங்கள்
தோன்றி விரிக்கின்றன என்று தெளியவேண்டும். இந்த
உண்மைகளை அடிப்படையாகக் கொள்ளுங்கள்"

இரண்டு வகைக் காட்சிகள் விரிவானத்தின் உண்மைகளைத் தெளியவும் அற்புதங்களின் விளைவுகளை விரிவாக விளங்கிக்கொள்ளவும் உதவுகின்றன. அவற்றுள் முதலாவது, நாடோடி மாந்தனைப்போல் குறிக்கோளற்றுத் திரிந்து கொண்டிருக்கும் மண்ணுலகத் தாயின் முந்தானையில் கிடக்கும் குழந்தையாகத் தன்னைக் கருதிப்பார்ப்பது; இரண்டாவது யசோதை குழந்தைக் கண்ணனின் வாயைத் திறக்கச்சொல்லி அதனுள் பேரண்டங்களின் காட்சிகண்டு வியந்த காட்சியை, மனத்திரையில் காண்பது. அக்காட்சியைக் கண்டு யசோதை வாயை மூடிக்கொள்ளுமாறு கண்ணனை வேண்டினாள். ஆனால் இங்கு, புலவர் 'ஜி' அரிதிலும் அரிதான, உண்மைக்குள் உண்மையான அத்தகைய பெருட்காட்சிகளைத் தொடர்ந்து காண்பதற்காக வாயை மூடச்சொல்லாதீர்கள் என்று இயற்கைத்தாயைப் பணிந்து முறையிடுகிறார்.

"விசுவதரிசனம்" என்னும் பாடல் தொகுதிக்கு, அது வெளிவந்த 1960ஆம் ஆண்டிலேயே கேரள சாகித்திய அக்காதாமியின் விருது கிடைத்தது. 1963ஆம் ஆண்டில் கேந்திர சாகித்திய அக்காதமியின் விருதும் கிடைத்தது. இதில் உள்ள எல்லாப்பாடல்களும் உலகியலையும் அற்புதக் காட்சிகளையும் குறித்தவனவல்ல. நாட்டுப்புறப்பாடல் அமைப்பில் சந்தனக்கட்டில் என்று நெடும் பாடல் இயற்றினார். ஒரு பெண்கழுகின் துயரத்தை விளக்கும் பாடல் அது.

ஒரு நாள், பெண் குழந்தை ஒன்றைக் காலில் பற்றியெடுத்துக்கொண்டு பறந்த அந்த பெண்கழுகு அக்குழந்தையை நடுக்காட்டிலிருந்த சந்தனமரப்பொந்தில் வைத்தது. குழந்தையைத் தொட்டுப் பார்த்து பெண் கழுகின் தாயுள்ளத்தில் அன்பு சுரந்தது. குழந்தையைக் கொன்று தின்ன மனம் வரவில்லை. காட்டிலிருந்து பழங்கள் கொணர்ந்து கொடுத்துக் குழந்தையைப் பரிவுடன் வளர்க்கத் தொடங்கிவிட்டது. குழந்தையைச் சிறகால் அணைத்துக் கொண்டு உறங்கியது. அல்லும் பகலும் தன் குழந்தையாகவே கருதி நன்கு வளர்த்தது.

ஒருநாள் அரசிக்கு சந்தனக்கட்டில் செய்வதற்காக அரசனின் ஏவலாளிகள் காட்டில் நல்ல சந்தனமரம் தேடிக்கொண்டு வந்தனர். பெண் குழந்தை இருந்த சந்தனமரத்தில் முதல் வெட்டு பட்டவுடனே ஒரு குரல் கேட்டது.

"அன்புள்ள நண்பர்களே மரத்தை வெட்டாதீர்கள்
அன்புள்ள ஏவலாளிகளே மரத்தை வெட்டாதீர்கள்."

எல்லோரும் இதைக்கேட்டுத் திடுக்கிட்டனர். பேய் அல்லது பூதம் இந்தச் சந்தன மரத்தில் இருக்கலாம் என அஞ்சினர். துணிவுமிக்க ஒரு பணியாளன் கையில் கத்தியெடுத்துக் கொண்டு மரத்தின் மேலேறிப்பார்த்தான். மரப்பொந்தில் அழகிய பெண்குழந்தை இருப்பதைக் கண்டு வியந்தான். குழந்தையை எடுத்துக்கொண்டு கீழிறங்கி வந்தான். அனைவரும் சந்தனமரத்தை வெட்டினர். சந்தனமரத்துடனும் குழந்தையுடனும் அரண்மனை நோக்கிச் சென்றனர். கழுகுத் தாயைப் பிரியும் துக்கத்தில் பெண்குழந்தை தான் போர்த்தியிருந்த சிவப்புத் துணியைத் துண்டு துண்டாக கிழித்து வழிநெடுக அடையாளமாகப் போட்டுச் சென்றது.

அன்று மாலை பழக்கொத்துகளுடன் சந்தனமரத்துக்குத் திரும்பிய பெண் கழுகு மரத்தையும் குழந்தையையும் காணாமல் துயரம் தாளாமல் தவித்தது. வழிநெடுகக் கிழித்துப் போடப்பட்டிருந்த சிவப்பு துணித்துண்டுகளின் அடையாளத்தைப் பின்தொடர்ந்து உயர்ந்த கோட்டைகள் சூழ்ந்த அரண்மனைக்குச் சென்றது. உள்ளே கடந்து செல்ல முடியாமல் கோட்டை மதிற் சுவரில் மண்டையை மோதிக் கீழே விழுந்து பெண் கழகு இறந்துவிட்டது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு வளர்ந்து பெரியவளான சந்தனமரத்துப் பெண் குழந்தை இளவரசனை மணந்து கொண்டாள். முழுநிலா நாளில் சந்தனக்கட்டிலில் இளவரசனுடன் இளவரசியாக அமர்ந்த அந்தப்பெண்ணின் மனம் தவித்தது. இளவரசன் ஆவலுடன் இள்வரசியை முத்தமிடக் குனிந்தான். அவள் கண்களில் நீர் துளிர்ந்தது. அது மகிழ்ச்சிக் கண்ணீரா துயரக் கண்ணீரா என்பது யாருக்குத்தெரியும்? தாயின் தியாகமும் தாய்ப்பாசத்தின் உருக்கமும் என்றும் நிலைத்த உள்ளத்து உணர்வுகளாகும். குழந்தையின் நலத்துக்கும் வளத்துக்குமாகத் தாய் தன்னை மாய்த்துக் கொள்கிறாள். இளமையின் இன்ப வாழ்விற்கு முதுமை உரமாகிறது. வாழ்வின் ஏற்றத்தாழ்வுகள் அந்தத்தியாகச் சுடர்களால் ஒரு பொருட்டாக் மதிக்கப்படுவதில்லை. எளியபாங்கும் உயர்ந்த கற்பனை வளமும் கொண்ட இந்த நெடும் பாடல் 'ஜி' யின் அனைத்துப் பாடல்களையும் விஞ்சி முடிமணியாகத் திகழ்கிறது. இடைக்கால நாட்டுப்புற வாழ்க்கையின் சமூகப்பொருளாதார நிலைகளையும் உழவர் குடிசையின் இயற்கைச் சூழல்களையும் உயர்ந்த கற்பனை வளத்துடன் படம் பிடித்துக்காட்டும் முயற்சியில் இப்பாடல் தனிச் சிறப்புப்பெற்றுத் திகழ்கிறது.

"விசுவதரிசனம்" பாடல் தொகுப்பில் உள்ள "மாமா வாழ்த்துகிறார்" கண்களை அகல விரித்துக் கொண்டிருக்கும் காலம்" யசோதரா" போன்ற

பாடல்கள் குறிப்பிடத்தக்கவை. நிலவை மலையாளத்தில் மாமா எனக்குறிப்பிடுவதுண்டு. இதற்கு 'ஜி' அறிவியலடிப்படையான உண்மையைப் பற்றுக்கோடையாகக் கொண்டு ஒரு கற்பனைப் பொருத்தம் காட்டுகிறார். நிலவுலகமும் நிலவும் உடன்பிறந்தவையே. ஏதோ ஒரு காலத்தில் நிகழ்ந்த பேரதிர்ச்சியால் நிலவு பிரிந்து தனியாகச் சென்றுவிட்டது. நிலவு தன் உடன் பிறந்தவளான நிலமகளைத் தொலைவிலிருந்து பார்த்து பாசம் சொரிந்து கொண்டிருக்கிறாள். நிலமகள் ஒளியைத் திருமணம் செய்துகொண்டாள். அவளுக்குப் பச்சை பட்டாடையை மணமகன் பரிசளித்தான். அவள் பெற்ற மாந்தக் குழந்தைகளுக்குச் சோறூட்டும்போது அவை அழும் போதெல்லாம் தாய்மாமனாகிய நிலவைக்காட்டி அமைதிப்படுத்துகிறாள். அக்குழந்தைகளின் மீது அமுதவொளியைப்பாய்ச்சி நிலவு மகிழ்வுறுத்துகிறது. தன் உடன் பிறந்தாளின் பிள்ளைகளின் யாரேனும் ஒருவராவது ஒருநாள் நிலவில் காலடியெடுத்து வைப்பார்கள் என்னும் நம்பிக்கை நிலவுக்கு வளர்ந்திருக்கிறது. அந்தப்பொன்னான வேளையை ஆவலொடு நிலவுமாமன் எதிர்நோக்கியிருக்கிறான்.

"உயிரற்று உணர்வற்று சவம் போல் கிடக்கிறேன் நான் அவர்கள் இங்குக் காலெடுத்து வைத்து எனக்குப் புத்துயிரூடுவார்கள் என நம்புகிறேன் என்றும் தேயாத மாயாத நீலவான நெடும்பரப்பில் அவர்களுக்கு அமைதியாக நீந்தக்கற்றுக் கொடுப்பேன். ஏனென்றால் அவர்களுக்கு உரிமை மாமன் நான் தங்கையே சிறிதும் வருந்தாதே. எல்லோரையும் ஆடுமாடுகளைப் போல் ஓட ஓடவிரட்டும் விதியைக் கூட தடுத்து நிறுத்தி "ஏன் எதற்காக இப்படிச் செய்கிறாய்" என்று துணிந்து கேள்விகேட்கும் துணிச்சல் மிக்கவாகள உன் குழந்தைகள். அவாகள அன்புக்குரிய காலநடைகளை பலியிடமாட்டார்கள். கால்நடைகளுக்குத் தீனியிட்டு மேய்த்து காத்து அன்போடு பாதுகாப்பு அளிப்பார்கள். அண்டவெளியில் உலவும் எத்தனையோ பால்வெளி மண்டலங்களையும் விண்வெளிக் கோள்களையும் ஆடுமாடுகளாக மாற்றி அந்தத் தெய்வீக மாட்டு மந்தைகளுக்கு மகிழ்ச்சியூட்டி மேய்ப்பார்கள். அந்த நாளும் வரும். உறுதியாக அந்த நாள் வந்தே தீரும். தங்கையே மகிழ்ந்திரு குழந்தைகளுக்கு என் வாழ்த்துகள்"

வானத்தின் உள்மருமங்களைக் கண்டறிய ஒருமாந்தன் வானவெளியில் பறந்தபொழுது அந்த நாள் உண்மையாகவே கண்முன் கடைசியாக மலர்ந்தது. "கண்களை அகல விரித்துக் கொண்டிருக்கும் காலம்" என்னும் கவிதை எழுதியதே யூரிகாகரின் என்பவர் முதன்முதலாக வானவெளியில் வெற்றிகரமாகப் பறந்து தரைக்குப் பாதுகாப்பாகத் திரும்பி வந்தபோது தான். அவர் விண்ணில் பறக்கும்போது விண்கலத்திலிருந்து வெளியில் வந்து நின்று அருஞ்செயல் செய்து காட்டியவர். அப்போது வானம் என்னும்

நீலக்குல்லாய் அணிந்து நிமிர்ந்து நிற்கும் காலம் என்னும் வானுலக வாயிற்காவலனை நோக்கி, "ஏ! காலக்காவலனே! விண்வெளியை வென்ற வீரன் வருகிறான். உன் குல்லாயைக் கழற்றி உயர்த்தி அந்த வீரனை வரவேற்று ஊக்கமூட்டு" என்று பாடினார்.

உலகம் ஞானிகளைப் போற்றுகிறது. ஆனால் அந்த ஞானிகளுக்கு வாழ்க்கைப்பட்ட உத்தமிகளுக்கு நேர்ந்த வேதனைகள் சோதனைகள் ஆகியவற்களைப்பற்றி ஒருவரும் கவலைப் பட்டதில்லை. "யசோதரா" என்னும் பாடலில் மெய்யுணர்வு பெற்று அரண்மனைக்குத் திரும்பி வந்த கௌதமபுத்தரின் வருகையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். மனைவியைத் துறந்து அரண்மனையை மறந்து அவர் வெளியேறி எட்டாண்டுகள் உருண்டோடிவிட்டன. இத்தனைக் காலமாகத் தனிமைத்தவமிருந்த அந்த மாதரசியின் மனவேதனைகள் எழுதிமாளாதவை. தன் கணவர் மீண்டும் அரண்மனைக்கு வருகிறார் என்றதும் ஒரு நப்பாசை அவள் உள்ளத்தில் நிழலாடியது.

"எனக்கு வேறொன்றும் வேண்டாம் அவர்
என் அருகில் தனித்து வந்து நின்றால் போதும்
அழுதழுது வறண்டு போன என்
கண்களை அவர் உற்றுப் பார்த்தால் போதும்"

எல்லா உயிர்களுக்கும் நலமும் அமைதியும் பொழியும் அந்தக் கருணை மேகம் அரண்மனைக்கு வந்ததும் மனைவியைக் காணச் செல்லவில்லை. அந்த ஒரு உயிருக்கு சாந்தி வழங்கும் பேறு அவனுக்கு வாய்க்கவில்லை.

எல்லோரும் அரண்மனையில் அவரை வரவேற்று நெருங்கி நின்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். எதிர்பார்ப்புகளோடும் குமுறும் மனத்துடிப்புகளோடும் வேதனையின் விளிம்பில் நிற்கும் அம்மாதரசி அந்தப்புரத்தின் ஒரு மூலையில் ஒதுங்கி உட்கார்ந்து கொண்டிருந்தாள். "ஒரு காலத்தில் நான் ஒருத்தியே அவருக்கு எல்லாமாக இருந்தேன். இப்பொழுது என்னைப்பற்றிய சிறு நினைவு கூட அவருக்கு இல்லை" என்று அவள் மனம் புலம்பியது. தான் என்னும் வீம்பும் பிடிவாதமும் உதறித்தள்ளிவிட்டு தானாகவே எழுந்து சென்ற கணவனைக் கண்டு வணங்கினாள். எல்லோரையும் வாழ்த்துவது போல "சாந்தி உண்டாகட்டும்" என்று இருசொல்லால் வாழ்த்திவிட்டு வாயை மூடிக்கொண்டார். அவளோடு மேலும் சிறிது நேரம் பேசியிருக்கக் கூடாதா? எட்டாண்டுகளாகத் தனிமைத் துன்பத்தில் வெந்த உள்ளத்தின் வெம்மை தணிய இந்த இரண்டு அமுதத்துளி சொற்கள் போதுமா? கூடுதலாகச் சிறிதுநேரம் உரையாடும் தகுதி அவளுக்கு இல்லையா?

துவண்டுபோன பூங்கொடிபோல் மீண்டும் அந்தப்புரத்தில் உள்ளறைச் சுவரில் சாய்ந்து நின்று கொண்டாள். துயரத்தால் அவள் நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. அதற்குள் அருமை மகன் இராகுலன் அங்கு வந்தான்.

"அம்மா ஏன் இங்கே தனியாக நிற்கிறாய்? கொலுமண்டபத்தில்
அப்பா வந்திருக்கிறார். தாத்தாவும் அருகிலிருக்கிறார்."

என்றான். அவன் குரலில் புத்தரின் குரலோசை ஒலித்தது. துன்பத்திலும் ஒரு இன்பக் கிளுகிளுப்பை அவன் பேச்சு ஊட்டியது. மகனின் கையைத் தூக்கி முத்தமிட்டாள்.

"அன்புமகனே! உன் தந்தையாரின் கையில் மூன்று
மாணிக்கக்கற்கள் உள்ளன. அவை மூன்று உலகங்களை
விட விலைமதிப்பானவை. அவற்றைத்தருமாறு அவரை
வணங்கிக்கேள். நான் உனக்கு அன்புமுத்தம்
தருவதைவிட வேறென்ன தரமுடியும்?"

ஒன்றுமறியாத இளஞ்சிறுவன் தன் பிஞ்சுக் கைகளை விரித்துத் தன் தந்தையிடம் மூன்று மாணிக்கங்களைக் கொடுங்கள் என்று கேட்டான். கௌதமபுத்தர் தன் திருவோட்டைக் கவிழ்த்துக்காட்டி

"பார் இந்தத் திருவோடு உன்னால் தூக்க முடியாத
அளவு கனமாயிருக்கிறது. பாட்டனார் உனக்கு மணிமுடி
அளிப்பார் அதைச் சுமப்பதே நல்லது"

என்று மறுமொழியளித்தார். அதற்கு இராகுலன்.

"எனக்கு அந்த பொம்மை மணிமுடி வேண்டாம்
அந்த மணிமுடியை என் தாயாரின் புடவை விளிம்பில்
அணிகலத் தொங்கலாக மாட்டி
விடுவதற்கும் மிகவும் பெரியது. உலகின் பொய்த்
தோற்றங்களைக் கண்டு நம்பமாட்டேன்.
நான் உங்களோடு வந்து விடுகிறேன்."

என்று தயங்காமல் கூறினான். அதுமட்டுமன்றி திரும்பிப்பாராமல் தன் தந்தையோடு அரண்மனையை விட்டு வெளியேறி விட்டான். யசோதரை இக்காட்சியைக் கண்டு.

"எனக்கென்று எதுவும் இல்லை. எல்லாம் கொடுத்துவிட்டேன் என்றாள். அவள் உலகெல்லாம் திரிந்து போதிமரத்தடியில் அமர்ந்து மெய்யுணர்வு பெறவேண்டியதில்லை. அந்தப்புரத்தின் ஒரு மூலையில்

தனிமைத் தவமிருந்ததன் பயனாக "உலகம் துன்பமயமானது" என்னும் மாபெரும் உண்மைகளைக் கண்டு கொண்டாள். இந்தப்பாடல் இதயத்தைச் சுண்டியிருக்கும் வேதனைத் துடிப்புகளோடு முடிகிறது.

"சீவன் சங்கீதம்" என்னும் அடுத்த பாடல் 1964 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. சிவதாண்டவம், பாணனார், நிழல் நீளுகிறது, பழைய கடிகாரம், மாசற்றவர்கள், தங்கள் ,முன்னிலையில், போன்ற தலைசிறந்த பாடல்களைக் கொண்ட தொகுதி இது.

சிவபெருமானின் ஊழிக் கூத்தினை விளக்குவதே சிவதாண்டவம். பரந்தவெளியும் நெடிய காலமும் ஒன்றித்த ஊழியென்னும் அந்திப்போதில் நடராசன் வடிவம் கொண்டு ஆண்டவன் ஆடும் கூத்தே தாண்டவம் எனப்படுகிறது.

> "கூத்தாடும் சிவனின் விரிகூந்தல் மாலைநேரத்து வானமாயிற்று
> விண்மீன்களால் தொடுத்த பூமாலை சிதைந்து விண்மீன்கள்
> சிதறியோடின.
> சுழன்றாடும் கடுங்கூத்தின் விசையால் பிறை நிலா ஒரு பக்கமாக
> ஒதுங்கி நின்று ஒய்யாரத் தண்ணொளி வீசுகின்றது.
> அந்தி வானத்தின் கருக்கிருட்டு குருதி படிந்த யானைத்
> தோலாக காட்சியளிக்கிறது. மயங்கிநிற்கும் இந்த
> ஆன்மாவின் மேல் பொழியும் வெண்ணிலவின் தண்ணொளி
> வெண்சாம்பல் துகள்களாக விழுகிறது. நீண்ட நெடுந்
> தொலைவில் உள்ள சூரியக் கூட்டங்கள் ஆண்டவனின் ஊழிக்
> கூத்தை அகலக் கண்விழித்து காண்கின்றன."

இயற்கையின் நிகழ்வின் இந்த வருணனை சமய நம்பிக்கைகளின் அடிப்படையில் புனையப்பட்ட தொல்கதைகளுக்கு உருவம் கொடுத்திருக்கிறது. இதை உருவகம் என்று புறக்கணிக்க முடியாது. இந்தக் காட்சி அண்டப்பிரப்பிலுள்ள அனைத்துயிர்களையும் தன்பால் ஈர்க்க வல்ல மந்திர ஆற்றல் கொண்டது. இதைப்போன்ற அனுபவங்களை மாலைப் பொழுதில் கடற்கரையில் தனிமையிலமர்ந்து நுகர்ந்த பிரிட்சாப் சாப்ரா என்பவர் "தாவோ ஆப் பிசிக்ஸ்" என்னும் தன் நூலில் விவரித்திருக்கிறார். "வானவெளியிலிருந்து ஆற்றலின் கதிர்வீச்சுத்துகள்கள் நாதத்துடிப்புகளோடு அலைபாய்ந்து வருவதைக் கண்டேன். அந்த அணுக்களின் அலை பாய்ச்சல்கள் நாட்டிய அசைவுகளைப் போன்றிருந்தன. அவை என்னுள்ளும் பாய்ந்து மெய்மறந்து நாட்டியமாடும் உணர்வுகளை எழுப்பின. நாட்டிய ஆடல்களும் அதற்கேற்ற பின்னணிப் பாடலின் இசையும் என் காதில் ஒலித்தன. இந்துக்கள் போற்றி வணங்கும் ஆடலரசனாகிய சிவபெருமானின் ஆனந்தக் கூத்து இதுவே என உணர்ந்தேன்"

கற்பனை கோட்பாடுகளை உட்கொண்ட வெறும் கற்பனை உணர்வுகளையே இப்பாடல் குறிப்பிடுவதாயினும் வேதத்தின் உட்பொருளை குறிப்பதாக அமைந்துள்ளது. எனினும் பகுத்தறிவின் அடிப்படையிலான அறிவியல் அடிச்சுவடுகளும் இதில் இல்லாமல் இல்லை. அதனால் இந்த நூற்றாண்டின் தேவைகளுக்கும் ஈடுகொடுப்பதாயிருக்கிறது. இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் எனும் மூன்று காலங்களும் மூன்று கண்களாக காட்டப்பட்டுள்ளன. மாதொரு பாகனாக உருவகிக்கப்படும் சிவனின் தோற்றமே மக்கள் தொகையில் பாதி ஆணாகவும் பாதி பெண்ணாகவும் அமைந்துள்ளது. இறைவனின் பறையோசையே உலகில் பற்பல மொழிகளாகிவிட்டன. இதனடிப்படையில் தோன்றிய மொழியும் பண்பாடும் உலகமக்களின் பொதுமரபாகுமேயன்றி தனிப்பட்டவர்க்குரியதன்று. ஆதலால் தன்னைப் புகழந்து கொள்பவன் தன் தகுதியை இழந்துவிடுவான். இறுதியில் கையில் திருவோடு ஏந்திச் சென்றுதான் இழந்த அன்பை இரக்க நேரிடும். தன்னைப் பெரிதாக நினைத்துக்கொள்ளும் பலூன் மனப்பான்மை வெடித்தபிறகு தான் உலகியல் புரியும். தன்னலத்தை அடிப்படையாகக் கொண்ட சாதி சமய தேசம் பற்றிய குறுகிய மனப்பாங்குகளை மாற்ற இந்தப் பாடல் மாந்த இனத்தின் பரிமாணத்தை சிவனோடு ஒப்பிட்டுக்காட்டுகிறது. மாந்த இனத்தின் பரிணாமத்தோடு ஒத்துப் போகாத குறுகிய தன்னலம் கொண்டோரின் அழிவையும் சுட்டிக்காட்டுகிறது. சிவனின் ஊழிக்கூத்து என்பது இதுவே.

சிவதாண்டவம் என்பது பழையக் கற்பனைக் கொள்கையைப் பறைசாற்றுவதன்று. மாந்த இனததை அழிவுக்கூத்து என்று நினைக்கும் மதவாதிகள் இநதப் பாடலின் பொருளை நன்குணரமுடியாது. தன்னலங் கொண்ட தீயவர்களின் அழிவைக்குறித்த கூத்து இது என்று தெளிய வேண்டும். இவ்வகையில் இப்பாடல் ஒருபுரட்சி உணர்வை உட்கொண்டிருக்கிறது என்று கூறலாம்.

இக்கருத்துக்கு ஊட்டமும் வலிவும் தருவதற்காகப் புனையப்பட்ட விளக்கமாகவோ உருவகமாகவோ இதனைக் கருதலாகாது. வாசகர்களின் ஆன்மாவுக்கு ஒளியூட்டும் மாபெரும் உண்மையாகவே அறிதல் வேண்டும். மாந்தரின் உள்ளத்தினலமும் மாறுபட்ட உணர்வுகளான தெய்வீகப்பற்றுணர்வும் புரட்சிக் கொப்பளிக்கும் சிந்தனையுணர்வும் ஒன்றுக்கொன்று இணங்கிவர வேண்டும். தன்னையே உலகங்களாக விரித்துக் காட்டும் படைப்புக்குரிய இறைவனுக்கு அவனுடைய படைப்பூக்கமே எல்லா மனப்பூசல்களையும் தணிக்கும் வல்லமையுடையதாகும். சிவதாண்டவத்தில் பரம்பொருளை நாடும் மெய்யுணர்வும் சமுதாயச்சிக்கல்களையும் தனிமாந்தனின் மனப்போராட்டங்களையும் தணிக்க முயலும் பகுத்தறிவாளனின் ஆர்வமும்

ஒருங்கிணைகின்றன. இந்த ஒருங்கிணைவு கற்பனையளவில் நிற்காமல் மாறுபட்ட மனப்பாங்குகளுக்கு மருந்தாகிறது. இது புலவர் நோக்கில் தனிமாந்தனின் சிக்கலை மட்டும் சுட்டுவதாக இருந்தால் மாந்த இனத்தில் மனத்தைத் தொட்டிருக்காது. இதிலிருந்தே இது சமுதாய நோக்கம் கொண்டது என்பது தெளிவாகிறது. அம்மையப்பன் வடிவில் வீறார்ந்த எழுச்சியோடும் சினம் பொங்கும் வேகத்துக்கு இயைந்த தாளத்தோடும் இறைவன் ஆடும் கூத்து சமுதாயச் சிந்தனையாக உள்ளடங்கித் தோன்றுகின்றது. மாந்த இனத்தின் ஒட்டு மொத்தமான விடுதலையில் நாட்டமும் நம்பிக்கையும் கொண்ட மாந்த உள்ளங்களின் மனச்சான்றின் தொகுப்பு என்றும் கூறலாம். இத்தகைய வேட்கைகளுக்கு வடிகால் வகுத்துக் தந்துள்ளதால், இந்தப்பாடல் மாந்த இனத்தின் மனப்புண்களுக்கு மருந்தாகப் போற்றப்படுகிறது.

இதைப்போன்ற கருத்துக்கோவையே பெயர்பெற்ற ஒரு பழங்கதையின் அடிப்படையில் எழுதப்பட்ட பாணனார் என்னும் பாடலிலும் காணப்படுகிறது. வருவது உரைக்கும் திறன் வாய்ந்த பழந்தமிழ்ப் புலவராகிய பாணனார் திருவரங்கத்திலுள்ள பெருமானைத் துயிலுணர்த்தப்பாடிய பாட்டு பேரண்டங்களின் அழிவைத்தடுத்தது. பேரண்டங்கள் அழியும் என்ற நிலை வந்தபோது, திருவரங்கத்தில் துயிலிலாழ்ந்த பெருமாளைத் துயிலுணர்த்தி எழச் செய்வதற்காக நான்முகன், சிவன், முனிவர்கள், ஆகியோர் செய்த முயற்சிகள் தோல்வியடைந்தன. பெருமாள் எழுந்தால் தான் அழிவிலிருந்து உலகங்களைக் காப்பாற்ற முடியும். கலைமகள், மலைமகள் போன்ற தேவியரும் முயன்று தோற்றனர். மண்ணுலகத்துப் புலவர்களின் வாக்குக்கு வலிமை அதிகம். ஆதலால புலவர் ஒருவரின் துணைகொண்டு திருமாலைத துயிலெழுப்பலாம் என்று கலைமகள் கூறினாள். அதன்படி வரவழைக்கப்பட்டவரே பாணனார். காலத்தின் நடுப்பகுதியைச் சிறிய பறையாகச் செய்து அதன் ஓசைக்கிணங்கப் பண்ணமைத்துப் பாடத்தொடங்கினார். மேலுலகங்கள் ஏழும் ஏழுமேற் சுரங்களாயின. கீழுலகங்கள் ஏழும் ஏழு கீழ்ச்சுரங்களாயின. அந்தத் தெய்வீகமான பண்ணோசை கேட்டு திருவரங்கப் பெருமாள் கண்திறந்தான். பேரண்டங்கள் அழிவிலிருந்து தப்பித்துக் கொண்டன. திருவரங்கத்துப்பெருமாள் அன்பின் வடிவமாக உருவகிக்கப்பட்டுள்ளான். மாந்த இனத்தின் மனத்தில் நெட்டுறக்கம் கொண்டிருக்கும் அன்பு கண் விழித்து எழுந்தால் உலகத்துன்பங்கள் நீங்கிவிடும். அன்பை, தூக்கத்திலிரந்து எழுப்பாமல் இருந்தால் மாந்த இனம் அழிந்துவிடும். மாந்தரினத்தின் தலைமீது தெமாக்கலிசின் வாள்போல் அழிவு செய்யும் அணு ஆயுதங்கள் தொங்கிக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் பாணனார் போன்றவர்களின் தேவை மிகமிக அதிகரித்திருக்கிறது.

"திருமுன்பில்" என்னும் பாடல் தெய்வப்பற்று மிகுந்த ஆன்மா தன்னைக் காணிக்கையிட்டுக்கொள்வதைக் கூறுகிறது. இப்பாடலில் முளைத்தெழும்புல் பேசத் தொடங்குகிறது. அது இல்லறப்பள்ளத்தில் அடிமட்டத்திலிருந்து கூப்பிய கைகளுடன் முளைத்தெழுகிறது. கைகூப்பி வணங்குவதற்கு அதற்குக் கற்பித்தவர்கள் யார்? யாருமில்லை. அந்த ஆர்வம் வேரிலிருந்தே எழும்பியிருக்கிறது. சிறியபுல் என்றாலும் உள்ளார்ந்த தெய்வப்பற்றின் உந்துதல், முடிய மண்மையும் தடுத்து நிற்கும் கல்லையும் பிடித்துத் தள்ளி விட்டு மெலெழுந்துவரச் செய்துவிட்டது. விடியற்காலை என்னும் இறைவன் திருக்கோயிலில் வழிபட வரும் பல்லாயிரம் உயிர்த்தொகுதிகளின் முடிவிலா நெடிய வரிசையில் இந்தப் புல்லும் ஒன்றாகும். வரிசையில் நிற்போரில் எல்லோரும் சமம் யாரும் புறக்கணிக்கப் படுவதில்லை. மஞ்சள் பட்டு உடுத்திக்கொண்டு கீழ்வானில் எழும் கதிரவனே கண்ண பெருமான். வானம் என்னும் கடம்ப மரத்தில் கரிய இலைகள் தழைத்த ஒரு கிளையில் அமர்ந்தவாறு புல்லாங்குழல் ஊதுகிறான். அந்தக் குழலோசை காலம் என்னும் பேராற்றின் கரைகளில் எதிரொலிக்கிறது. குன்றுகளும் மலைகளும் அந்த இனிய ஓசையை மெய்மறந்து கேட்கின்றன. அந்தக் குழலோசையின் பின்னே அவை ஓடி வந்தாலும் வியப்பில்லை. கடலலைகள் கட்டவிழ்த்துக்கொண்டு தாவிக்குதித்து வர முயலுகின்றன. விட்டு விலகிச்செல்லும் நிழல்களைப் பொருட்படுத்தாமல் மரங்கள் நாட்டியமாடுகின்றன. இவற்றையெல்லாம் கண்ட புல் தானும் நீரிலிருந்து எழும்பி மேலே வருகிறது. அம்மணமாக நின்று கைகூப்பி ஆடைதருமாறு கண்ணனை வேண்டுகிறது. (இது நீராடும் போது சேலை கவர்ந்து கொண்ட கண்ணனிடம் ஆயர்பாடிப் பெண்கள் கைகூப்பிச்சேலை வேண்டி இரந்ததை நினைவூட்டுகிறது) இந்த இயற்கை வருணனைக்குள் கண்ணன் ஆயர்பாடி பெண்கள், புல்லாங்குழல் ஆகியவை மெருகு ஊட்டுகின்றன. நொந்துபோன உள்ளங்களுக்கு சந்தம் ததும்பும் கண்ணனின் குழலோசை தெம்பூட்டும் காட்சியை இப்பாடல் விளக்குகிறது. "மாசற்றது" என்னும் பாடலில் புற்றீசல் விண்மீன் காதல் தோல்வியுற்றது கூறப்படுகிறது. அன்பிலும் தூய்மையிலும் அல்லிமலர் நிகரற்று விளங்கியது. ஆயின் அம்மலரின் தந்தை செல்வச்செருக்கு மிக்கவன். அல்லிப்பெண் எளிய குடும்பத்தில் பிறந்த ஏழை ஓவியனைக் காதலித்தாள். அது வெற்றிபெற வாய்ப்பில்லாததாலும் தந்தை காட்டும் மாப்பிள்ளை பிடிக்காததாலும் கன்னித் துறவியாகக் காலங்கழிக்க அல்லிப்பெண் முடிவு செய்தாள். ஓவியனும் திருமணம் செய்து கொள்ளாமல் வாணாட்களை ஓட்டலானான். காதலில் தோற்றுத் துவண்ட உள்ளங்கள் இரண்டும் தனித்தனியே தனக்குள் பேசிக்கொள்வது போல் இப்பாடல் அமைந்துள்ளது. இனியதும்

இன்னாததுமாகிய நினைவுகள் அலைகழிக்கும் நிலையில், திரைச்சீலையில் வண்ணத்தூரிகையால் ஓர் அல்லிமலர் வரைந்தான். தூரிகை ஓவியத்தைத் தொடும்போதெல்லாம் அவனுடைய நெஞ்சம் காதலியுடன் பேசிக்கொண்டிருந்தது.

"நிழல்கள் நீள்கின்றன" "பழைய கடிகாரம்" "விருப்பம் போல் புகைவண்டி வரட்டும்" "மறைவுக்கு முன்பு கட்டியம் கூறுதல்" ஆகியவை இறுதியாக விடைபெறுவதற்கு முன்பு விடுக்கும் செய்திகளாக அமைந்துள்ளன. சாவு என்பது தத்துவப்போர்வையில் வாழ்வுக்குப் பொருள் காட்டுவதாக இதற்கு முந்தைய காலப்பாடல்கள் அமைந்திருந்தன. தவிர்க்கமுடியாத தலைமை விருந்தாளியாக சாவை வரவேற்பதை இப்பாடல் விளக்குகிற பழைய கடிகாரம் என்னும் பாடல், காலத்தோடு உடன் ஓடி, எதிர்காலமும் உணர்த்தி பகல் இரவு என்னும் பாய்களை முழுமையும் விரித்துப் போட்டு விட்டு ஓடிப்போய்விட்ட புலவரின் மனமே பழைய கடிகாரமாகக் கூறப் படுகிறது. கடிகாரத்தின் மைய விசைச்சுருள் வலிவு குன்றியபோது என்ன நடந்தது என்பதையும் பாடல் குறிப்பிடுகிறது. "விருப்பம்போல் புகைவண்டி வரட்டும்" என்னும் தலைப்பில் வெளிவந்தது இப்பாடலில் தற்கொலை செய்துகொள்ள முடிவெடுத்த ஒருவன் தன் காதலியிடம் விடைபெறுவதற்காகச் செல்லுகிறான். ஆனால் அது நடைபெறவில்லை. இது நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு அறுபதாண்டு பிறந்த நாளின்போது, அவனுடைய மனைவி அவளுடைய பழைய தற்கொலைக்கடிதத்தைப் படித்துப் பார்த்துக் கண்ணீர் விடுகிறாள். அந்தக்கடிதம் கசங்கிப்போகிறது. அவனுடைய தூய அன்பும் அரவணைப்புமே இத்தனைக்காலம் வாழ்க்கையின் மேடுபள்ளங்களைத தாண்டி வாழச் செய்யும் வன்மை தந்தது என்பதை உணர்கிறான். ஆதலால் இனி சாவை எதிர் கொள்ளும் நாள் எப்பொழுதும் வந்தாலும் சரி என்கிறான்.

"கரிய புகைவண்டி என். வாழ்நாள்
தண்டவாளத்தின் மீது வேகமாக வந்த போது
உன் இதயத்தின் செந்நிறக் குருதியைக்
காட்டித் தடுத்துநிறுத்திவிட்டாய்
அன்பே அணைத்துக்கொள் முத்தமிடு
என்னைப் போகவிடு விருப்பம்போல் புகைவண்டி வரட்டும்"

"கரிய புகைவண்டி" "தடுத்து நிறுத்துதல்" ஆகியவை புலவருக்கு 1962 இல் வந்த நெஞ்சுவலியையும் அவருடைய துணைவியார் அருகிலிருந்து காப்பாற்றியதையும் குறிப்பிடுகின்றன. சிவப்பு விளக்குக் கண்டு புகைவண்டி நின்றது. என்பது மனைவியின் தூய அன்பின் வலிமையைக் காட்டுவதாகும்.

"நிழல்கள் நீள்கின்றன" என்னும் பாடலில் உடம்பெடுத்த உலகவாழ்வு வாடகை வீட்டில் குடியிருப்பது போன்றது என்னும் உண்மை கூறப்படுகிறது. ஐம்புலன்கள் என்னும் பலகணிகள் இருந்தும் உடம்பு என்னும் வீட்டுக்குள் போதிய காற்றும் வெளிச்சமும் இல்லை. பார்வையையும் உணர்வுகளுமாகிய கண்ணாடிக்கதவுகள் ஒளிமங்கியுள்ளன. கூரைமக்கிப் போய்விட்டது. கறையான்கள் அரிக்கத்தொடங்கிவிட்டன. (நரை திரை மூப்பு சுட்டப்படுகிறது) வெளியேறும் நேரம் நெருங்கிவிட்டது. அழைப்பு எந்நேரத்திலும் வரலாம்.

"பண்ணோசை கூட்டிப்புல்லாங்
குழலிசைக்கும் வழிப்போக்கன்
வந்து என்னை அழைப்பான்
நான் உடனே புறப்பட வேண்டும்
கதவை மூடிப்பூட்டிவிட்டு வரவேண்டும்
என்றெல்லாம் காலந்தாழ்த்துவதற்குச்
சிறிதேனும் இடமில்லை"

இப்பாடல்களெல்லாம் சாவைப்பற்றிக் குறிப்பிடுவதால் அது வெறுக்கத்தக்கதல்ல. என்றும் போற்றி வரவேற்கத்தக்கதே என்றும் விளக்கிக் காட்டப்படுகிறது. சாவு என்னும் விருந்தாளியை வரவேற்பதில் காணப்படும் விரைவும் துடிப்பும், வாழ்வில் பற்றில்லை யென்பதையோ, சாவைக்கண்டு சரணடைதல் என்பதையோ காட்டாது. பற்றில்லாத உணர்வு என்பதைவிட அலைக்கழிக்கும் ஆர்வத்தின் உந்துதலையே இப்பாடல் குறிப்பிடுகிறது எனலாம். இக்கருத்தே அனைவருள்ளத்தையும் கவரக்காரணமாயிற்று. இயல்பான தெய்வப்பற்று மன அமைதிக்கு உறுதியான காரணமாகிறது; என்பது முற்றிலும் உண்மை. இனிய நாதம் எழுப்பும் புல்லாங்குழல் ஊதிக்கொண்டு வருபவனாக சாவு உருவகிக்கப்பட்டிருப்பது மிகவும் சுவையான கற்பனை. புலவரின் தெய்வப்பற்று அடுத்தடுத்து பாடல்களில் பன்மடங்காகப் பெருகிக் காணப்படுகிறது. "புல்லாங்குழலைத் தேடி" என்னும் பாடலில் ஆலமரத்தடிக்குத் திரும்பிவந்த கண்ணன் பழைய புல்லாங்குழலைத் தேடுவது குறிப்பிடப் படுகிறது. பாஞ்சசன்னியம் சுதர்சனம் என்பவற்றை பயன்படுத்த வேண்டிய நேரம் வந்தபோது புல்லாங் குழலை ஆலமரப்பொந்தில் வைத்து விட்டுப் போயிருந்தான். பாரதப்போர் முடிந்துவிட்டதால் போர்ச்சங்குகள் ஊத வேண்டியதில்லையென்பதால் புல்லாங்குழலைத் தேடுகிறான். தெய்வீக இசையையே அவன் மனம் நாடுகிறது. இப்பாடலில் ஏழை எளியவர்களுக்காகவும் துன்புற்றோருக்காகவும் போராடும் காலம் முடிந்தபின் உள்ளம் இயல்பாகவே தெய்வப்பற்றில் ஈடுபட்டு இறைவனைப்பாடும் இன்பத்தை நாடுகிறது எனத்தன் உள்ளப்பாங்கையே புலவர் இந்தப்பாடலிலும் காட்டியிருக்கிறார் என்பதை உணரமுடிகிறது.

7. ஏணிப்படிகள்

1965 ஆம் ஆண்டில் முதன்முதலாக ஞானபீட விருது வழங்குவதற்காக இந்திய மொழிகள் முழுவதிலும் சிறந்த இலக்கியப்படைப்பாளரைத் தெரிந்தெடுக்கும் முயற்சியில் இலக்கிய வல்லுநர்கள் முழுமூச்சாக இறங்கியபோது அந்த விருது பெறத்தகுதியுடையவராக 'ஜி' ஒருவரே தென்பட்டார். இவருடைய அரிய பாடல் தொகுப்பாகிய ஓடக்குழல் முதல் ஞானபீடத்தின் விருது பெறும் பேறுபெற்றது. 1921-1951 வரைப்பட்ட முப்பதாண்டுக்காலத்தில் வாழ்ந்த இலக்கியப் படைக்காளர்களின் இந்தியமொழிகளில் வெளிவந்த மிகச்சிறந்த படைப்புக்குத்தரப்படும் தலைசிறந்த விருது இது. இந்தி, வங்காளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சில இலக்கியப்படைப்புகள் சிறந்த படைப்புகள் வெளிவந்திருப்பினும் இந்திய மொழிகள் அனைத்திலும் மலையாளத்தில் வெளிவந்த இலக்கியப் படைப்புகளே எல்லாவற்றிலும் மேலோங்கி நின்றன. இணையற்ற சங்க இலக்கியச்செல்வமும் தென்னிந்திய மொழிகளிலேயே மிகப்பெருந்தொன்மையும் பழமையும் கொண்டது தமிழ்மொழி. எனினும் மிகச்சிறிய மாநிலமான கேரளத்து இலக்கியப்படைப்பாளர் அனைத்திந்திய ஞானபீட விருது பெற்றது பலருக்கும் வியப்பை விளைத்தது. மலையாள மொழியினர் அனைவர்க்கும் இது பெருங்களிப்பு நல்கியது. 'ஜி' யின் மீது பொறாமை கொண்டவர்களும் இவருக்கு எதிராகப் பணியாற்றினர். ஞானபீட விருது வராமல் தடுப்பதற்காக கேரளத்து சாகித்திய அக்காதெமியினர் மலையாளத்தில் அந்த முப்பதாண்டுகளில் வெளிவந்த எந்த நூலும் ஞானபீடத்தின் விருது பெறத்தகுதியுடையதன்று எனத் தெரிவுக்குழுவுக்கு மடல் எழுதினர். ஆயின் நடுநிலையானவர் எவரும் 'ஜி' யின் பாடல்களைப் பற்றிய திறனாய்வுகளை மதிப்பிடும் போது பொறாமை கொண்டு குறை கூறுபவர்களின் கூற்றைப்பொருட்படுத்தமாட்டார்கள். ஞானபீட விருதுக்கான மலையாள மொழிலுள்ள தெரிவுக் குழுவில் இடம்பெற்றிருந்த குழுவின் ஏற்றாளர் என். வி. கிருட்டிணவாரியார் மற்றும் இரு உறுப்பினர்களான எஸ்.கே. நாயர், சூர்நாடுகுஞ்சன் பிள்ளை ஆகிய மூவரும் ஒருமனதாக "ஓடக்குழல்" பாடல் தொகுதியைப் பரிந்துரைத்தனர்.

நூலின் தகுதிப்பாடுகளையும் இதனைத் தரங்குறைத்துப் பேசும் மலையாள விற்பன்னர் சிலர் பொறாமையால் கூறும் போலிக்குறைபாடுகளையும் விளக்கிச்சொல்ல வேண்டிய பொறுப்பு திரு. வாரியாரைச் சார்ந்தது. இந்நூலை உடனடியாக இந்தியில் மொழிபெயர்க்க திரு. வாரியார் திரு. இரவிவர்மா (இதழாசிரியர், எழுத்தாளர்), திருமதி பி. மேரி (எழுத்தாளராக

அறியப்படாவிடிலும் இந்தி மொழி வல்லுநராக அறியப்பட்டவர்) ஆகியோரடங்கிய மூவர்குழு அமர்த்தப்பட்டது. தெரிவுக்குழுவுக்கு இந்த மொழிப்பெயர்ப்பே எடுத்துக்காட்டாகத் தரப்பட்டது. திரு. வாரியர் தானே புலவராகவும் இலக்கியச் சுவைஞராகவும் விளங்கியதாலும், நேர்மையும், நடுநிலைமையும், நுண்மாண் நுழைபுலமும் இந்தியிலும் ஆங்கிலத்திலும் அழகாகப்பேசும் திறனும் கொண்ட பெருந்தகையாக விளங்கியதால் ஓடக்குழல் ஞானபீட விருது பெறும் தகுதிபெற்றது.

புதுதில்லி விஞ்ஞான பவனில் 1966ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் நாளன்று ஞானபீட விருது திரு. சம்பூர்ண ஆனந்து அவர்களால் 'ஜி' க்கு வழங்கப்பட்டது. "நிமிடம்" என்பதன் மொழிபெயர்ப்பை தினகரும் நாம் வழிபடலாம், என்பதன் மொழிபெயர்ப்பை பச்சனும் பாடிக்காட்டினார்கள். திருமதி யாமினி கிருட்டிண மூர்த்தியால் "சந்தியா" என்னும் நாட்டிய நாடகம் நடத்தப்பெற்றது. திரு. புத்ததேவ போசு, திரு.கே.பி. கேசவமேனன், திரு.ஆர்.எஸ். தினகர், திரு.கே.பி. எஸ். மேனன் திருமதி என். பாலாமணி அம்மா, திரு. கே.எம். சியார்ச்சு, திரு. இ.எம். சே., வெண்ணியூர், திரு. ஐயப்பணிக்கர், திரு. பனம்பள்ளி கோவிந்த மேனன் ஆகியோரால் 'ஜி' வைப்பற்றி எழுதப்பட்ட தட்டெழுத்துக் கட்டுரைகளின் தொகுதியொன்று மறுநாள் புதுதில்லி கேரளதர்ப்பணத்தார் நல்கிய வரவேற்பு விருந்தின் போது அவருக்கு அன்பளிப்பாகத்தரப்பட்டது.

விருந்தேற்பு உரையில் இந்திய இலக்கியப் பாங்கு என்பதைக் குறிக்க அவருடைய விளக்கத்தையும் கவிதையின் சாரம் எது என்பதையும் சிறப்பாக விளக்கிச்சொன்னார்.

'ஜி 'யைப்பற்றி ஆங்கிலத்தில் நூல் எழுதிய திருமதி எம். லீலாவதி அவர்கள் அப்பொழுது மலையாளத்தில் எழுதப்பட்டிருந்த அவருடைய சொற்பொழிவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். அந்த ஆங்கில மொழிப்பெயர்ப்பு அமெரிக்காவில் மிக்சிகன் மாநிலப்பல்கலைக்கழகத்து ஆசியக்கல்வி மையத்தால் வெளியிடப்படும் தெற்காசிய இலக்கியம் என்னும் காலாண்டிதழில் (எண். 1 மடலம் VIII), மாரிக்காலம் 1772) வெளி வந்தது.

வெற்றியைப்போல் நலம்பயப்பது வேறொன்றில்லை. 'ஜி' யைப்பற்றிப் பொறாமையால் குறை கூறினோர் அடங்கிப்போய்விட்டனர். பற்பல இலக்கிய அமைப்புகளும் ஆர்வலர்களும் 'ஜி' யிக்கு பாராட்டுவிழாக்கள் நடத்தினர். பொது மக்கள் இதனை தனிப்பட்ட ஒருவருக்குத் தரப்பட்ட பெரிய விருதாக மட்டுமன்றி மலையாள மொழிக்கும் இலக்கியத்திற்கும் தரப்பட்ட விருதாகக் கருதி பெருமைகொண்டு பூரித்தனர். 'ஜி' யின் உள்ளம்

தான்பெற்ற ஞானபீட விருதின் நினைவாக மற்றொரு அறக்கட்டளை ஏற்படுத்த விழைந்தது. ரூ. 25,000 வழங்கி தான்வழிபடும் குருவாயூரப்பன் பெயரில், ஆண்டுதோறும் மலையாளத்தில் வெளிவரும் சிறந்த இலக்கியப் படைப்புக்கு அத்தொகையில் வரும் வட்டிப்பணத்திலிருந்து பரிசளிக்கும் வகையில் அறக்கட்டளை நிறுவினார். அதற்கு "ஓடக்குழல் விருது" எனப்பெயரிடப்பட்டது. முதலீட்டுத் தொகையின் வட்டித்தொகை பரிசளிப்புக்கும் அதன் தொடர்பான செலவினங்களுக்கும் சரிகட்டப்பட்டது. அண்மையில், 'ஜி'யின் துணைவியார் அளித்த ரூ. 10,000மும் 'ஜி' எழுதிய 'தன்வரலாறு' என்னும் இந்த நூலுக்குக் கிடைத்த நூலாசிரியர் உரிமத்தொகை ரூ. 15,000மும் அறக்கட்டளைத் தொகையுடன் சேர்க்கப்பட்டு இப்பொழுது முதலீட்டுத் தொகை ரூ 50,000 ஆகியுள்ளது.

1967 ஆம் ஆண்டுக்குரிய சோவித்து நாட்டின் நேரு விருது 'ஜி' யிக்குக் கிடைத்தது. அதனைப்பெற 1968 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சோவியத்து நாட்டுக்குச் சென்றிருந்தார். அங்கு ஆப்பிரிக்க ஆசிய எழுத்தாளர் மாநாட்டில் கலந்துகொண்டபின்னர் கிழக்குச் செருமனியில் பண்பாட்டுபெருமை வாய்ந்த பல இடங்களைப் பார்வையிட்டார்.

1968 ஆம் ஆண்டில் 'ஜி' யிக்கு பத்மபூசன் விருது வழங்கப்பட்டது. நடுவணரசின் மேலவை உறுப்பினராக அமர்த்தப்பட்டார். 1968 ஏப்பிரல் முதல் 1972 ஏப்பிரல் வரை பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார். அனைத்திந்திய செல்வாக்கால் இவருக்கு இந்த வாய்ப்புகள் கிடைத்தன என்பதும் பொறாமைக்காரகளைப் பற்றி ஒருவரி 'ஜி' யால் எழுதப்படவில்லை யென்பதும் அனைவர்க்கும் தெரிந்த உண்மை. 'ஜி' யிக்கு இயல்பாகவே இவற்றில் ஈடுபாடு இருந்ததில்லை.

ஊன்றிப்பார்க்கவேண்டிய இவருடைய படைப்புகளாகக்கருதப்படுபவை "பேராறும் மூன்று ஓடைகளும்" (1963), "மதுரம் சௌலப்யம் தீப்தம்" - 1966 (இனிமை, எளிமை, சுடரொளி), "சந்தியாராகம்" - 1971 (விடியல் மாலையொளி) (இருபாடல் தொகுதிகள்).

முதல் நூல் கதைபொதி நெடும்பாடல். இதிலும் ஏழை எளியவர்களின் அவல வாழ்வே 'ஜி' யின் உள்ளத்தைப் பிளந்திருப்பதை அறிகிறோம். இந்தக்கதையில் காதலும் இயற்கையின் குளறுபடிகளும் கலந்து தனிப்பட்டவர்களைப் பழிவாங்குவதால் இரட்டைத் துன்பியலாக அமைந்துள்ளது. குரும்பன் பணிக்கன் என்னும் இரு சிறுவர்களுக்கு காளி என்னும் பெண் இளமைக்காலத் தோழியாக இருந்தாள். இருவரும் அவளை மணக்க விரும்பினார். அவளும் இருவர் மீதும் பரிவு கொண்டவளாயினும் அவர்களுள் ஒருவனைத்தான் மணக்க வேண்டியிருந்தது. இறுதியில்

பணிக்கனை மணந்தாள். பெண்ணின் பேதை மனத்தில் மூண்ட எண்ணக்கோலங்களின் நிலைவலைகள் அவளை நிலை குலையச்செய்தன. குரும்பன் தன் தோல்வியை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தான். அவனால் வேறொரு பெண்ணை விரும்பி மணந்து கொள்ளவும் முடியவில்லை. காளிக்கு திருமணமாகியும் பிள்ளை பிறக்கவில்லை. குரும்பனை ஏமாற்றியதற்காகக் கடவுள் தன்னை தண்டித்து விட்டாரோ என்று அவள் ஐயமுற்றாள். கல்லாத மக்களின் களங்கமற்ற உள்ளம், அறியாமை, கடவுள் நம்பிக்கை பிறர்க்குத் துன்பம் இழைப்பதில் தோன்றும் அச்சம் பாவம் செய்வதால் தோன்றும் பின்விளைவு ஆகியவை இந்தக்கதைக்கு களைகட்டுவதாயிற்று

"ஏமாற்றத்தின் எரிச்சலோடு இந்த ஊரில்
குரும்பன் அலைந்துகொண்டிருக்கும் போது
இந்தக் குடிசைமுற்றத்தில் குழந்தை
விளையாடும் வாய்ப்பு எப்படிக் கிடைக்கும்"

அன்றாடக் கூலிகளாய் அடிமைத்தன அடிப்படையில் வேலைசெய்யும் புலையர்களான இவர்கள் தன் முதலாளியிடம் வயிற்றுப்பிழைப்புக்காக நாள் முழுவதும் உழைக்கவேண்டியிருந்தது. முதலாளி மிகவும் கடுமையாக வேலை வாங்கும் கொடுமைக்காரன். நோயுற்றான். மலேரியா காய்ச்சலால் துன்புற்ற பணிக்கன் முதலாளியின் சீற்றத்துக்கு அஞ்சி காட்டில் மரம் வெட்டுவதற்காகப் போனான். போகவேண்டாம் என்று மனைவி தடுத்தும் வேறு வழியின்றி அவள் சொல்லை மறுத்து காட்டுக்குப் போனவன் இரண்டு நாளாகியும் வீடு திரும்பவில்லை. அவனைத்தேட யாரும் இல்லை அவளுக்குக் உறக்கமில்லாத இரவுகள் கழிந்தன. வானம் வெளுத்தது. திடுமென வட கிழக்கு மின்னல் தாக்கி எரிந்தது. காட்டுக்குச் சென்ற பணிக்கன் வீட்டுக்குத் திரும்பவில்லை. அவன் திரும்பிவரப்போவதில்லை என்பதை அறிந்த முதலாளி,

"அந்த அறிவுகெட்ட பயல்
பெருங்காட்டில் சாகட்டும் அழியட்டும்.
ஆனால் புதிதாகச்செய்த என் கோடாரி
போய்விட்டதே என்பதுதான் வருத்தமாக இருக்கிறது"

என்று அங்கலாய்த்துக் கொண்டான்.

அவள் கணவனைத்தேடித் தன்னந்தனியாகக் காட்டுக்குப் புறப்பட்டாள். பேரியாற்றின் கரையிலேயே தொடர்ந்து சென்றாள். கடும் வெள்ளம் பெருகி கரைபுரண்டு நெளிந்து ஆரவாரித்து வரும் பேரியாறு இரைவிழுங்கிய

மலைப்பாம்பு நெளிந்து ஊர்ந்து வருவது போன்று அச்சமூட்டியது. வெள்ளப் பெருக்கின் கொடுமைகளை ஓடக்காரர்கள் எடுத்துச் சொன்னதும் அவளுக்கு நினைவு வந்தது. ஆற்றங்கரைவழியே சென்றவள் பசியாலும் தூக்கமின்மையாலும் களைப்பாலும் தளர்ந்து மேலும் நடக்க முடியாமல் ஒரு மரத்தின் மீது சாய்ந்தாள். அது நச்சு மரம் அதன் மீது சாயாதே என்று யாரோ கூறிய சொற்களும் அவள் காதில்படவில்லை. இடியும் மின்னலும் மழையும் தொடர்ந்தன. புயல் வீசியது.

"இரண்டுநாள் அந்த நச்சு மரத்தடியில் கிடந்தாள்
உலர்ந்த இலைகள் அவள் மீது விழுந்தன
யார் பார்த்தார்கள் யார்தடுத்தார்கள்
அந்தப்பேதைப் பெண்ணின் உயிர் உடலிலிருந்து பிரிந்தது"

குரும்பன் பணிக்கனைத் தேடிப் புறப்பட்டான். ஒரு காலத்தில் அவன் தனக்கு நண்பனாக இருந்தது அவனுக்குப் பரிவை வரவழைத்தது. வெறுப்பும் பகைமையும் மறந்தன. ஆனால் இது காலங்கடந்த தெளிவாகப் போய்விட்டது. நண்பனைக்கண்டு மனம் விட்டுப் பேசி கண்ணீர்விட்டு மீண்டும் நட்பு உண்டாக்கிக்கொள்ளும் வாய்ப்பு கைநழுவிப்போய்விட்டது. காலமெல்லாம் தேடி ஊருக்கு வந்து பார்த்தான். பணிக்கனின் குடிசை வெறிச்சோடிப் போயிருந்தது.

"ஒவ்வொருவரிடம் ஊற்றெடுத்திருந்த அன்பு அருவிகள்
மூன்றும் ஒன்றாகச்சேர்ந்து பெருகியிருந்தால்
பயனுள்ள ஆறாகக் காட்சியளித்திருக்கும். தனித்தனியாக
வறண்டு போகும் அவலம் நேர்ந்திருக்காது."

மாந்தருக்கு இயல்பாக மூவகைத் துயரங்கள் நேரும். இதனை வடமொழியாளர் ஆதிபௌதிக ஆத்யாத்மிக, ஆதிதைவக என்று குறிப்பிடுவர். இந்தக் கதையில் இவை கள்ளங்கபடற்ற எளியவர்களுக்கு கடக்கவியலாத விதியின் விளையாட்டாக நேர்ந்துள்ளன. ஒரு துன்ப வெள்ளப்பெருக்கின் காரணம் கொடுங்கோன்மை வாய்ந்த முதலாளிகள், இவர்களின் ஈவுஇரக்கமற்ற அரக்க மனப்பான்மையே ஏழைகளின் துன்பங்களுக்கு அடிப்படை *காரணமாயின்* இதையே பேராறு என்று குறிப்பிடுகிறார். காதல் முக்கோணம் அமைந்த சிற்றோடைகளாக குரும்பன், பணிக்கன், காளி ஆகிய மூவரும் அடைகின்றன. புயல்வேகத்தில் வரும் விதியின் கைப்பிடியில் கிடைத்த இம்மூவரும் சேக்சுபியரின் கிங்லீர் கதையை போன்றே விதிக்குமுன்னால் மாந்தனின் ஆற்றலும் திறமையும் பயனற்றுப் போவதை மெய்ப்பித்துக் காட்டுகின்றனர்.

பேராசிரியர் டி.சி. சங்கரமேனன் மொழிப்பெயர்த்த ஜி. சங்கர குருப்பின தெரிந்தெடுத்த பாடல்கள்" என்னும் ஆங்கிலத் தொகுப்புக்கு முன்னுரை வழங்கிய திரு. உமாசங்கர் ஜோஷி "இந்தக் கதையில் பேராறு இடம் பெற்றதன் வாயிலாக இந்த எளிய நெடும்பாடல் காப்பியத்தன்மை பெற்றுவிட்டது" என்று பாராட்டியிருக்கிறார்.

'ஜி' யின் இலக்கியப் படைப்புகளில் இலக்கியப்பாடல்களாக அமைந்தவை பெரும்பான்மையாகவும் கதைப்பாடல்களாக அமைந்தவை சிலவாகவும் உள்ளன. அத்தகைய ஏழுப்பாடல்களுள். கதாஉபநிசத்தின் கதையொன்று பாடலமைப்பில் இனிமை எளிமை சுடரொளி என்னும் தலைப்பிலமைந்த பாடல் தொகுப்பாக வெளிவந்தது.

தீயாலும் புயலாலும் அழிக்கப்படாத புலவன் கதையாக அது உருவெடுத்துள்ளது. புல்லின் பெயரில் இசைப்பாடலாக மலர்ந்துள்ளது. செய்யுள் இன்பம் என்பது காப்பியப் பாக்களிலும் நாடகம் நெடும்பாடல் ஆகியவற்றில் மட்டும் காணக்கூடியது என்று மலையாள இலக்கியத் திறனாய்வாளர்கள் கொண்டிருந்த கருத்தைப் பொய்யாக்கினார். வெறும் இசைப்பாடலும் அதை வெளிப்படுத்த முடியும் என்பதை உபநிடத புல்லின் கதை வாயிலாக ஒப்புமை நிலை நிறுத்தினார். சங்கமம் என்னும் மற்றொரு பாடலில் பாட்டே பேசுகிறது.

"நான் தான் பாட்டு: வெறும் ஒட்டை நாணல் அல்ல.
நான் தான் எரியும் சுடர்; வெறும் கருகிய திரியல்ல
நான் தான் வேகம்; வெறும் வெட்டவெளி சிறகல்ல
நான் தான் பண்ணோசை, ஒளி, பேரண்டங்களின் நாடித்துடிப்பு".

1970-1980 ஆண்டுகளில் இவர் பாடிய இசைப்பாடல்கள் பொதுவாக தெய்வப்பற்று மிகுந்த மனத்தை எதிரொளிக்கும் நிலைக்கண்ணாடிகளாக அமைந்தன. ஆயின் சிலவேறு கருத்துகளையும் சுட்டிக்காட்டின. "சட்லெச்" என்னும் பாடல் இயற்கை நுட்பங்களை வெல்லக்கூடிய மாந்தனின் பேராற்றலை வியந்து பாராட்டுகிறது. பழங்காலத்தில் பேராறு சிலவேளைகளில் பெருக்கெடுத்து எதனையும் புயல் வேகத்தில் அழித்தொழிக்கும் கடுஞ்சினக் காளிபோல் வடிவெடுத்து அச்சுறுத்தியது. மற்றும் சிலவேளைகளில் அழகும் அமைதியும் கொண்ட கன்னிப்பெண்ணாகவும் காட்சியளித்தது. காலச்சக்கரம் படுவேகத்தில் சுழன்றது. இறுதியில் கோடிக்கணக்கான இந்தியர் ஒன்றுதிரண்டு அடிமை விலங்கை முறித்தனர். ஒன்றுதிரண்ட இந்தியமக்களின் கை அவளுடைய கூந்தலில் வகிடு எடுத்து இரண்டாகப்பிரித்தது. உடம்புக்கு எவ்வித பழுதும் இன்றி பார்த்துக்கொண்டது. அவளுடைய கடுஞ்சினப் பாங்கையும் அமைதிப்படுத்தியது.

"அச்சமும் ஐயமும் சினமும் புலப்படுத்தி
பிணங்கிகொள்ளும் பாங்குடைய பெண்ணணங்கு
அடக்கமுடையவளாகிவிட்டாள்
இது மகிழ்ச்சி நல்கும் வியப்பானசெய்தி
விடுதலைப்பெற்றதன் புகழாரமாக இந்தியாவின்
அரவணைப்புக்கைகளில் அமைதி கொண்டாள்"

வெள்ளத்தைத்தடுத்து அணைக்கட்டுவதில் வெற்றி கண்ட மாந்தனின் ஆற்றலால் ஈர்க்கப்பட்ட 'ஜீ' யிக்கு மாந்த இனத்தின் இளமைத் துடிப்பில் நம்பிக்கை வளர்ந்தது. இந்தக் கருத்தை சக்தி சிவமாக உருவகப்படுத்துகிறார். சக்தி பேராறாகப்பாய்கிறது. கட்டுக்கடங்காத அந்த ஆற்றை அணையிட்ட ஆற்றலைச் சிவமாகப் பார்க்கிறார்.

சட்லெச் ஆறு அந்தக் காலத்தில் கட்டுக்கடங்காமல் கரையுடைத்துப் பாய்ந்து அழிவுகளை உண்டாக்கியதற்குக் காரணம் அப்பொழுது அதைத்தடுத்து அணைகட்டும் ஆண்மகன் தோன்றவில்லை. சரியான ஆண்மகன் தோன்றியதும் ஆற்றின் அழிவுத்தன்மைகள் குறைந்து விட்டன. இத்தகைய கற்பனை உருவகம் தராமல் வெறுமனே நேரடியாக இந்தக் கருத்தை பாடியிருந்தால் பாட்டில் இப்பொழுது காணப்படும் வேகமும் கற்பனைச்சுவையும் இல்லாமல் போய்விட்டிருக்கும். மாந்தனின் ஒருங்கிணைந்த ஆற்றலுக்கு இவர் தந்துள்ள உருவகப் பின்னணி வியந்து பாராட்டுதற்குரியது.

மக்கள் ஒருங்கிணைந்து பாடுபடுவதையும் முன்னேறுவதையும் விரும்பும் இவருடைய மனப்பாங்கு கொடுங்கோலர்களின் கொடுமைகளைக் கண்டு சீறும் தன்மையுடையது. "அருள்கூர்ந்து பருகாதே" என்னும் சுவையான பாடல் 1970 இல் எழுதப்பட்டது. அடக்குமுறை ஆட்சியின் செருக்குணர்வை நஞ்சுதோய்ந்த இனிப்புப்பானமாக இதில் உருவகப்படுத்தியிருக்கிறார்.

தொடக்கத்தில் இந்த நஞ்சு இனிக்கும்
மயக்கும் களிப்பூட்டும் மெய்மறக்கச் செய்யும்
அறிவும் உணர்வும் மெதுவாக அற்றுப்போகும்.
மக்களாட்சியின் வெற்றிச் சங்கநாதம் கேட்கிறது
அடக்குமுறை இசைக்கருவி உடைந்துபோய்
மிதிபட்டு அடுப்புவிறகாக எரிந்துவிடும்.

நல்ல நோக்கத்துடன் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவர்களாக இல்லாவிட்டாலும் கவிஞர்கள்

மாந்த இனத்தின் மனத்தை ஆளும் தலைவர்கள் என்னும் பொன்னுரையை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார்.

இந்திய நாட்டில் அரசியல் குழப்பங்கள் நேர்ந்த காலத்தில் இவர் உடல்நலம் குன்றியிருந்தார். இந்திய நாட்டின் நெடிய வரலாற்றை ஒரு காப்பியமாக எழுதவேண்டும் என்னும் இவருடைய ஆசை நிறைவேறவில்லை. "இனிமை எளிமை, சுடரொளி" பாடலில் "பச்சைக் குதிரைகள்" என்னும் பகுதி அவருடைய இந்திய வரலாற்றுக்காப்பியக் கனவின் நிழலாகப் புலப்படுகிறது. 1973 ஆம் ஆண்டில் இவருடைய உடல்நலக்குறைவு மனத்தையும் தளரச்செய்தது. 1962 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இதய நோய் தாக்கம் பின்னர் மருத்துவ உதவிகளால் சீராக்கப்பட்டிருந்தாலும் இனி உடலுழைப்பும் மனவுழைப்பும் உடல் நலத்துக்கு ஒத்துக்கொள்ளாது என்று மருத்துவர்கள் அறிவுரைத்திருந்தனர். 1973 ஆம் ஆண்டில் குருதிநாளங்களில் ஏற்பட்ட தொந்தரவு கூடுதல் அச்சம் விளைத்தது. அறுவை மருத்துவத்திற்கு அஞ்சி மருந்துகளே மாற்றி மாற்றிப் பரிந்துரைக்கப்பட்டது. உடல் நலம் குன்றிய நிலையில் அரசியல் நிலைகளைப்பற்றி அவரால் நினைக்கக்கூட முடியவில்லை.

மாறுபட்ட கருத்துக்கொண்டவர்கள் 1975-1977 ஆண்டுகளில் அரசியல் குழப்பங்களின் போது, எதுவும் எழுதாமல் கோழைத்தனமாகக் 'ஜி' நடந்துகொண்டாரா என்று குறை கூறத்தொடங்கினர். இதை நடுநிலையில் நின்று நோக்கினால் காரணமும் விளைவுகளும் பலவகையில் சிக்கல்களை வளர்த்திருக்கின்றன என்னும் உண்மையை உணரலாம். இருபக்கங்களிலும் நிலவிய மனப்பாங்குகளையும் அறியலாம். நாட்டில் அவசர நிலைமை அறிவிக்கப்பட்டது. ஒரு தேவையான தீமையென்றும் சரியான நடவடிக்கையே என்றும் இதைக்கூர்ந்து ஆய்ந்து புரட்சிப்பாங்கினர் கருத்து கொணடிருந்தனர். 'ஜி' இதனைப் பாராட்டவும் இல்லை. கண்டிக்கவுமில்லை.

1977 ஆம் ஆண்டில் சிறுநீரக நாளத்தில் உள்ள தொந்தரவை நிலையாகக் குணப்படுத்தவும் உடனடி நீக்கம் பெறவும் குறிப்பிட்ட ஊசிமருந்தை ஒரு மருத்துவர் பரிந்துரைத்தார். ஆயின் அந்த ஊசிமருந்து எதிர்பார்த்த பயன்விளைக்கவில்லை. மாறாக, குழாய்செலுத்தி சிறுநீர் வெளியேற்ற நேர்ந்தது. இதனால் அறுவை மருத்துவம் செய்தாக வேண்டிய சூழல் நேர்ந்தது. 1978 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 21 ஆம் நாள் திருவனந்தபுரம் மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் வெற்றிகரமாக அறுவை மருத்துவம் முடிந்தபின் பழைய இருமல் நோய் தலைகாட்டியது. 28ஆம் நாள் நிலைமை கவலைக்கிடமாவது போல் தோன்றியது. ஆயின் இரண்டு நாளுக்குள் இருமல் குறைந்தது.

1978 ஆம் ஆண்டு பிப்பரவரி 2 ஆம் நாள் யாரும் எதிர்பாராத நிலையில் ஓடக்குழல் வழிப்போக்கனான காலன் யாருக்கும் தெரியாமல் வந்து பாட்டுலகத்து வேந்தனாகிய 'ஜி' யைப் பரிந்தழைத்துக் கொண்டுபோய் விட்டான்.

மருத்துவர்கள் இதய அடைப்பு என்று பதிவு செய்து கொண்டார்கள்.

8. எழுச்சிமிகு கொடைகள்

காலமும் இடமும் சந்திக்கும் கோடுகள் எண்ணிறந்தவை. எந்த மனிதனுக்கும் அவன் எப்பொழுது முதல்முதல் என்னவடியில் தோன்றினான் என்று தெரியாது. தானறியாத வகையில் காலமும் இடமும் சந்திக்கும் ஒரு கோட்டில் விளிம்பில் ஏதோ ஒரு வடிவம் கொண்டு நிற்கிறான். காலவோட்டத்தின் நினைவுக் கோவையில் மரபார்ந்த உயிருட்டம் அந்த காலகட்டத்தில் பெற்றிருக்கிறான். இவ்வகையில் எல்லாப்புலவர்களும் காலத்தின் படைப்புகளே. எனினும் புலவர்கள், மெய்யறிவாளர்கள், சிந்தனையாளர்கள் தலைவர்கள் ஆகியோருள் சிலர் புதிய யுகத்தைப் படைக்கக் கூடியவர்களாக விளங்குகிறார்கள். அடிமைப்பட்டுக்கிடந்த இந்தியாவில் இந்த நூற்றாண்டு பிறந்தபின் ஆறாம் மாதத்தில் பிறந்த 'ஜீ' நாட்டின் அடிமைத்தளையை அறுத்தெறியும் விடுதலைப் போராட்டத்தின் வீறார்ந்த உணர்வுகளையும் உலகளாவிய நிலையில் இருபதாம் நூற்றாண்டின் மறுமலர்ச்சி எழுச்சிப்பாங்குகளையும் தன்னுள்ளத்தே பதியப்பெற்றார். அறிவுத்துறைகளுள் ஒன்றான இயற்பியல் துறையில் கடந்த ஒரு நூற்றாண்டில் கண்டுள்ள கண்டுபிடிப்பு முன்னேற்றங்கள் உரோமப்பேரரசில் ஆயிரம் ஆண்டுகளாகவும் கற்கால மாந்தரிடை ஓரிலக்கம் ஆண்டுகளாகவும் மலர்ந்த வளர்ச்சிகளைவிட மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன என்று சர். சேம்சு கீன்சு என்பவர் தன் நூலில் குறிப்பிட்டிருக்கிறார். அவர் அறிவியல் வளர்ச்சியின் தாக்கத்தையே சிறப்பாகக் குறிப்பிடுகிறார். இதனைத் தொடர்புடைய ஏனையவற்றிற்கும் பொருத்திக் கொள்ளலாம். அறிவியல வரலாறு, அரசியல் சிந்தனைகள், மெய்யறிவியல், சமயம், நிகழ்கால கலைகள் இலக்கியம் ஆகியவற்றின் தாக்கத்தால் கலைஞர்கள் எழுத்தாளர்கள் ஆகியோரின் படைப்புத்திறன் பெருகித்துலக்கமுற்றிருக்கிறது. இவற்றை அவர்களின் படைப்புகளின் காணமுடிகிறது. இந்திய விடுதலைப்போராட்டம் சோவியத்துப்புரட்சி, இரண்டு உலகப்போர்கள், சீனப்புரட்சி, உலகில் ஒடுக்கப்பட்டமக்களின் எழுச்சி, அறிவியலின் நன்மை தீமை விளைவுகளை உள்ளடக்கிய மகத்தான வெற்றிகள் ஆகியவை யாவும் இந்த காலகட்டத்தில் புலவர்களில் மனப்பாங்கைக் கவர்ந்து தம்பால் ஈர்த்துள்ளன. நுண்ணுணர்வுமிக்க புலவர் 'ஜீ'யையும்இவை குறிப்பாகக் கவர்ந்ததில் வியப்பில்லை இவற்றின் விளைவுகளாக ஏற்பட்ட உணர்வு விளைசசல்கள் 'ஜீ' யின் பாடல்களில் அறுவடையாகியிருப்பதை இந்நூலின் பக்கங்களில் இதுவரை காண்கிறோம்.

புத்துலகம் சமைப்பதில் இவருடைய பாடல்கள் செய்துள்ள தொண்டு

என்று சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது என்ன வென்றால் இவர் பாடல்கள் புதிய விரிகோணத்தைப் புலப்படுத்தி இவரையடுத்து வந்த ஆசான் வள்ளத்தோல் போன்றவர்களின் வாயிலாகப் புரட்சிச் சிந்தனைகளையும் பல்வேறு நிலைகளில் மறுவலர்ச்சி வகைமைகளையும் வித்திட்டுப் பரவச்செய்த மகத்தான சாதனையே என்று சொல்லலாம். தாகூர் பாடல்கள் தன் மனத்தின் எல்லைகளை விரிவுப்படுத்தின என்று 'ஜி' ஒருமுறை குறிப்பிட்டிருக்கிறார். விவரித்துச் சொல்லமுடியாத கருத்துகளைக்கூட நன்கு விளக்கிச் சொல்லுமளவுக்கு தாகூரின் தவக்கோலங்கொண்ட மனத்தில் எண்ணற்ற கற்பனை வடிவங்களும் சொல்லாட்சிகளும் ஊற்றெடுத்தன. தாகூரின் பாடல்களில் இந்திய தத்துவக் கோலங்களை உருவக வடிவில் காணலாம். 'ஜி' யின் முதல் மற்றும் மூன்றாம் நிலைப்படைப்புகளில் இத்தகைய தத்துவப் புதைபொருள்கள் உள்ளடங்கியிருப்பதைக் காணலாம். மாசற்ற தத்துவங்கள் நிலையில்லா மண்ணுலகத்தில் கால்பதியமாட்டாதவை. ஆயின் 'ஜி' தெய்வத்தன்மை வாய்ந்தவர். அதனால்தான் அவருடைய கருத்துகள் மண்ணுலகில் வேர்பிடித்தன. மாயை என்று கூறும் மண்ணுலகக் கொள்கைகளிலும் விண்ணுலகக் கொள்கைகள் போன்றே நிலைப்பேறு காட்டினார். இயற்கையின் படைப்புகள் எல்லாம் உயிரூட்டம் பெற்றவை, மொழியும் உணர்வும் வலுவாகப்பெற்றவை. கற்பனை வடிவம் தரப்படினும் அவை தம் உணர்வுகளை வெளிப்படுத்தவல்ல வடிவங்களே ஆகும். அனைத்துயிர்களிடையிலும் காணப்படும் ஆன்மீக ஒருமைப்பாடும் கற்பனை வடிவங்களாக உலாவரும் பாடல் கருத்துக்கோவைகளும் மக்களைப் பெரிதும் கவர்ந்ததற்குக் காரணம் இவை புதுமையான எண்ணங்கள் என்பது மட்டுமன்று. நெடுங்காலமாக மறைக்கப்பட்டிருந்த தொல்பழங்கால தத்துவக்கருத்துகளே என அடையாளங்கண்டு கொண்டதேயாகும். இவற்றின் வேர்களை வேதங்களிலும் உபநிடதங்களிலும் காணலாம். பழமைத் தொடர்பை அறவே துண்டித்துக்கொள்வது ஒருவகை. மறந்த பழமையை நினைவு கூர்ந்து புதுப்பித்துக் கொள்ளக்கருதுவது மற்றொருவகை. இரண்டாம் வகையையே 'ஜி' பெரிதும் விரும்பினார்.

மெய்யறிவை விளக்கிக்காட்டுவதற்கு, கற்பனை வடிவங்களும் பொருள்களும் தொடர்புறுத்திக் காட்டவல்லவை என்றும் ஆன்மீகத்திற்கு அடிப்படையான கூறுகள் என்றும் தொடக்கத்தில் அவருக்குத் தோன்றவில்லை. புரட்சிக்கனலும் புதுமை வேகமும் அறிவு. வேட்கையும் போட்டியிட்டு வளர்ந்த காலத்தில் கற்பனைச் சிறகடித்துப் பாட்டுலகத்தில் பறக்கத் தொடங்கினார். மெய்யறிவு ஆன்மீகப்பாடல்களில் மலர்கள், ஆறு, மேகம், காற்று, சிறியபுல், பனித்துளி போன்றவை புலவரின் சார்பாக உலக இன்பதுன்பங்கள் வியப்புகள், ஆசைகள், தெய்வப்பற்று ஆகியவற்றை உணர்வுபொங்கப் பேச தொடங்கின. அளப்பரிய ஆற்றல் கொண்ட சூரியன்

வானம் கடல் போன்ற உள்ளாற்றல்களின் நிலைக்களங்கள் இறைவனின் இருப்பையும் வலிமையையும் புலப்படுத்தின. காதலிலும் உலகியலிலும் புரட்சிவிளைத்த பாடல்களில் விண்மீன்களை மேட்டுக்குடியினரான செல்வந்தர்கள் எட்டாத உயரத்தில் ஏற்றம் பெற்றிருப்பதற்கு உவமை காட்டி கற்பனை நயங்களைத் திறம்படப் புலப்படுத்தியிருக்கிறார்.

சிலந்திப்பூச்சியை முதலாளிகளுக்கும் ஏரை உழுவனின் உரிமைகள் காக்கப்படுவதற்கும் காளான்களைச் சிற்றரசர்கள் நிலக்கிழார்கள் ஆகியோருக்கும் வண்ணத்துப்பூச்சியை அற்ப நிகழ்வுகளுக்கும் கண்ணாடிப் பெட்டிக்குள் இருக்கும் வண்ணத்துப் பூச்சியை புலரும் வைகறைக்கும் வழிப்போக்கனை மயக்கந் தெளிந்த மனித இனத்துக்கும் உவமைக்காட்டிப் பாடியிருக்கிறார். இத்தகைய கற்பனைகளால் புதிய கண்டுப்பிடிப்புகளான உள்ளுணர்வுகளை விளைக்கும் உயிருள்ள பாடல் படைப்புகளாக இவை ஏற்றம் பெற்றன. இவற்றை வெறும் உருவகங்கள் என்று ஒதுக்கித்தள்ளுவது உருவகங்களின் உயிராற்றலைக் குறைத்து மதிப்பிட்டு பாடலின் உள்ளார்ந்த அடிப்படை உண்மைகளையும் புறக்கணிப்பதாக அமைந்துவிடும். பாதிரியாகவும் பேதையாகவும் தோன்றும் புலவன் என்னும் கட்டுரையை அறிவார்ந்த திறனாய்வாளர்கள் ஆழ்ந்த கற்பனையுள்ளதாக (மைக்கேல் ஆம்பர்கரின் "பாட்டின் உண்மை") கருதியபோது. சீகர்டு பர்க்ஆர்த் என்பவர் "கற்பனையில் தோய்ந்த உருவகங்களால் தான் பாட்டு உண்மை வடிவம் பெறுகிறது என்று தெளிவாகக் குறிப்பிட்டார். கணநேரத்தில் அறிவும் உணர்வும் உந்துதலால் தோன்றுவதாயினும் கற்பனை வடிவங்களை எளிதில் உடுத்திய உடைகளைக்களைவதுபோல் தனித்துப்பிரித்து நீக்கிவிட முடியாது என்று எர்சாபவுண்டு என்பவர் குறிப்பிட்டிருக்கிறார். அவை பாட்டின் மூளையும் குருதியோட்டமும் ஆன்மாவும் போல்வன. ஆன்மா என்னும் உருவகம் பாட்டின் கட்டமைப்பையும், அறிவு உணர்வு தூண்டுதல்களால் விளைந்த கற்பனையையும் அதனால் உள்ளத்தில் கிளர்ச்சியூட்டும் இன்ப அனுபவங்களையும் சுட்டிக்காட்டுகிறது. தனிப்பாட்டிலும் நெடும்பாட்டிலும் 'ஜி' ஆண்டுள்ள தனித்தன்மை வாய்ந்த இத்தகைய உத்திகள் அடுத்துவரும் இளைய தலைமுறையினர் இவற்றின் பின்புலம் தெரிந்தும் தெரியாமலும் தாமாக உவந்து பின்புற்றத் தக்கனவாக அமைந்துள்ளன.

ஏராளமான கற்பனைகோலங்களும் வடிவங்களும் அவற்றால் தூண்டப்படும் காண்டல், கேட்டல் நுகர்தல் தொடுதல் போன்ற புலனுணர்வு நுகர்வுகளும் உணர்ச்சிப் பெருக்கு அறிவின்புலப்பாடு போன்றவையும் எந்த இலக்கிய மாணவனாலும் மறக்கவோ புறக்கணிக்கவோ முடியாத வகையில் பொலிவும் பெருமையும் துலங்கும் கற்பனைப் புத்துலகை கணமுன்னே விரித்துக்காட்டுகின்றன. ஆன்மா உருவகம் பாட்டுலகத்தின் நாடித்துடிப்பை

வேகப்படுத்தி புத்துணரச்சியை மையங்கொள்ளச்செய்து புதுப்பொலிவு சேர்க்கிறது. உலகெங்கும் பாடல் இலக்கியங்களில் நெடுங்கதையும் நாடகமும் பெற்றிருந்த இடத்தை கற்பனை வடிவ குறும்பாடல்களே கைப்பற்றிக்கொண்டன. வெறும் அணிநலங்களே பாட்டுலகில் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பது தவறான வாதம் என்பதை அறிவார்ந்த இலக்கிய வல்லுநர் எவரும் அறிவர். கற்பனை வடிவங்கள் மனத்தை குவியச் செய்யும் வெறும் அணிநலங்கள் மனத்தைப் பல கோணங்களில் சிதறடிக்கும். மனத்தை ஒரு கருத்தில் குவியச்செய்யும் பாங்கையே தன் மலையாளப்பாடல்களில் 'ஜி' கையாண்டிருக்கிறார். இசைப்பாடல்களும் கருத்துமையல்கொண்ட கற்பனைப் பாடல்களும் நிலைபேறுபெற்றன. பிற்காலப் புரட்சிப் பாடல்களிலும் இதே உத்திகளைக்கையாண்டிருக்கிறார். இவை உலகமுழுவதும் உள்ள எல்லா இலக்கியப்படைப்புகளுக்கும் பொருந்தும் கருத்துகளாதலால் 'ஜி' யின் எழுச்சிமிகு கொடைகளுக்கே உரியவை என்று கூறிவிட முடியாது. ஆயின் மலையாள மொழி பொறுத்தவரையில் இவை புதிய உத்திகளாக அனைவரையும் ஈர்க்கும் செல்வாக்கு பெற்றதால் மிகவும் உயர்ந்த சிறப்பிடத்தைப் பெற்றுக்கொண்டன எனலாம்.

பல்வேறு வகையாகச் செழித்துக்கிளர்ந்த 'ஜி'யின் பாடல்களில் உள்ள அனுபவங்கள் விரிந்த பாங்கில் தரப்படுத்தத்தக்கன. ஒரு புல்லின் தோற்றம் முதல் புடைபரந்த அண்டங்கள் வரையிலும் ஆவியாகும் பனித்துளி முதல் பரவலாகக் கூறப்படும் கணியம் வரையிலும் சிறிய மணல் துகள் முதல் எண்ணிலா பால்வெளிகளைக் கொண்ட விரிவானம் வரையிலும், கண்ணிமைக்கும் கணப்பொழுது முதல் கணக்கில்லாத காலம் சுழன்று கொண்டிருக்கும் பேரண்டங்கள் வரையிலும், நொடிந்துபோன குழந்தையின் ஈன அழுகைக் குரல் முதல் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்ட முழக்கங்கள் வரையிலும் பாட்டெழுதும் புலவனின் உள்ளத்துக்கு இயல்பானது. புதுமையானது என்று தனியாக எதுவும் இல்லை. தாகத்தால் தவிப்பவனுக்கு எல்லாமும் கானலாகத் தெரியும் என்று அதோனாய்சு பாட்டின் புலவர் செல்லி கூறியிருப்பது போல எரியும் விண்மீனும் விட்டில் பூச்சியின் ஏக்கமும் புலவன் பார்வைக்கு கலப்புற்று ஒன்றாகிவிடும். மனித வாழ்வின் நிலைமையும் தனிமாந்தனின் துன்பங்களுமாக ஒருபுறம் துயரார்ந்த கோலமாகவும் மறுபுறம் மனித நேயமும் காதலின் பெருமையும் கலந்த சிறப்புக்கூறாகவும் காணப்படும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வாழ்க்கைநிலைகள் புலவனின் பார்வையில் ஒன்றுபட்டு இணைந்துவிடுகின்றன. இவருடைய பாடல்கள் ஒளிபொருந்திய எதிர்கால வாழ்க்கைக்கு இட்டுச்செல்லும் ஏணிப்படிகளாக அமைந்துள்ளன. நம்பிக்கையான பதிவேடுகளாக இலக்கிய உலகில் இடம்பெற்ற 'ஜி'யின் எழுச்சிமிகு இலக்கியங்களை வருங்காலத் தலைமுறையினர் என்றும் தோன்றாமல் கண்ணின் இமைபோல் காத்து வளர்ப்பார்கள் என்பது திண்ணமாகும்.

ஜி சங்கர குருப்பின்
நூற்பட்டியல்

கவிதைத்தொகுப்பு		வெளியிட்ட ஆண்டு
I. கவிதைகள்		
1.	சாகித்திய கவுத்துகம் - பகுதி - 1	1923
2.	சாகித்திய கவுத்துகம் - பகுதி - 2	1925
3.	சாகித்திய கவுத்துகம் - பகுதி - 3	1928
4.	சாகித்திய கவுத்துகம் - பகுதி - 4	1931
5.	சூரிய காந்தி	1933
6.	நவஅதிதி (புதிய விருந்தாளி)	1934
7.	பூஜா புஷ்பம் (பூசை மலர்)	1943
8.	செங்கதிருகள்	1945
9.	நிமிஷம்	1945
10.	முத்துகள்	1946
11.	வனகாயகன் (காட்டுப் பாடகன்)	1947
12.	இதழுகள்	1948
13.	ஓடக்குழல் (புல்லாங்குழல்)	1950
14.	பதிகன்டெ பாட்டு (வழிப்போக்கனின் பாட்டு)	1951
15.	அந்தர தாகம் (ஆன்ம வேட்கை)	1953
16.	வெள்ளிப் பறவகள் (வெள்ளிப் பறவைகள்)	1955
17.	விஸ்வ தர்சனம்	1960

கருவி நூல்கள்

1. சங்கரகுருப்பின் நூல்கள் (இணைப்பு - 1)

2. ஓர்மயுடெ ஓளங்களில் - மடலம் - 1 (ஜி. சங்கரகுருப்பு) (நினைவலைகளின் தொடர்பில்)

3. ஓர்மயுடெ ஓளங்களில் - மடலம் 2 (ஜி. சங்கரகுருப்பு)

4. 'ஜி' யுடெ காவ்ய ஜீவிதம் (ஜி. சங்கரகுருப்பின் வாழ்வும் படைப்புகளும் -டாக்டர் எம். லீலாவதி)

5. 'ஜி' யுடெ காவ்ய சாதன (கவிஞரின் 60-ஆம் ஆண்டு நிறைவின்போது வெளியிடப்பட்ட நினைவுமலர்)

6. சங்கரகுருப்பு விமரிசிக்கப்பெடுன்னு (சங்கர குருப்பைப் பற்றிய திறனாய்வு - டாக்டர் சுகுமார் அழிக்கோடு)

7. மலையாளக் கவித சாகித்திய சரித்திரம். (மலையாள இலக்கிய வரலாறு - டாக்டர் எம். லீலாவதி)

8. மகாகவி, ஜி. சங்கர குருப்பின் வாழ்வும் பணிகளும் (பாராட்டு மலர் - கேரளதர்ப்பன், புதுதில்லி 1966)

9. ஜி. சங்கர குருப்பின் தெரிந்தெடுத்த கவிதைகள் (அருள்தந்தை. டி.சி. சங்கரமேனன்)

10. ஓடக்குழலும் மற்ற கவிதைகளும் - (வி.வி. மேனன்)

11. மஹ்றபில் - ஸ்பிரிங் - 72 - மடலம் யுIII எண்.1 (ஆசியக் கல்வி மையம், மிச்சிகன் மாநிலப் பல்கலைக்கழகம்)

மற்ற நூல்கள்

II. உரைநடை - கட்டுரைத் தொகுப்புகள்

1. கத்யோபஹாரம் (உரைநடைக்கொடை) 1946
2. லேக்க மாலா (கட்டுரை மாலை) 1947
3. ராக்குயிலுகள் 1947
4. முத்தும் சிப்பியும் 1958
5. 'ஜி' யுடெ நோட்டுப்புக்கு 1967
6. 'ஜி' யுடெ கத்யலேக்கனங்கள் ('ஜி' யின் உரைநடைகள்) 1977

III. நாடக நூல்கள்

1. இருட்டினு முன்பு 1935
2. சந்திய 1942
3. மரிக்கனும் பிறக்கனும் பேடி (இறக்கவும் பிறக்கவும் அச்சம்)
4. மத்யம வியயோகம் (சமற்கிருத மொழிபெயர்ப்பு)
5. ஆகஸ்டு 15

IV. கதைகள்

1. ராதாமணி 1943
2. ராஜநந்தினி 1933
3. ஹரிச்சந்திரன் 1933

V. வாழ்க்கை வரலாறு

1. தாகூர்
2. ஹைதர் அலி (குழந்தைகளுக்கான சிறுதொகுப்பு)
3. திப்பு சுல்தான்

VI. இலக்கணமும் அணியிலக்கணமும்

1.	சாகித்திய பரிச்சயம்	1943
2.	பாஷா தீபிகா	1955
3.	பாஷா பிரவேசிகா	1932

VII. ஆங்கில மொழிபெயர்ப்புகள்

1.	ஓடக்குழலும் மற்ற கவிதைகளும் - வி.வி. மேனன்	1966
2.	தெரிந்தெடுத்த கவிதைகள் - டி.சி. சங்கரமேனன் (அணிந்துரை - உமாசங்கர் ஜோஷி)	1977
3.	மஹ்பில் (மடலம் ⅲ எண். 1, ஸ்பிரிங் 72 - மொழிபெயர்ப்பு - 27 கவிதைகள்	1972

VIII. உருசிய மொழியில் மொழிபெயர்ப்பு

1. காலை விண்மீன் (உத்ரேன்ய ஜ்வெஸ்தா) 35 பாடல்கள் - பேராசிரியர்கள் வெலிஷேவின் முன்னுரையுடன்.

18. பதேயம் (தெரிந்தெடுத்த கவிதைகள்) 1961

19. ஜீவனசங்கீதம் (என்றும் வாழும் இசை) 1964

20. மதுரம் சௌம்யம் தீப்தம் (இனிமை எழில் சுடரொளி)1966

21. சாந்திய ராகம் (மங்குல் மாலைப்பொழுது) 1971

22. தெரிந்தெடுத்த கவிதைகள் 1972

23. வெளிச்சத்தின்டெ தூதன் (கவிஞரின் மறைவுக்குபின் வெளிவந்த நூல்) 1979

நெடுங்கவிதை

1. மூன்னு அருவியும் ஒரு புழயும் (மூன்று அருவிகளும் ஓர் ஆறும்) 1963

2. ஸ்வாதந்தரோதயம் (விடுதலை உதயம்) 1947

மொழிபெயர்ப்புகள்

1. விலாச லஹரி (ரூபியத்தின் மொழிபெயர்ப்பு) 1932

2. மேசச்சாய (மேகசந்தேசத்தின் மொழிபெயர்ப்பு) 1943

3. ஏகோத்தரசதி (நூற்று ஒன்று - தாகூர் பாடல்களின் மொழி பெயர்ப்பு) 1961

குழந்தைப்பாடல்கள்

1. இளம் சுண்டுகள் (மெல்லுதடுகள்) 1954

2. ஓலப்பீப்பி (ஓலை ஊதாங்குழல்) 1968

3. காத்தே வா கடலே வா 1969

கேரள மாநிலத்தில் சுருக்கமாக 'ஜி' என்றே பெரிதும் அழைக்கப்படுவார். இவரது **ஓடக்குழல்** (புல்லாங்குழல்) என்னும் இனிய பாடல் தொகுதி, முதல் ஞானபீடத்தின் பரிசு பெற்ற பெருமைக்குரியது. மக்கள் கவிஞரான இந்தப் புகழ்பெற்ற மலையாளக் கவிஞரின் பாடல்களும் கோட்பாடுகளும் மாநில மொழி வரம்புகளையும் தடைகளையும் கடந்து இந்திய மக்களின் மனத்தைக் கவர்ந்தன. 'ஜி' ஒரு தெய்வீகப் பாவலர். அவருடைய ஆர்வமும் எண்ணச் சுவடுகளும் இந்த மண்ணில் ஆழப்பதிந்தன. தெய்வீக இன்பச்சுவைகள் இவர் பிற்காலத்தில் எழுதிய விசுவ தரிசனம் போன்ற பாடல்களில் வீறுகொண்டு பீறிட்டெழுந்தன. இது 1963-ஆம் ஆண்டில் அக்காதெமி பரிசுபெற்றது. நேருவுக்கு அரசியலில் கிடைத்த செல்வாக்கு 'ஜி'க்கு பாட்டுலகில் கிடைத்திருந்தது.

பேராசிரியை எம். லீலாவதி மலையாளத்தில் சிறந்த திறனாய்வாளர். பல்வேறு பாராட்டுகள் பெற்றவர். இவருடைய **கவிதாத்துவனி** சாகித்திய அக்காதெமியின் விருதுமட்டுமன்றி பல்வேறு பாராட்டுகளையும் பெற்ற நூல். திறனாய்வு, வாழ்க்கை வரலாறு, கட்டுரைகள், மொழி பெயர்ப்புகள் எனப்பல்வேறு வகைகளில் மலையாளமொழியில் பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருக்கிறார். இச்சிறிய நூலில் 'ஜி'யின் பணிகளை விவரித்துத் தக்கவாறு ஆய்ந்து மலையாளிகள் அல்லாத வாசகர்களின் பயன்பாட்டுக்காக சங்கர குருப்பின் இலக்கியக்கொடைகளை நன்கு மதிப்பிட்டிருக்கிறார்.

Mahakavi G. Sankara Kurup (Tamil) **Rs. 15**
ISBN 81-7201-646-8